




# தமிழரசு


செப்டம்பர் 16–30, 1998 ரூ.3











## நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

## இந்த இதழில்...


- இன உணர்வுப் பேரொளி – முதல்வர் கலைஞர் ............ 2
- ரூ.200 கோடியில் சுதந்திரப் பொன்விழாக் குடிநீர்த் திட்டம் ............ 4
- மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் ............ 6
- உலக இலக்கியத்தில் பங்கேற்க ஏதுவாய் ............ 9
- தூர் வாரும் பணிகள் ............ 12
- அறிவொளி இயக்கம் ............ 15
- குடும்ப அட்டை வழங்கும் பணி ............ 16
- சமூக நலத்துறையின் சீர்மிகு பணிகள் ............ 17
- நம்பிக்கையோடு பணிகளைத் தொடருங்கள் ............ 20
- வரலாற்றில் காஞ்சி ............ 23
- கால மாற்றம் ............ 24
- ஒரு உன்னதத் திட்டம் ............ 26
- புதுக்கோட்டையில் சமத்துவபுரம் ............ 29
- அரசு ஆணைகள் ............ 33
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் அரசின் ஆக்க பூர்வப் பணிகள் ............ 35
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் ............ 39
- பட்டு வளர்ச்சி ............ 42
- 'திராவிட நாடு' – கிழமை இதழ் ஆய்வுக் கட்டுரை ............ 45


*செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்*
*வானகமும் ஆற்றல் அரிது.*

*"வாராது வந்த மாமணி" என்பது போல், "செய்யாமற் செய்த உதவி" என்று புகழத்தக்க அரிய உதவி வழங்கப் பட்டால், அதற்கு இந்த வானமும் பூமியும் கூட ஈடாக மாட்டா.*

—**கலைஞரின்** *திருக்குறள் உரையிலிருந்து*


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2029
ஆவணி – புரட்டாசி
செப்டம்பர் 16–30, 1998
மலர்:30 இதழ்:6
விலை ரூ.3


**முதலாம் அட்டையில்...**

திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற காவலர்களுக்கு அண்ணா பதக்கம் வழங்கும் விழா.

**கடைசிப்பக்க அட்டையில்...**

புதுக்கோட்டையில் சமத்துவபுரம் திறப்பு விழா.

# இன உணர்வுப் பேரொளி!

## முதல்வர் கலைஞர்


"பயிர்போன்றார் உழவருக்குப் பால்போன்றார்
குழந்தைகட்குப் பசும்பால் கட்டித்
தயிர் போன்றார் பசித்தவர்க்குத் தாய்போன்றார்
ஏழையர்க்குத் தகுந்தவர்க்குச்
செயிர் தீர்ந்த தவம்போன்றார் செந்தமிழ்
நாட்டில் பிறந்த மக்கட்கெல்லாம்
உயிர் போன்றார்" – என்று
பாரதிதாசப் பாவேந்தன் பாடிச்சென்றான் அவரை !
"வீடுகட்டி அதற்குள்ளே வைக்கோலைத் திணிப்பதுவோ?
வீடுகட்டாமலே வைக்கோற்போர் போடலாமே
எனச் சொன்ன ஈ.வெ.ரா.நாத்திகரா?
இல்லை இல்லை!
அவர்,
இயற்கையின் புதல்வர்–இந்த மண்ணை மணந்த மணாளர்–
எதிர்காலத் தமிழகத்துப் பெருமைக்குத் தூதர்" என்று
அக்ரகாரத்து அதிசய மாமனிதர் வ.ரா. முன்பு
அழகாக வரைந்தார் ஒரு கட்டுரைதான்!
தங்கத்தின் உருக்கில் வந்த தனித்ததோர் ஒளியைப்போல
செங்கதிர் உதயமாகும் செவ்வானம் வெட்கியோடப்
பொங்கியே எழுந்தார் பெரியார், புதுமைக்காளைகள் கோடி
உறுதியாய்க் கூறி நின்றார் குருதிதான் பணயமென்று!
அங்கத்தில் பழுதென்றால் அறுத்தெறிய ஒப்புகின்றோம்,
உயிர்பிழைக்கப்
பங்கமுறு சாதிமத பேதங்களால் அல்லலுறும் – மனித
சங்கத்தின் நோய் களையத் திகைக்கின்றோம்
சரிதானா? எனக்கேட்டார்.

அந்தச்
சிங்கத்தின் குரல்கேட்டுச் சிறுநரிகள் ஊளையிட்ட
கதைதானே நடந்ததிங்கே!
வங்கத்துத் தாகூர் போல் தாடியுண்டு
பொங்குற்ற வேங்கைபோல் நிமிர்கின்ற பார்வை உண்டு.
செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு – வெண்
சங்கொத்த கண்களிலே விழியிரண்டும் கருவண்டு – அதில்
சாகும்வரை ஒளி உண்டு!

பம்பரமும் ஒய்வுபெறும் சுற்றியபின் – இவரோ
படுகிழமாய்ப் போனபின்னும் பம்பரமாய்ச் சுற்றிவந்தார்.
எரிமலையாய்ச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடிஒலியாய்
இனஉணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக்கட்டும்; கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்சுநகர் சாக்ரடீசாய்
ஏன் என்று கேட்பதிலே வைரநெஞ்ச வால்டேராய்
எம்தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார், இன்றைக்கோ
இறப்பின் மடியினிலே வீழ்ந்திட்டார்.

மதுவிலக்கு தேவை என்று மகாத்மா காந்தி சொன்னவுடன்
மதுக்கலயம் கட்டாமல் இருப்பதற்குத் தோட்டத்தில்
மண்டி நின்ற தென்னைகளை வெட்டிச் சாய்த்தார் –
வைக்கத்து வீரர் என்று யாரைச் சொன்னோம்?
"வை, கத்தி! தீண்டாமை கழுத்தில்" என்று
வரிப்புலியாய்க் களம்சென்று வாகைசூடி
வையத்து மக்கள் தந்த பட்டமன்றோ வைக்கம்வீரர்!
காங்கிரசுக் கட்சிக்கு மீகாமனாய்க்
கதர் இயக்க வெற்றிக்குத் தளபதியாய்க்
காந்தி வழி நின்றிட்ட கர்மவீரன்
கட்சிக்குள் போராடக் காலம் வந்து
காஞ்சிபுரம் மாநாட்டில் வெளிநடந்தார்.

வ.வே.சு.அய்யர் என்பார் வடிகட்டிய தேசபக்தர்
வகுப்புவாத உணர்வாலே வம்புக்கு அழைப்புத் தந்தார்.
சேரன்மாதேவி ஊரில் சிறந்ததொரு குருகுலத்தில்
ஒருகுலத்துக் கொருநீதி கடைப்பிடித்தால்
சகிக்குமா பெரியார் மனம்? சமருக்கு வில்வளைத்தார்;
சரித்திரம் படைக்கலுற்றார். அதன் விளைவாய்த்
தன்மான இயக்கத்தின் தந்தையாகத்
தமிழர் இனப்பாதுகாப்புத் தலைவராகப்
பெரியார் ஆனார் – புது
நெறியார் ஆனார்!



பிற்பட்டோர் நலனுக்கென்று நீதிக்கட்சி
பெரும்பணிகள் இயற்றிடவே முனைந்தபோதும் – அது
பித்தாபுரம் பனகல் என்று பிரபுக்கள் காலடியில்
வற்றாத செல்வந்தர் கைத்தடியில் இருந்ததாலே
அதை மாற்றி
மாளிகையில் இருந்தகட்சி மக்களிடை வருவதற்கு
மாமேதை அண்ணாவின் துணையுடனே வெற்றிகண்டார்
மந்தி கை மாலையென
இந்தி கைத் தமிழர், ஆக
வஞ்சகச் சூழ்ச்சிகள் வலையாக விரிந்தபோது
அஞ்சிடா நெஞ்சுகொண்டு அறுத்தவர் பெரியார்தானே?
அவர்,
பாதம் படாத பட்டி தொட்டி உண்டோ–அவர் பேர் கேட்டுக்
காதம் ஒடுகின்ற ஆத்திகரும் (அவர்) பேசக்கேட்டால், தமிழ்க்
கீதம் கேட்ட கிறுகிறுப்பில் மயங்கிப் போவார்.
அறிவு மழை பொழியும் எழில்
வழியும் – இருள்கழியும்
தெளிவுமிகு உரைகள் பல
ஒளிரும் திறன் மிளிரும் –
கடலின் மடை – அலையின் ஒலி – மலையின் முடி –
தழுவும் முகில் வழியும்!
அறிவு மழை பொழியும்!
ஆணவங்கள் அழியும்!
அடிமை முறை ஒழியும்!
அய்யாவின் பேச்சென்றால்
அதிரசம் தின்பதுபோல் கழகத்தவர்க்கு.
அணுகுண்டு வெடித்தது போல்
கயவர்கட்கு!
அவர் தலைமை ஏற்று நானும் அவருடனே
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தெட்டில்
ஆரூரில் மாணவனாய் இருந்தபோதே இணைந்துவிட்டேன்.

அதன்பிறகு புதுவையில் நான் தாக்குண்டபோது
அய்யாவின் கையாலே மருந்திட்டார், என் காயத்திற்கு.
குடியரசு அலுவலகக் குருகுலத்தில்
கொள்கை வழிப்பாடங்கள் பயின்றகாலை – நான்
தமிழரசுத் தலைவனாக வருவேன் என்றும், எனைவளர்த்த
தந்தைக்கு அரசு மரியாதையுடன்
இறுதி வணக்கம் செய்வேன் என்றும்,
எண்ணியும் பார்த்ததில்லை.

"பாராட்டிப் போற்றிவந்த பழமை லோகம்
ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்!
ஈவெரா என்ற வார்த்தை இந்நாட்டு வஞ்சகத்தின்
அடிபீடம் ஆட்டுகின்ற சூறாவளியாம் – அவர்
வெண்தாடி அசைந்தால் போதும்,
கண்சாடை தெரிந்தால் போதும் –
கறுப்புடை தரித்தோர் உண்டு – கொடுமையை
நறுக்கியே திரும்பும் வாட்கள்"
ஈரோட்டுக் குருகுலத்தில் நான் இயற்றியது இப்பாடல்;
இன்றைக்கும் நினைக்கின்றேன் – பெரியார்
இளவயதில் மறையவில்லை
நிறைவயது வாழ்ந்துவிட்டே ஓய்வு கொண்டார் எனினும்,
தாஜ்மகால் திடுமெனத் தரைக்குள்ளே போய்விட்டால்
அதைக்கட்டி, ஆண்டு பல ஆயிற்றே என்று
ஆறுதல்தான் பெறுவோமா?
தஞ்சைக் கோபுரம் சாய்ந்துவிட்டால்; அதற்கு
வயது அதிகமென்று சொல்லித்
தாங்குதல்தான் எளிதாமோ? இவரோ,
தஞ்சைக் கோபுரம்போல் உயர்ந்தவர் –
தாஜ்மகால் போல் சரிதம் படைத்தவர் –
அவர் வாழ்வார் வாழ்வார் என்று வாழ்த்துகின்றேன்.
வணங்குகின்றேன்!

# ரூ.200 கோடியில் சுதந்திரப் பொன்விழாக் குடிநீர்த் திட்டம்!

## கலைஞர் அறிவிப்பு

"1978 -ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியம் அமைக்கப்பட்டது. சுமார் இருபதாண்டு காலத்தில் - 96-ஆம் ஆண்டு வரையிலே இந்த வாரியத்திற்கான மொத்தச் செலவு 411 கோடி ரூபாய். 96-ல் இந்த அரசு அமைக்கப்பட்ட பிறகு, 28 மாதங்களில், இதற்காக அனுமதிக்கப்பட்ட தொகை 611 கோடி ரூபாய். இருபதாண்டு காலத்தில் சுமார் 400 கோடி ரூபாயும், 2 ஆண்டு காலத்தில் 600 கோடி ரூபாயும் செலவுகள் இந்த வாரியத்திற்காகச் செய்யப் பட்டிருக்கிறதென்றால், அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும் என்பதிலும் - அடிப்படைத் தேவைகளிலும் - அதிலே முக்கியமாக முதல் இடத்தில் இருக்கக்கூடிய பாதுகாக்கப்பட்ட குடிநீரை மக்களுக்குத் தரவேண்டும் என்பதிலும் இந்த அரசு பொறுப்பேற்றபோது அறிவித்ததற்கிணங்க தன்னு டைய க்டமைகளைச் செய்து வருகிறது என்பதற்கு இவைகள் எல்லாம் எடுத்துக்காட்டுகளாகும்.

இதைத் தொடர்ந்து, வருகின்ற ஆண்டுகளில் 1999-2000-ஆம் ஆண்டில் 458 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 2000-2001-ஆம் ஆண்டில் 504 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 2002-2003-ஆம் ஆண்டில் 301 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் இந்தப் பணிகளை விரிவுபடுத்தவும் திட்டமிட்டிருக்கிறோம்.

இந்தப் பணிகள் நிறைவேற்றப்படுவதன் மூலமாகச் சராசரி நாள் ஒன்றுக்குச் சென்னை மாநகரத்தில் ஒருவருக்கு 1999-ஆம் ஆண்டில் 110 லிட்டர் வீதம் குடிநீரை வழங்க இயலும். 2002-ஆம் ஆண்டில் 140 லிட்டர் வீதம் குடிநீரை வழங்க இயலும்.

இதே நேரத்தில் நாம் கிராமங்களையும் எண்ணிப் பார்க்கத் தவறவில்லை. சென்னை மாநகரத்தில் 100 லிட்டருக்கு மேல் குடிநீரைப் பெறுகின்ற மக்கள் வாழ்கின்றார்கள் என்கிற போது, அந்த அளவிற்கு இல்லாவிட்டாலும், அதிலே முக்கால் பகுதி அளவிற்காவது தமிழ்நாட்டில் உள்ள கிராம மக்கள் அந்தப் பயனைப் பெறவேண்டுமென்பதற்கான திட்டங்களையும் இந்த அரசு தற்போது வகுத்து, படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.

**சென்னையில் – வள்ளுவர் கோட்டம் அருகே 24–9–98 அன்று நடைபெற்ற சென்னைப் பெருநகர் குடிநீர்த்திட்டத் தொடக்கவிழா உரையிலிருந்து.**

இன்றைக்குக் காலையிலிருந்து நானும், உள்ளாட்சித் துறை அமைச்சர் தம்பி கோ.சி.மணியும் மற்றும் செயலாளர்களும், அதிகாரிகளும் கலந்து பேசி தமிழகத்திலே கிராமப்புறங்களிலே இன்றைக்கு 90 லிட்டர் அளவிற்கு குடிநீர் கிடைக்கின்ற பகுதிகள் எத்தனை சதவிகிதம், அந்த அளவிற்குக் கிடைக்காமல் அதற்குக் குறைவாகக் கிடைக்கின்ற பகுதிகள் எத்தனைச் சதவிகிதம், மேலும் 40 லிட்டருக்கும் குறைவாகக் கிடைக்கின்ற பகுதிகள் எவ்வளவு என்பதையெல்லாம் கணக்கிட்டு, படிப்படியாக, முதற்கட்டம், இரண்டாவது கட்டம், மூன்றாவது கட்டம் என்று வகுத்து விரைவில் இந்தக் குடிநீர் பற்றாக்குறையை நீக்குவதற்குத் திட்டம் வகுத்திருக்கிறோம்.



சுதந்திரப் பொன்விழாவையொட்டியும் இன்றைக்கு நடத்தப்படுகின்ற இந்த ஆட்சியின் ஆளுங்கட்சியான கழகத்தின் பொன்விழாவையொட்டியும் பொன்விழா திட்டம் என்ற ஒன்றை மனதிலே எண்ணி, அதற்கானதொரு நிதியை ஒதுக்குவதற்காக நிதித்துறைச் செயலாளரிடமும் மற்றும் நகர்ப்புறத்துறைச் செயலாளரிடத்திலும் உள்ளாட்சித்துறை அமைச்சரிடத்திலும் எடுத்துக் கூறியிருக்கிறேன். அதற்கு, வருகின்ற ஆண்டிலே அரசின் சார்பில் ஐம்பது கோடி ரூபாயும் மற்ற நிதி நிறுவனங்களின் சார்பில் 150 கோடி ரூபாயும் இணைத்து முதற்கட்டமாக 200 கோடி ரூபாய் செலவழித்து நகரங்களுக்கும், பேரூராட்சிகளுக்கும் பொன்விழாத் திட்டம் என்கிற பெயரால் - கிராமப்புற மக்களுக்குத் தரப்படுகின்ற அடிப்படை வசதிகளைப்போல - தருவதற்கு - எத்தனை நகரங்களிலே 40 லிட்டருக்குக் குறைவாகத் தண்ணீர் கிடைக்கிறது, எத்தனை நகரங்களில் 60 லிட்டருக்குக் குறைவாகத் தண்ணீர் கிடைக்கிறது என்பதையெல்லாம் கணக்கிட்டுச் செயல்படுத்த விருக்கிறோம்.

இன்றைக்குக் கிராமப்புறங்களில் ஓரளவு இந்த அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்துவருகின்ற இந்த ஆட்சி கிராமப்புறங்களுக்கும், மாநகரங்களுக்கும் இடையேயுள்ள நகரங்களுக்கும், பேரூராட்சிகளுக்கும் இந்தப் பயனைத் தருகின்ற வகையில் பொன்விழாத் திட்டம் அறிவிக்கப்பட்டு - அந்தப் பகுதிகளுக்கெல்லாம் - எந்தெந்த நகரங்களுக்கு என்னென்ன மேம்பாடுகள் தேவை என்பதை எண்ணிப் பார்த்துச் செயல்படவிருக்கிறோம். அடுத்து வருகின்ற மாதங்களில் அது அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்படும் என்பதை இந்த நல்ல விழாவிலே தெரிவித்துக் கொள்கிறேன்".

# கொத்தடிமை மீட்பு



"ஏழையென்றும் அடிமையென்றும்
எவனுமில்லை ஜாதியில்...."

— என்று பாடினார் மகாகவி பாரதியார்.

ஆனால் இங்கொருவர், அங்கொருவர் அப்படிப்பட்ட வாழ்வில் சுகம் பெறுபவர்களாகவோ, அல்லது சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பது என்றால் என்னவென்றே அறியாதவர்களாகவோ இன்றும் வயிறு வளர்த்து வருகிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

அரசு அவர்களை விடுவித்து நல்வாழ்வளிக்கத் தயாராக இருக்கிறது. எனினும், அவர்களே முன்வந்து தங்களை அடையாளம் காட்டிக் கொள்ளாதவரை யார்தான் என்ன செய்ய முடியும்?

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஒழலூரில், கொத்தடிமைகளாக இருந்து வந்த இருபது பேரை அடையாளம் கண்டுபிடித்து மாவட்ட ஆட்சித்தலைவரும், மாவட்டத் துணை ஆட்சியரும் விடுவித்திருக்கிறார்கள். கல்லுடைக்கும் தொழில் செய்யும் அவர்களை நாம் நேரில் போய்ப் பார்த்தோம். அவர்களுக்கெல்லாம் ரத்தினம்மா என்றோர் தலைவியாம்; அவரைத் தேடினோம் கிடைக்கவில்லை.

சின்னமுத்து, லட்சுமி, குழந்தைக் கவுண்டர், அமாவாசை, கிருஷ்ணம்மா என்ற பெயர்களில் கிடைத்த சிலரிடம் விசாரித்தோம்.

"எத்தனை வருஷமா நீங்கள்ளாம் கொத்தடிமையா இருந்தீங்க?"

"பத்து வருஷமாங்க!"

"உங்களுக்கெல்லாம் சொந்த ஊரு?"

"சேலமுங்க..."

"சரி, அப்ப எவ்வளவு ஒங்க சம்பாத்தியம் இருந்தது?..."

"சம்பாத்தியமாவது மண்ணாவதுங்க. அப்பப்ப வயத்துக்கு எதுனா கிடைக்கும்; காசு பணமெல்லாம்... அவங்களா பார்த்துக் கொடுத்தாதானுங்க உண்டு.

"யாருகிட்ட அப்படி அடிமையா இருந்தீங்க?"

"சுந்தரம்னு பேருங்க!... அட, கெட்ட சொப்பனம் மாதிரி அதை உடுங்க. இப்ப நல்லாருக்கம்!"

"யாருவந்து ஒங்கௌ விடுவிச்சா?"

"கலெக்டரையாதானுங்க!"

"ஆமா, அவர்கிட்ட நீங்கள்ளாம் வேற எதுனா வேலை கேட்கலியா?"

"தெரிஞ்சாதானுங்களெ கேட்க!" என்று சொல்லிச் சிரித்தார் பெரியவர் குழந்தைக் கவுண்டர்.

"எங்களுக்கெல்லாம் கல் உடைக்கிற இந்த வேலை தானுங்க பழக்கம். அதனால... இங்கேயே நாங்க கல் உடைச்சிப் பொழசிக்கிறோம்னோம், சரின்னுட்டு... இதுலயே வரவு செலவெல்லாம் கவனிச்சிட்டு நல்லபடியா வாழ்ந்துட முடியுமான்னாங்க — கட்டாயம் முடியும்னோம். அப்ப சரின்னிட்டு..." என்று அமாவாசை என்ற பெண்மணி பேசிக்கொண்டே போனதற்கு — "எல்லா உரிமையும் எழுதியே குடுத்துட்டாங்க ஐயா!" என்று கூறி முற்றுப்புள்ளி வைத்தார் சின்னமுத்து என்ற இளைஞர்.



கொத்தடிமைத்தனத்திலிருந்து விடுபட்டிருந்த அவர்கள் அனைவரும் புதிய தெம்போடு காணப்பட்டனர்; அவர்களில் எவர் முகத்திலும் நம்மால் வாட்டத்தைக் காண முடியவில்லை. நம்பிக்கை ரேகைகளைக் காணமுடிந்தது.

— முத்துசாமி.
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
- காஞ்சிபுரம்

# மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்


ஆண்டுதோறும் செப்டம்பர்த் திங்கள் முதல் வாரம் ஊட்டச்சத்து வாரமாக உலக அளவில் கொண்டாடப்படுகின்றது. கடந்த 1982 முதல் தேசிய ஊட்டச்சத்து வாரத்தினை இந்திய அரசு கொண்டாடுகிறது. இருப்பினும் 1996ஆம் ஆண்டிலிருந்துதான் ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட சிறந்த கருத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு தேசிய ஊட்டச்சத்து வாரம்' கொண்டாடப்படுகிறது.

இதன்படி 1996ஆம் ஆண்டு 'குழந்தை வளர்ப்பு பழக்கங்கள்' என்ற கருத்தினை மையமாகவும், 1997ஆம் ஆண்டு ஊட்டச்சத்து மற்றும் சுற்றுப்புறச் சுகாதாரம்' என்ற கருத்தினை மையமாகவும், இவ்வாண்டு (1998) 'ஊட்டச்சத்து நிலையை உயர்த்துவதில் குடும்பம் மற்றும் சமுதாயத்தின் பங்கு' என்ற கருத்தினை மையமாகவும் வைத்து ஊட்டச்சத்து வாரவிழா கொண்டாடப்பட்டது.

இதன் நோக்கமானது குடும்ப மற்றும் சமுதாயத்தினிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திப் பெண்கள், குழந்தை நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துவதில் அவர்களின் ஈடுபாட்டின் பங்கு மற்றும் கடமை என்ன என்பதை உணர்த்துவதேயாகும்.

ஊட்டச்சத்துப் பற்றாக்குறை என்பது பலவிதமான காரணங்களையும் பலவிதமான தோற்றங்களையும் உள்ளடக்கிய நோயாகும். ஊட்டச்சத்துக் குறைபட்டால் உடல் வளர்ச்சியும் உள்ள வளர்ச்சியும் தடைப்படுகிறது. அதன் காரணமாகக் குழந்தையின் மூளை வளர்ச்சி - அதாவது அறிவு வளர்ச்சி முழுமை அடைவதில்லை.

போதிய வளர்ச்சி இல்லாமை மற்றும் வளர்ச்சி தடைபடுதல் போன்ற பிரச்சினைகளால், கர்ப்பக் காலத்திலோ பிரசவத்தின் போதோ எப்படிப்பட்ட ஆபத்துக்கள் ஏற்படுகிறது என்பதை பல ஆண்டு அறிந்து வருகிறோம். இருப்பினும் அண்மையில்தான் ஊட்டச்சத்துப் பற்றாக்குறை - குறிப்பாக அயோடின் மற்றும் இரும்புச்சத்துக் குறைபாடு குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் திறமைகளைப் பாதிக்கக்கூடிய சூழ்நிலையை



ஏற்படுத்துகிறது என்பது உலகளவில் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அறிவியல்பூர்வமான கண்டுபிடிப்பு, தாய்சேய் நல முன்னேற்றத்தில் நமக்குள்ள கவலைகளை மேலும் அதிகரிக்கச் செய்தது. ஊட்டச்சத்துப் பற்றாக்குறைப் பிரச்சனையைப் போக்குவதில் தமிழ்நாடு விழிப்புணர்வுடன் செயல்பட்டு வருகிறது. இதன் காரணமாக சத்துணவுத் திட்டமானது அறிமுகப்

- எஸ்.சூர்யன், இ.ஆ.ப.,
திட்ட அலுவலர்,
தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டசத்துணவுத் திட்டம்

படுத்தப்பட்டு 3 முதல் 5 வயதுடைய குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

இந்தச் சத்துணவுத் திட்டத்தின் பயனானது சமூகம் சார்ந்தவையாக அமைந்ததே தவிர, அறிவுவளர்ச்சிக்காக இயங்குவதாக அமையவில்லை. இந்தப் பிரச்சனைகளைப் போக்கும்விதமாகத் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டமானது கடந்த 1980ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தைச் சார்ந்த கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாகத் தமிழ்நாட்டில் உள்ள 318 ஒன்றியங் களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் -1, 1980 முதல் 1989 வரையில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்-2, 1991 முதல் 1997 வரையிலும் சுமார் 17 ஆண்டு செயல்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டமானது கடந்த டிசம்பர் மாதம் 1997ஆம் ஆண்டு முடிவுற்றது. இதன் பயன்களைக் கண்டறிய தேசிய ஊட்டச்சத்து நிறுவனம், ஐதராபாத், ஒரு ஆய்வை மேற்கொண்டது. இந்த ஆய்வு அறிக்கையின் மூலம் தெரியவருவது என்னவென்றால், 6-36 மாத குழந்தைகளிடையே காணப்பட்ட 16 சதவிகிதம் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு 3 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மிதமான மற்றும் குறைவான ஊட்டச்சத்துப் பற்றாக்குறைப் பிரச்சனைகள் இன்னும் தீர்க்கப்படவேண்டியுள்ளது. இத்திட்டம் செயல்படும் ஒவ்வொரு மாவட்டத்திலும் வெவ்வேறு விதமான பிரச்சினைகள் உள்ளது. இதனால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பிரச்சினைகளைப் போக்குவதற்குத் தனித்தனியான அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதனை இது சுட்டிக்காட்டுகிறது.

இத்திட்டத்தின் மூலம் குழந்தை வளர்ப்பில் ஆண், பெண் என்ற பாகுபாடு முற்றிலும் ஒழிக்கப்படவேண்டும் என்று பல்வேறு விதமான கல்வி முனைப்பு இயக்கத்தின் மூலம் மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டது, இருப்பினும் தமிழ்நாட்டில் சில இடங்களில் பெண் சிசுவதை இன்னும் தொடர்கின்றது என்பது மிகவும் வேதனையளிக்கின்றது.

இத்திட்டமானது சுகாதாரத்துறையினருடன் ஒருங்கிணைந்து கடந்த 17 ஆண்டுகளில் சிசுமரண விகிதம் 1000க்கு 103 ஆக இருந்ததை 1000க்கு 60 ஆகக் குறைக்க உதவிபுரிந்தது. தமிழ்நாட்டில் தடுப்பூசித் திட்டம் மிகவும் வெற்றிகரமாகச் செயல்பட்டுவருகிறது. இதன்மூலம் இளம்பிள்ளைவாத நோய் ஒரு இலட்சத்திற்கு 0.45 எனவும் தொண்டையடைப்பான் நோய் ஒரு இலட்சத்திற்கு 0-69 என்ற விகிதமும் குறைக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் மூலம் 24 மாவட்டங்களைச் சார்ந்த 19,500 கிராமங்களில் திட்டம் செயல்படுவதற்கான உள்ளமைப்புச் செய்யப் பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்து வதற்கு உதவிபுரியும் வகையில் கிராமங்களைச்சார்ந்த 60,000 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. 0-36 மாதக்குழந்தைகள் சுமார் 13.5 இலட்சமும் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் சுமார் 7 இலட்சம் பேர்களும் இத்திட்டத்தில் தொடர்ந்து பயனடைந்து வருகின்றனர்.

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் இவ்வாண்டு அக்டோபர் திங்கள் முதல் ஆரம்பிக்கப் படவுள்ள 5 மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது உலக வங்கியின் நிதிஉதவியுடன் செயல்படுத்தப்படும்.

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் – கல்விபெறும் "கற்றலின் இனிமை" திட்டச் சிறுவர் சிறுமியர்.*



## மருத்துவத் துளிகள்

- கால் ஆணியின் மீது பப்பாளிப் பாலோ, எருக்கம் பாலோ பச்சரிசிப் பாலோ தடவிவரின் ஆணி உதிர்ந்து விடும்.
- தக்காளி சூப், சுவை அதிகப்பட சூப்பில் ஒருசில கேரட்டுகளை வெட்டிப் போட்டால் சூப் சுவையாக இருக்கும்.
- மூன்று அல்லது நான்கு பறித்த பாகற்காய்களை கனை அறுத்து அதை ஒரு கப் மோரில் கலக்கி அருந்தி வர மூலம் கட்டுப்படும்.
- இட்டிலி அவிப்பதற்கு முன் மாவில் சிலதுளி நல்லெண்ணெய் சேர்த்து கலக்கி விட்டுப் பின்பு போட்டால் இட்டிலி பூப்போல இருக்கும்.
- சுளுக்கு ஏற்பட்டால் வெள்ளைப் பூண்டை உப்புச் சேர்த்து இடித்து இந்தச் சாற்றைத் தடவினால் குணமாகும்.
- நன்னாரி வேரை இடித்து அரைத்துக் கொட்டைப்பாக்கு அளவு எடுத்துக் கொண்டு பசும்பாலில் கலந்து சாப்பிட்டுவர விரைவில் தலைமுடி நரைக்காது.

நன்றி : **சாந்திவளாகம்**

---

இப்புதிய திட்டத்தில், தமிழ்நாட்டைச் சேர்த்ததன் காரணம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தின் மூலம் அடைந்த பயன்கள் மற்றும் அனுபவங்களை மற்ற மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்வதன் வாயிலாக அம்மாநிலங்களில் திட்டச் செயல்பாட்டினை முன்னேற்ற உதவுவதேயாகும்.

இப்புதிய திட்டத்தின் மூலம்3 முக்கியக் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். அவை -

- ☐ குழந்தை வளர்ப்புப் பற்றிய பழக்கவழக்கங்கள்
- ☐ ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் சுற்றுப்புறச் சுகாதாரம்
- ☐ ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதில் குடும்பம் மற்றும் சமுதாயத்தின் பங்கு

நம் நாட்டில் உணவு பற்றாக்குறை என்பதே அரிது. அதிலும்குறிப்பாகத்தமிழ்நாட்டில்உணவு பற்றாக்குறை என்பது இல்லை என்பது ஆசீர்வதிக்கப்பட்ட ஒன்றாகும். இந்நிலையிலும் உணவு அளிப்பதில் ஆண், பெண் மற்றும் குழந்தைகள் என்று சரிசமமில்லாத பாகுபாட்டைக் காண முடிகிறது. இந்தப் பாகுபாடு, கலாச்சாரம் நம்பிக்கை மற்றும் பழக்கவழக்கங்கள் உணவளிப்பதில் இந்த முரண்பாடான நிலை ஏற்படுத்துகிறது. அதாவது தேசிய அளவில் அல்லது மாநில அளவில் நிறைவான உணவுப் பொருட்களை அடைந்திருப்பினும் குடும்ப அளவில் முரண்பாடான உணவு வழங்கும் நிலையை ஏற்படுத்துகிறது. இப்புதிய திட்டத்தின் மூலம் பெண்களின் நிலையை மேம்படுத்தி, அதன்மூலம் கர்ப்பம் தரித்தல், குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை, வயிற்றுப்போக்குத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு, குழந்தை நலமாக மற்றும் நோய்வாய்ப் பட்டிருக்கும்போது அளிக்கவேண்டிய உணவுமுறைகள் போன்ற பல பகுதிகளை உள்ளடக்கிய குழந்தை வளர்ப்புப் பற்றிய பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் பெண்கள் தாங்களாகவே முடிவெடுக்கும் நிலைக்குக் கொண்டுவருவதேயாகும்.

மேலும் இப்புதிய திட்டத்தின் மூலம் குழந்தையின் நலமானவளர்ச்சிமற்றும்முன்னேற்றத்தினைமையத்தின் மூலம் செய்வதற்குப் பதிலாக வீட்டிலேயே தாங்களாகவே வளர்ச்சியினைக் கண்காணிக்கும் விதமாக வழிமுறைகள் அமைக்கப்பட்டுள்ளது. ஊட்டச்சத்து உணவு, வீடு, பொழுதுபோக்கு மற்றும் மருத்துவ வசதிகள் போன்றவை குழந்தையின் அடிப்படை உரிமை என்பதைக் குடும்பம் மற்றும் சமுதாயத்திற்கு எடுத்துரைக்க வேண்டும். ஒரு தாயானவள் ஏழையாகவோ, நலம் குன்றியவளாகவோ அல்லது அவளுக்கு எதைப்பற்றியும் தெரியாத நிலையில் தரம்மிக்ககுழந்தை வளர்ப்புமுறையை அவளால்பின்பற்ற முடியாது. ஆகவே ஒரு குழந்தையின் நலமான வளர்ச்சியைத் தாய் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால், அந்தத் தாயானவள் முதலில் தன்னுடைய நலமான வளர்ச்சியைத் தெரிந்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

கர்ப்பகாலத்தில் ஏற்படும் ஊட்டச்சத்துப் பற்றாக்குறை மற்றும் இரத்தசோகையினால் குறைந்த எடையுடன் குழந்தை பிறக்க நேரிடுகிறது. இது பின் குழந்தையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தினைப் பாதிக்கின்றது. ஆகையினால் இப்புதிய திட்டத்தின் மூலம் கர்ப்பிணித் தாய்மார்களின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையினில் மட்டும் கவனம் செலுத்தாமல் வளரும் இளம் மகளிரின் ஊட்டச்சத்து நிலையிலும் கவனம் செலுத்தப்படும். இதற்காக வளரும் இளம் மகளிர்களுக்காக இரும்புச் சத்து மாத்திரைகள் வயிற்றுப்பூச்சி நீக்க மருந்து போன்றவை கொடுப்பதோடு சுற்றுப்புறச் சுகாதாரம் ஊட்டச்சத்துத் தேவைகள், சுகாதாரம் போன்றவற்றைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை அவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதோடு ஒவ்வொரு மாதமும் அவர்கள் மையத்திற்கு வந்து அவர்களாகவே எடை எடுத்துப்பார்த்து அவர்களின் வளர்ச்சியினைக் கண்காணித்துக்கொள்ளும் பழக்கத்தினை அவர்கள் மனதில் ஆழப் பதிய வைப்பதாகும்.

ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, ஊட்டச்சத்துப் பற்றாக்குறையானது குழந்தையின் உடல் மற்றும் அறிவு வளர்ச்சியினை மிகவும் பாதிக்கின்றது. ஆகவே சரியான குழந்தைப் பருவ வளர்ச்சியை முன்னேற்றம் காணச் செய்வதுமற்றும்முன்பருவக் கல்வியளிப்பது போன்றவை வீட்டிலும் மற்றும் மையத்திலும் அளிக்கும் விதமாகத் திட்டமிடப்பட்டுள்ளது.



புதிதாக உதயமாகியுள்ள மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் தமிழக மக்களின் வாழ்வில் ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கி - குறிப்பாக இளமகளிர்கள் மற்றும் குழந்தைகளும் மேம்பாடு அடையவும் வகை செய்யும் என்பது திண்ணமே.

# உலக இலக்கியத்தில் பங்கேற்க ஏதுவாய்...

- முனைவர் க.முத்தையா
உதவி இயக்குநர்,
தமிழ் வளர்ச்சித்துறை,
தருமபுரி மாவட்டம்

"இன்னொரு தொல்காப்பியரின் வருகைக்காகத் தமிழ் இலக்கியம் இன்னும் எத்தனைக் காலம் தவம் இருக்க வேண்டுமோ?"

கா.நா.சு.வின் மேற்குறித்த கூற்று தொல்காப்பியர் தமிழர் என்பதால் மகிழ்வும் தற்காலத் தமிழ் இலக்கியத்தின் போக்கை நினைவுகூர்கையில் அவலமும் ஒருசேர நுவல்கிறது. தொல்காப்பியருக்குப் பிறகு இலக்கியத்தைக் கோட்பாட்டு அடிப்படையில் சிந்திக்கும் போக்கு இல்லாமல் போனது தமிழ் இலக்கியத்தின் தீவினைப் பயன் என்றே கருதத் தோன்றுகிறது.



தற்காலத் தமிழ்ப்படைப்பாளர்களுள் மூச்சுக்கு முந்நூறு பாட்டு எழுதும் அபாரத் திறமை படைத்தவர்களுக்குப் பஞ்சமில்லை. அதேபோல் நாடகம், சிறுகதை, நாவல் ஆகியன நாள்தோறும் புற்றீசல் போல் பெருகிவருவதற்கும் குறைவில்லை, என்றாலும் உலக இலக்கியத்தில் தமிழின் குரல் ஒலிக்கப்படவேயில்லையே? மகாகவிகள் உலவிய இந்தத் தமிழ் மண்ணில் ஒருவருக்குக் கூட நோபல் பரிசு கிடைக்கப் பெறவில்லையே? காரணம் என்ன? சமகால இலக்கிய ஆராய்ச்சியில் இதற்குரிய காரணங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவைகளாகும்.

இலக்கிய உலகில், 'உலகத்தரம்' அல்லது 'உலக இலக்கியம்' என்று கூறப்படுபவை எவை என்பது குறித்து இருநூறு ஆண்டுக்கால அளவில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன. கதே முதற்கொண்டு கா.நா.சு.வரை இவ்விவாதக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். உலக இலக்கியங்கள் என்பவை உலகில் தோன்றிய அனைத்து இலக்கியங்களையும் குறிக்கும் என்றாலும் தனிப்பட்ட இலக்கியங்களிடையே காணப்படும் வேறுபாடுகள் நீங்கிய இலக்கியத் தொகுப்புக்களைக் குறிப்பதாகும். 'ஆல்பர்ட் ஜெரால்டு' இதற்கு 'அனைவராலும் பொதுவாக அனுபவிக்கப்படும் நூல் தொகுதிகளை இது சுட்டும்' என்று உலக இலக்கிய வரையறுப்புக்கு முத்தாய்ப்பு வைக்கிறார்.

### மொழிபெயர்ப்பு முயற்சிகள்

தற்காலத் தமிழிலக்கியப் படைப்புக்கள் உலகத் தரமற்றவை என்ற கருத்து பொதுநிலையில் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தபோதிலும், ஒரே வழி சில படைப்புக்கள் பொதுவாக அனைவராலும் அனுபவிக்கப்படும் தன்மையினவாகவும் நாடு, இனம், மொழி, எல்லை இவைகளைக் கடந்த நிலையில் மனித இனப் பொதுப்பண்பு உடையனவாகவும் இருப்பதை உலக இலக்கியப் போக்கு உணர்ந்தவர் தெளிகுவர். க.நா.சு.தம்முடைய 'உலக இலக்கியம்' என்னும் நூலில் உலகத் தரமுடைய தமிழ் இலக்கியங்களைப் பட்டியல் படுத்தியுள்ளார். அத்தகைய இலக்கியங்கள் கூட உலகத் தன்மையைப் பெறவில்லையே? காரணம் என்ன? ஓர் இலக்கியத்திற்கு உலகத்தரம் தருபவர் யார்? என்ற வினாவிற்கான விடையில்தான் முன் வினாவிற்குமான விடையும் உள்ளது.



'உலக இலக்கியம் என்பது அனைத்து மனித இனமும் நுகர்வதாக இருக்க வேண்டும் என்றாலும், நடைமுறையில் மேலைநாட்டு நாகரீகக் குழுவினர் தம்முள் பொதுவாக நுகரும் நூல் பகுதிகளையே இது குறிக்கிறது' என்ற உலக இலக்கிய விமர்சகர் ஒருவரின் விளக்கம் யாரால் உலகத்தரம் தரப்படுகிறது என்பதை அறுதியிட்டுக் கூறுகிறது.

இப்பொழுது, தரத்தை முடிவு செய்யும் மேற்குறித்த குழுவினரின் பார்வைக்குத் தமிழ் இலக்கியம் தென்பட்டுள்ளதா? என்ற வினா வினை எழுப்பினால் 'இல்லை' என்ற பதில் எளிதாக முன்வந்து நிற்கும். நம் படைப்புக்கள் தீர்ப்புக்குழுவினரைச் சென்று அடையவில்லை என்பதுதான் முதற்குறை. எனவேதான் , பாரதி கூட 'நமக்குள்ளே பழங்கதைகள் பேசும் பழக்கத்தை விடுத்து பிறர்க்கு உணர்த்தும் பண்பு வளர வேண்டும் என்று சொன்னான். இதற்கான நம்முயற்சிகளைச் சீர்தூக்கிப் பார்க்கும்பொழுது நம்முடைய அடைவுகள் மிகச் சிலவாகத்தான் இருக்கின்றன. ஒரே வழித் திருக்குறளும் திருவாசகமும் மேலை அரங்குகளில் ஒலிக்கப் படுவதற்கு உலகமொழிகளில் அவை பரவலாக்கப்பட்டதே தலையாய காரணமாகும். எனவே, இன்றைய தரமான தமிழ்ப் படைப்புக்கள் உலக அரங்கில் இடம் பெறாமைக்கு உலக மொழிகளில் அவற்றை மொழி பெயர்ப்புச் செய்யாதிருப்பதே முக்கியக் காரணம். இதற்கான வழிவகைகள் செய்யப்படுவது முதற் கட்டப்பணியாகும்.

### ஒப்பீட்டு முயற்சிகள்

"ஒப்பிலக்கியம் இறுதியில் உலக இலக்கியக் கோட்பாட்டிற்கு இட்டுச்செல்கிறது" என்கிறார் தெயின். தமிழும் தமிழ் இலக்கியமும் சிறந்தன என்று நமக்குள் சொல்வதை விட்டுவிட்டு உலகுக்கு உணர்த்தும் பண்பு வளர வேண்டும். தமிழையும் தமிழ்ப் படைப்புக்களையும் உலகத்தரத்திற்குக் கொண்டு

## வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள பட்டம்- பட்டயம் பெற்றுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பத்தில் 18 வயது நிரம்பிய அனைவருக்கும் தொழிற்கருவிகள் இலவசமாக வழங்கிடும் புதிய திட்டம்

*இப்புதிய திட்டத்தின்படி,*

- வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள ஒரு குடும்பத்தில் யாராகிலும் ஒருவர் பட்டதாரியாகவோ, பட்டயதாரியாகவோ இருத்தல் வேண்டும்.
- அந்தக் குடும்பத்தில் 18 வயது எய்திய அனைவரும் ஒவ்வொரு அலகாக கருதப்படுவர். எடுத்துக்காட்டாக ஒரு பெண் பட்டதாரியாக உள்ள குடும்பத்தில் இப்பெண் உள்பட 18 வயது எய்திய மூன்று பிள்ளைகள் இருந்தால் தாய், தந்தை மற்றும் மூன்று பிள்ளைகளையும் சேர்த்து ஐந்து பயனாளிகளாகக்கருதப்படுவர். இவர்கள் செய்ய விரும்பும் தொழிற்குண்டான ஒரு கருவியின் விலை ரூ.3,000 எனில் ஐந்து நபர்களுக்கும் ரூ.3,000 வீதம் மொத்தம் ரூ.15,000 நிதியுதவி வழங்கப்படும்.
- இத்திட்டத்தின்படி குடும்ப எண்ணிக்கைக்கு ஏற்பவும் ஒரு கருவியின் விலைக்கு ஏற்பவும் வருவாய் ஈட்டக்கூடிய எந்த வகைக் கருவியையும் வாங்கலாம்.
- இந்த திட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்படும் ஒரு குடும்பத்திற்கு ரூ.15,000 முதல் ரூ.50,000 வரை வழங்கப்படும். இந்தத் திட்டத்திற்கு வழங்கப்படும் தொகை முழுவதும் மானியமாக வழங்கப்பட உள்ளது. தேவையான கூடுதல் வசதிகளைப் பயனாளிகளே செய்துகொள்ள முன்வரவேண்டும்.

*எடுத்துக்காட்டாக:*

- மிதி வண்டிக் கடை வைக்க விரும்பும் ஒருவர் மிதி வண்டிகளை இத்தொகையின் மூலம் வாங்கலாம். மிதிவண்டிக் கடைக்கு வேண்டிய கட்டட வசதியைப் பயனாளிகளே தேடிக்கொள்ள வேண்டும்.
- இந்தத்திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாகச் செயல்பட உள்ளது. இதற்கான விண்ணப்பப்படிவம் ஆதிதிராவிடர் நலத் தனி வட்டாட்சியர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
- இத்திட்டத்தின் மூலம் பயன்பெற மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- இத்திட்டம் ஆரம்பிக்கத் தேவையான மூலதனம், சாத்தியக்கூறுகள், தேவை, எதிர்பார்க்கும் இலாபம் போன்ற விவரங்கள் அடங்கிய திட்ட அறிக்கையை (பிராஜக்ட் ரிப்போர்ட்) விண்ணப்பத்துடன் அனுப்பிடல் வேண்டும்.
- இத்திட்டத்தை நல்லமுறையில் பயன்படுத்திப் பயனடைய ஆதிதிராவிடர் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- இத்திட்டத்தினால் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தில் பட்டதாரி மற்றும் பட்டயதாரி ஒருவரையாவது உருவாக்கி வறுமைக்கோட்டிற்கு மேல் குடும்பங்களை உயர்த்தும் முனைப்பு நிறைவேறுவதுடன் கல்வி ஆர்வமும் சமுதாயத்தினிடையே பெருகும். படித்தவர்க்கு வேலை இல்லை என்ற இக்கட்டும் குறையும் என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

★ ★ ★

> **ஜாதியும், ஜனநாயகமும் ஒன்றாக இருக்கமுடியாது; மூடநம்பிக்கையும் விஞ்ஞானமும் இணைந்து வாழமுடியாது.**
>
> **– அண்ணா**

செல்ல ஒப்பீட்டு முயற்சிகள் மிகுந்த பயனளிக்கும், ஹோமரின் இலியாத், ஒடிசியை விட முருகியல் தன்மை வாய்ந்த பல வரிகள் சங்க இலக்கியத்தில் பரந்து கிடக்கின்றன. நோபல் பரிசு பெற்ற பாப்லோ நெருடாவை விடப்பல இடங்களில் பாரதிதாசன் விஞ்சுகிறார். ஷெல்லியோடு பாரதியை ஒப்பிடும்பொழுது பல இடங்களில் குருவை மிஞ்சிய சீடராகப் பாரதி காட்சி தருகிறார். தமிழோடு பிற மொழிகளை ஒப்பிட்டுக் காணும்போது தமிழின் தொன்மைச்சிறப்பும், வரையறுக்கப்பட்ட இலக்கணக் கொள்கையும், ஒலிப்புமுறையும் நெருங்கமுடியாத அளவிற்கு உயர்ந்துள்ளன. இத்தகு சிறப்புக்கள் ஆங்காங்கே சில தமிழறிஞர்களால் போகிறபோக்கில் கூறப்பட்டுள்ளன என்றாலும் இம்முயற்சியில் தமிழின் அடைவுகள் மிகச்சிலவே!

### தேசியத் தன்மைகளை நோக்கி

எந்தவொன்றையும் பிறவற்றோடு ஒப்பிடும் பொழுதுதான் அவற்றில் உயர்ந்தது, தாழ்ந்தது என்ற பகுப்புநிலை முடிவிற்கு வரமுடியும். எனவே, தமிழ் உலக அரங்கில் ஒலிக்கப்படவேண்டுமாயின் முதலில் இந்திய அளவில் அதற்குரிய தனிச்சிறப்புக்கள் நிலைநிறுத்தப்பட வேண்டும். இதற்கு இந்திய அளவிலான மொழி, இலக்கியங்களோடு தமிழை ஒப்பிட்டுத் தமிழுக்குரிய தேசியத்தன்மைகள் இனம் காணப்படவேண்டும். அடுத்ததாக இந்திய தேசிய ஒருங்கிணைப்போடு உலகத் தரத்திற்கான போட்டியில் பங்குகொள்வதாகும்.

தமிழானது ஐக்கிய தேசியத் தன்மையைப் புறக்கணித்துவிட்டுச் சர்வதேசிய மதிப்பைப் பெற இயலாது. அனைத்திந்திய அளவில் தமிழுக்கான மதிப்புக்கள் போதுமான அளவில் கிடைக்கவில்லை அல்லது தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. இது உண்மையும்கூட, இந்திரா பார்த்தசாரதியும், வெங்கட் சாமிநாதனும் டெல்லியில் தமிழுக்கான முயற்சியில் படும்பாட்டை செய்தித் தாள்களில் விரிவாகவே எழுதியுள்ளனர். இவர்களோடு சாலை இளந்திரையனையும் சேர்த்துக்கொள்ளலாம். தேசிய அளவில் நம்முடைய மதிப்பை நிலை நிறுத்துவதில் 'தமிழர்களின் முயற்சி குறைவான ஒன்றாகவே உள்ளது. இலக்கியத்துறையில் பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு அனைத்திந்திய முக்கியத்துவத்தில் தமிழருக்கும் தமிழுக்கும் இடமில்லாத சூழ்நிலையைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. எனவே, இந்திய அளவில் தமிழுக்கான முக்கியத்துவத்தை நோக்கி நடைபோட வேண்டிய கால கட்டத்தில் உள்ளோம்.

இதற்குப் 'பாரதி-குமாரன்-ஆசான்-குர்ஜாடா அப்பாராவ் ஓர் ஒப்பீட்டாய்வு' என்பது போன்ற ஆய்வு முயற்சிகள் பலனளிக்கும். மு.வரதராசன்-காண்டேகர் போன்றோரை ஒப்பிடுவதும் இந்திய மண்ணில் தமிழுக்கான அங்கீகாரத்தை நல்கும். இதைப்போலவே ஜெயகாந்தன் - பிரேம்சந்த் ஒப்பீடும் அமையும். எனவே, தமிழுக்கான உலகத்தரம் பற்றி எண்ணும் பொழுது, இந்திய மொழிகளிலும், இந்திய இலக்கியங்களிலும் தமிழின் தனிச்சிறப்புக்கள் நிலைநிறுத்தப்படுவது உலகத்தரத்தை எட்டுவதற்கான அடுத்தகட்டப் பணியாகும். இந்திய அளவில் ஏற்கப்பட்ட தமிழ்ப் படைப்புக்களையும், தமிழ்மொழிச் சிறப்புகளையும் ஏனைய உலகப் படைப்புக்களோடும் உலக மொழிகளோடும் உரசிப்பார்ப்பது அடுத்த முயற்சியாகும். இவ்வாறு ஒப்பிடப் பெறும்பொழுது தழ் அதற்கான உலகத் தரத்தினை அதுவாகவே பெற்றுவிடும்.

### உருவம்–உள்ளடக்கம் மாற்றம் தேவை

தமிழுக்குரிய உலகத்தரம் கிடைக்காமைக்குரிய காரணங்களை மதிப்பீடு செய்யும் திறனாய்வாளர்கள் "புதிய புதிய துறைகள் இலக்கியத்தில் தோன்றும் போதெல்லாம் அவற்றை உடனே பற்றிக்கொண்டு அவற்றில் பிறரினும் மேம்பட்டுப் பிறருக்கும் வழிகாட்டக்கூடிய அளவில் ருஷ்யர்கள் முன்னேறி விடுகின்றனர். ஆனால் தமிழர்கள் அப்புதிய துறைகளை அறிமுகப்படுத்திக் கொள்வதற்கே ஒரு நூற்றாண்டாகி விடுகிறது" என்கின்றனர். புத்திலக்கியத் துறைக்கான நாவல், சிறுகதை, புதுக்கவிதை, திறனாய்வு ஆகிய துறைகள் பலவும் மேலை நாடுகளில் தோன்றிச் சில நூற்றாண்டுகளுக்குப் பிறகே தமிழுக்கு அறிமுகமாகியுள்ளன. இன்றைய இலக்கியத்துறைகளில் செல்வாக்குச் செலுத்துவனவும் மேற்குறிப்பிட்ட துறைகளேயாகும். இத்தகைய சூழ்நிலையில் தற்காலத் தமிழ்ப் படைப்புக்கள் உலகத்தரத்தை எட்டவில்லை என்பதற்கு இத்தகைய கால இடையீடும் ஒரு காரணமாகலாம்.

இந்தக் கால இடையீடு தமிழால் சமாளிக்கப்பட வேண்டும். இது அவ்வளவு எளிதன்று, ஆயினும் முடியாதவொன்றன்று. தற்காலத் தமிழ் உலகில் இன்றுவரை புத்திலக்கியத்துறைக்கு வித்தாக இருந்த முன்னுதாரணம் அற்ற முன்னோடி என்று யாரையும் குறிப்பிட்டுச் சொல்லமுடியாத அவலநிலையில் உள்ளோம். தமிழர் ஒருவர் புதுத்துறையை அல்லது புத்திலக்கிய வடிவத்தை அறிமுகம் செய்வாராயின் அவரால் தமிழின் தரம் உயரும். அப்போது, தமிழ் இலக்கியம் உலக இலக்கியமாகும். இலக்கிய உலகில் உருவம் உள்ளடக்கம் இவையிரண்டில் தமிழலக்கிய வாதிகள் உருவத்தில் மாற்றம் கொண்டுவரும் நாளே தமிழ் தலைநிமிர்ந்து நிற்கும் நாளாகும்.

### முடிவுரை

ஆக, தமிழ் இலக்கியம் உலகினரின் காதுகளுக்கு எட்டவேண்டுமாயின் 1.மேலைநாட்டுத் தீர்ப்புக் குழுவினருக்கும், ஏனைய மொழிக் குழுவினருக்கும் தமிழ் இலக்கியம் மொழிபெயர்ப்பாகச் சென்றடைய வேண்டும். 2. தமிழில் தற்சார்பு இல்லாத ஒப்பீட்டாய்வுகள் பல்கிப் பெருகி தமிழின் தரங்கள் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். 3.புத்திலக்கியப் பரிமாணங்கள் தமிழன் பரவிப் படரவேண்டும், வேண்டுமானால் புத்திலக்கிய வடிவம் உருப்பெருதல் வேண்டும். □

# தூர் வாரும் பணிகள்!



காஞ்சிபுரம் மாவட்டம் : தூர் வாரப்பட்டுள்ள — கிளார் முசரவாக்கம் வரத்துக் கால்வாய்


மாநிலம் முழுவதுமுள்ள ஏரிகள், குளங்கள், கால்வாய்கள், ஆறுகள் தூர்வாரி ஆழப்படுத்தப்பட்டு — எங்கும் வளம் தேங்கச் செய்திடும் மாண்புமிகு முதல்வர் கலைஞரின் உன்னதத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஊக்கத்தோடு செயல்பட்டு வருகிறது காஞ்சிபுரம் மாவட்டம்

### கம்பக்கால் வாய்க்கால்


கம்பக்கால் வாய்க்கால் வேலூர் மாவட்டம், வாலாஜாபேட்டை அருகே உள்ள பாலாறு அணைக்கட்டில் இடது கரையிலிருந்து பிரிந்து வரும் காவேரிப்பாக்கம் கால்வாயின் கிளைப்பிரிவான கோவிந்தவாடி கால்வாயின் 25.80வது கிலோ மீட்டரில் பிரிகின்றது. இக்கால்வாய் காஞ்சிபுரம் மாவட்டம், பாலுசெட்டி சத்திரம் அருகே உள்ள தைப்பாக்கம் கிராமம் அருகே பிரிந்து திருப்பெரும்புதூர் வரை சுமார் 44.36 கிலோ மீட்டர் தூரம் சென்று, இறுதியாகத் திருப்பெரும்புதூர் ஏரியைச் சென்று அடைகின்றது.

இந்தக் கால்வாய், காஞ்சிபுரம் மற்றும் திருப்பெரும்புதூர் வருவாய் வட்டங்களில் முறையே 55 மற்றும் 30 ஏரிகளுக்கு நீர் விநியோகம் செய்கின்றது. இக்கால்வாயினால் பயன்பெறும் மொத்த பாசனப் பரப்பு 21,279.17 ஏக்கர் ஆகும்.

இக்கால்வாயில் பொதுவாக, வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் — அதாவது, அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் மட்டும் சுமார் இரண்டு மூன்று வார காலத்திற்கு மட்டும் நீர்வரத்து இருக்கும். இக்குறுகிய காலத்திற்குள், இக்கால்வாயின் அனைத்து ஏரிகளுக்கும் நீர் விநியோகிக்கப்பட வேண்டும். மேலும்



தூர் வாரப்பட்ட மாமல்லபுரம் கோயில் குளம்



காஞ்சிபுரம் செவிலிமேடு ஏரி தூர்வாரும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதன் மூலம் பயன்பெறும் ஏரிகள் எல்லாம் மிகவும் குறைந்த தனி நீர்ப்பிடிப்புப் பரப்பே உள்ளவையாக இருப்பதாலும், பெரும்பாலும் அனைத்து ஏரிகளும் இக்கால்வாயையே நம்பி உள்ளன.

1893ல் வெட்டப்பட்ட இக்கால்வாய், போதுமான நிதி ஒதுக்கீடின்மையால் நீண்ட காலமாகப் பராமரிப்பின்றி, தூர்ந்து போயிருந்தது.

இதனுடன், கால்வாயில் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகள், வேலிகாத்தான மரங்கள், முட்புதர்கள் காரணமாகவும் கால்வாயில் ஆங்காங்கே உடைப்பு ஏற்பட்டு, அதனால் கடைமடைப் பகுதிகளுக்கு **நீர்விநியோகம்** பெறாமலும், ஆரம்பப் பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அதனால் பாதிப்பும் ஏற்பட்டது.

இந்நிலையில், உலக வங்கி நிதி உதவியின் கீழ், பாலாறு அணைக்கட்டுப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் அதைச் செப்பனிட முடிவு செய்யப்பட்டு, ரூ.3.60 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியது.


இதன்படி, காஞ்சிபுரம் வட்டத்திற்குள் உள்ள கம்பக்கால் வாய்க்கால் பகுதியாக 18.65 கி.மீ. நீளத்தைச் சீரமைக்கவும், அதிலிருந்து பிரிந்து சென்று ஏரிகளுக்கு **நீர்** வழங்கும் 23 கிளைக் கால்வாய்கள் மூலக்கால்வாயில் உள்ள வீழங்கள், தலை மதகுகள், தலை மதகுகளுக்குண்டான திருகு அடைப்பான்கள் பொருத்துதல் மற்றும் சில ஏரிகளைச் சீரமைப்புச் செய்யவும் இத்துடன் கால்வாயின் வலது புறத்தில் ஒரு ஊப்புச்சாலை அமைக்கவும் ரூ.1.97 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

### திருப்பெரும்புதூரில்....

அவ்வாறே, திருப்பெரும்புதூர் வட்டத்தில் செல்லும் கம்பக்கால் கால்வாய் (25.71 கி.மீ.) பகுதியும், மேற்கூறிய **புனரமைப்புப்** பணிகள் போன்றே செய்ய ரூ.1.60 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவ்விரு பணிகளும் தற்போது துவங்கப்பட்டு நடந்தேறி வருகின்றன.

இவ்விரு பணிகளும் முடித்திட 18 மாத கால அவசகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விரு பணிகளும் முடிவுறும் பொழுது, இத்திட்டத்தின்படி கடைமடைப் பகுதிகள் உட்பட காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள எல்லா ஏரிகளுக்கும் உரிய விகிதாச்சார அடிப்படையில் நீர் விநியோகம் செய்யப்படும். இப்பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் மேற்கண்ட 85 ஏரிகளும் உறுதியாக நிரம்புமென எதிர்ப்பார்க்கலாம்.



## அண்ணாவின் மேதைமை

*அறிஞர் அண்ணா அவர்களுக்கு, அமெரிக்க நாட்டு "யேல் பல்கலைக் கழகத்தில்" ஃபெல்லோஷிப்" பட்டம் வழங்கப்பட்டபோது — அங்கே வந்திருந்த இளைஞர் சிலர் — "மிகப்பெரிய மேதையான தாங்கள் நாங்கள் கேட்கும் ஒரு சாதாரண கேள்விக்குப் பதில் சொல்கிறீர்களா பார்ப்போம் என்று சொல்லிவிட்டு —* **"Because"** *என்ற சொல் அடுத்தடுத்து மூன்று முறை வரும்படி ஒரு வாக்கியம் சொல்லுங்கள் பார்க்கலாம் என்றனர். அதற்கு உடனேயே அண்ணா சென்ன பதில் இது:*

**"No Sentence ends with because, because, because is a conjunction".**

## மடிப்பாக்கம் ஏரி சீரமைப்பு

மடிப்பாக்கம் ஏரி தாம்பரம் – வேளச்சேரி சாலையின் வடக்குப் புறத்தில் உள்ளது. மடிப்பாக்கம் சிறுபாசன ஏரி ஆழம் குறைவாக இருந்தபடியால் மழைக்காலங்களில் ஏரியில் தண்ணீர் வரத்து அதிகமாகி அருகில் உள்ள சாலையைக் கடந்து ஆரம்பப் பள்ளி வளாகத்தில் புகுந்து செல்வதால், பள்ளி சீர்கெடுவதோடு சுற்றுப்புறச் சுகாதாரமும் பாதிக்கப்பட்டு மக்கள் அவதியுறுகிறார்கள். அந்நிலையை நிரந்தரமாகப்



*தூர் வாரப்பட்ட அவலூர் – தாமல் வரத்துக்கால்வாய்*

போக்கும் வகையில் மடிப்பாக்கம் சிறுபாசன ஏரியை ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்தி மேம்பாடு செய்ய ரூ.9.60 இலட்சம் 1997 – 98 ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் வேளாணமைப் பொறியியல் துறை மூலம் செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இந்தப் பணி போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது.


## வல்லம் ஈகா ஏரி

இந்த ஏரியால் 777 ஏக்கர் நிலப்பரப்பு பாசன வசதி பெறுகிறது. இந்த ஏரியின் முன் பகுதி மற்றும் பாசனக் கால்வாய்கள் தூர்ந்துபோய் இருப்பதால் தண்ணீர் வரத்துக் குறைந்து காணப்பட்டதால் விவசாயத்திற்குத் தேவையான நீர்வரத்துக் குறைந்துள்ளது. அதனைப் போக்கிடும் வகையில் ஏரியை ஆழப்படுத்தவும், வரத்துக்கால்வாயைச் சுத்தம் செய்யவும் 1997–98 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப்பணித் துறையின் மூலம் பணி நிறைவேற்றப்பட்டு வருகிறது.

## நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம்

மழைக்காலங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் அருகே உள்ள வேகவதி ஆற்றில் அதிகம் வெள்ளப்பெருக்கு ஏற்படும்; இதனால் போக்குவரத்துப் பாதிப்பும் உண்டாகும். அதற்கு நிரந்தரமாகத் தீர்வு காணும் வகையில், 1997–98ல், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இந்த வேகவதி நதியின் குறுக்கே ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணி நெடுஞ்சாலைத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு இப்பணி முடியும் தருவாயில் உள்ளது.

இவ்வாறு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அத்தனைக் கால்வாய்களும் அகலமாகி ஆழமாகி மாவட்டத்தை வளமாக்க உள்ளன.



*தூர் வாரப்படவிருக்கும் காஞ்சிபுரம் மாவட்டம் – தாமல் ஏரி*

## சுடுகாட்டிற்குத் தடுப்புச் சுவர்

பம்மல் பேரூராட்சிக்குட்பட்ட இடுகாட்டில் மழைக்காலங்களில் வெள்ளம் புகுந்து பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1997–98 மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ், மேற்படி இடுகாட்டிற்கு ரூ.5 இலட்சம் செலவில் வெள்ளத்தடுப்புச் சுவர் கட்டப்பட்டு வருகிறது.

### சுயவேலைவாய்ப்புத் திட்டம்

1998–99 ஆம் ஆண்டு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் 38 சுயவேலை வாய்ப்புப் பயிற்சி மையத்தின் மூலம் 486 இளைஞர்களுக்கு 6 மாத காலத்திற்குக் **கீழ்க்கண்ட** சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள் துவக்கப்பட்டுள்ளன:

தையல் பயிற்சி, ஓட்டுநர் மற்றும் டீசல் மெக்கானிக் பயிற்சி, கணிப்பொறி பயிற்சி, பிட்டர்/வெல்டர் பயிற்சி, மோட்டார் ரீவைண்டிங் பயிற்சி, பிளாஸ்டிக் பாய்முடைதல் பயிற்சி, தொலைக்காட்சி, வி.சி.ஆர். பழுது பார்ப்புப் பயிற்சி, எல்க்ட்ரிஷீயன் பயிற்சி.

# அறிவொளி இயக்கம்

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் 15–35 வயதுக்குள்ளான கல்வி அறிவு பெறாதவர்களின் எண்ணிக்கை 6.7 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டிருந்தது.

இவர்களுக்கு மைய அரசு மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் எழுத்தறிவு புகட்டும் நிமித்தம், அறிவொளி இயக்கம் 1994ல் தொடங்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இந்தத் தொண்டு நிறுவனத்தின் தலைவராக மாவட்ட ஆட்சியர் செயல்படுகிறார். ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் (தற்போதைய காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்) உள்ள கல்வி அறிவு இல்லாத 15–35 வயதுள்ள 6.7 இலட்சம் நபர்களுக்கு எழுத்தறிவு அளிக்கும் பணி இரண்டாண்டுகளின் முன் துவங்கப்பட்டது.



அறிஞர் அண்ணா – கண்ணியமிக்க காயிதே மில்லத்துக்குப் பொன்னாடை போர்த்தி மகிழ்தல்

மாவட்டம் 1.1.1997ல் பிரிக்கப்பட்டபின், காஞ்சிபுரம் மாவட்டத்தில் கல்வி அறிவு இல்லாத 15–35 வயதுள்ள நபர்களின் எண்ணிக்கை 4,06,192 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மக்களுக்கு எழுத்தறிவு பற்றித் தெரிவித்து ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஊராட்சி ஒன்றியம் மற்றும் வட்ட அளவில் பேரணிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இக் காலகட்டத்தில் கல்வி அறிவு அளிக்கும் பணியில் 160 முழுநேர ஒருங்கிணைப்பாளர்கள், 35,000 தன்னார்வத் தொண்டர்கள், முதிர்ந்த பயிற்சியாளர்கள், கல்வி கற்பிக்கும் திறன் மிக்கவர்கள் இனம் காணப்பட்டு, கல்வி இல்லாதவர்களுக்கு கல்வி கற்பிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

வெவ்வேறு கல்விப்பயிற்சிக் காலகட்டங்களில், முந்திய காஞ்சிபுரம் மாவட்டத்தில், கல்வி கற்பிப்பதற்கென 3,65,573 கல்வி அறிவு பெறாத நபர்கள் சேர்க்கப்பட்டனர். இவர்களில் முதல்நிலைப் பயிற்சியை (அறிவொளி தீபம்–1) 2,85,145 நபர்கள் முடித்துள்ளனர். இவர்களில் 2,76,134 நபர்கள் இரண்டாம் கட்டப் பயிற்சியை (அறிவொளி தீபம்–2) 31.10.1997ல் முடித்துள்ளனர். மாவட்டத்தில் மூன்றாவது கட்டமாக அறிவொளி தீபம் –3ஐக் தொடங்குவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. அக்டோபர் 1998ல், இந்தப் பயிற்சியானது செயல்பாட்டிற்குக் கொணரப்படவுள்ளது.

# குடும்ப அட்டை வழங்கும் பணி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணிகள் 6.5.97 முதல் பழைய குடும்ப அட்டைகள் வைத்திருப்பவர்களுக்கு புதிய படிவம் 4,15,800 நகராட்சி/ஊராட்சி பகுதிகளுக்கு, நியாயவிலைக் கடைகளின் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது.

காஞ்சிபுரம்/மதுராந்தகம்/செங்கல்பட்டு போன்ற நகராட்சி பகுதிகளுக்கு, முதற்கட்டமாகப் புதிய குடும்ப அட்டைக்கானப் படிவம் வழங்கப்பட்டது. இம்மாவட்டத்தில் மொத்தம் 1,265 நியாயவிலைக் கடைகள் உள்ளன. வழங்கப்பட்ட புதிய படிவங்களைத் திரும்பப் பெற்று அரசு அலுவலர்களைக் கொண்டு வீடுதோறும் சென்று விசாரணை செய்யப்பட்டது.




அதில் தகுதியான விண்ணப்பங்கள் மொத்தம் 3,94,971 படிவங்களும், தள்ளுபடி செய்யப்பட்ட 20,829 படிவங்களும் ஆகும். இந்த தகுதியான விண்ணப்பங்களை 'எல்காட்' நிறுவனத்தின் மூலம் இரண்டு வண்ணக் குடும்ப அட்டைகளும் அச்சடிக்கப்பட்டது.

இளசிவப்பு அட்டை (ஆண்டு வருமானம் ரூ.2,50–க்குப்பட்டவை) வறுமைக்கோட்டிற்குள் உள்ளவர்களுக்கும்.

மஞ்சள் நிறம் குடும்ப அட்டை (ஆண்டு வருமானம் ரூ.2,500–க்கு மேற்பட்டவர்கள்) நடுத்தர குடும்பத்தினர்களுக்கும் இம்மாவட்டத்தில் நகராட்சிப் பகுதிகளில் 1.6.98 முதல் வழங்கப்பட்டன. அடுத்த கட்டமாக 5.6.98 முதல் ஊராட்சி/பேரூராட்சி பகுதிகளுக்குக் குடும்ப அட்டைகள் நியாயவிலைக் கடைகளின் மூலம் வழங்கப்பட்டன. இக்குடும்ப அட்டைகளுக்குக் குடும்ப அட்டைதாரர்களிடம் இருந்து ரூ.5 (ஐந்து மட்டும்) கட்டணமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதிகக் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்பதற்கான விளம்பரம் சுவரொட்டிகள் மூலம் அனைத்து நியாயவிலைக் கடைகளின் முன் விளம்பரம் செய்யப்பட்டது.

குடும்ப அட்டை இல்லாதவர்களிடம் இருந்து புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பம் 20.5.98ஆம் தேதி வரையில் 86,893 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதனை, அரசு அலுவலர்களைக் கொண்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறது. இதற்கான குடும்ப அட்டை அச்சடிக்கும் பணி விரைவில் தொடங்க உள்ளன.

மாவட்டத்தில் மொத்தம் 8 வட்டங்கள் உள்ளன. அதில் தாம்பரம் மட்டும் மாநகராட்சிக்குட்பட்டவையாகும். மீதம் உள்ள வட்டங்களில் கீழ்கண்டவாறு புதிய அல்லது பகுதி நேரம் நியாயவிலைக் கடைகள் புதியதாகத் திறக்கப்பட்டுள்ளன:–

| வட்டத்தின் பெயர் | முழுநேரக் கடை | பகுதிநேரக் கடை | மொத்தம் |
|---|---|---|---|
| 1. காஞ்சிபுரம் | 8 | 8 | 16 |
| 2. ஸ்ரீபெரும்பதூர் | 6 | 4 | 10 |
| 3. உத்திரமேரூர் | 2 | 3 | 5 |
| 4. செங்கல்பட்டு | 7 | 7 | 14 |
| 5. திருக்கழுகுன்றம் | 6 | 1 | 7 |
| 6. மதுராந்தகம் | 1 | 5 | 6 |
| 7. செய்யூர் | .. | 2 | 2 |
| மொத்தம் | 30 | 30 | 60 |

மாவட்டத்தில், காஞ்சிபுரம் நகராட்சியில்/மாவட்ட தலைநகரில் குடும்ப அட்டைதாரர்களின் வசதிக்கேற்ப 5,000 குடும்ப அட்டைகளுக்கு ஒரே இடத்தில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யும் பொருட்டு புதிய இரண்டு பங்கு திறப்பதற்கு இடங்களை தேர்வு செய்யப்பட்டு, அரசின் தற்போது பரிசீலனையில் உள்ளது.

செய்யூர் வட்டத்தில் நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருள் உடனுக்குடன் ஒதுக்கீடு செய்யவும், விரைவில் கொண்டு செல்வதற்கும் சேமிப்புக் கிடங்கு (குடோன்) கட்டுவதற்குத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக, முன்மொழிவுகள் இவ்வலுவலகத்தில் இருந்து அரசுக்கு அனுப்பப்பட்டு, பரிசீலனையில் உள்ளன.

# சமூக நலத்துறையின் சீர்மிகு பணிகள்

*சமூக நலத்துறையின் நலத்திட்ட உதவிப் பணிகள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் சீராக நிறைவேற்றப்பட்டு வருகின்றன; கடந்த இரண்டாண்டுக் காலத்தில் இம்மாவட்டத்தில் அத்துறை மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள நிகரற்ற பணிகள், இங்கே பட்டியலிட்டுக் காட்டப்படுகின்றன:*

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ்,** எட்டாம் வகுப்பும் அதற்கு மேலும் படித்த 18 வயது நிறைவடைந்த ஏழை மகளிர்க்கு, அவர்தம் திருமணச் செலவிற்காக ரூ.10,000 உதவித் தொகையாக வழங்கப் படுகிறது. 1996-97ஆம் நிதியாண்டில் 680 பேருக்கு ரூ.68 இலட்சம், திருமண உதவித்தொகையாகவும், 1997-98ஆம் ஆண்டில் 3,249 பேருக்கு ரூ.3.25 கோடி, திருமண உதவித்தொகையாகவும் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட முழுத்தொகையையும் செலவு செய்து கடந்த 2 ஆண்டுகளில் 100 சதவீத சாதனை எய்தப்பட்டுள்ளது.

**விதவை மகள் திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ்,** கணவரை இழந்த ஏழை விதவையரின் துயர் நீக்கும் வண்ணம், அவர்தம் மகளின் திருமணச் செலவிற்காக 1998-99ஆம் ஆண்டு முதல் ரூ.5,000 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. திருமண உதவி கோரும் மகளின் வயது 18 வயது முதல் 30 வயதிற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
இத்திட்டத்தின் கீழ் 1996-97ஆம் ஆண்டில் 36 பயனாளிகளுக்கு ரூ.2,000 வீதம் ரூ.72,000மும், 1997-98ல் 53 பயனாளிகளுக்கு ரூ.3,000 வீதம் ரூ.1,59 இலட்சமும் உதவித் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது.


**டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமண நிதிஉதவித் திட்டத்தின் கீழ்,** 20 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட ஏழை விதவையர் மறுமணத்தை ஊக்குவிக்கும் வண்ணம், இத்திட்டத்தின் கீழ் மறுமணம் செய்துகொள்ளும் தம்பதியர்க்கு ரூ.7,000 உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

1996-97ஆம் ஆண்டில், ரூ.5,000 வீதம் 10 பேருக்கும் 1997-98 முதல் ரூ.7,000 ஆக உயர்த்தப்பட்டு 3 பேருக்கு ரூ.21,000மும் அளிக்கப்பட்டுள்ளது.

**அன்னை அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதிஉதவித் திட்டத்தின் கீழ்,** ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த ஒருவரும் பிற இனத்தைச் சேர்ந்த மற்றொருவரும் செய்துகொள்ளும் கலப்புத் திருமணத்திற்குக் கடந்த ஆண்டிலிருந்து ரூ.20,000 உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் அல்லாத முற்பட்ட இனத்தவரும் பிற்பட்ட இனத்தவரும் செய்துகொள்ளும் கலப்புத் திருமணத்திற்கு ரூ.10,000 நிதிஉதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டில் 19 பேருக்கு ரூ.1.25 இலட்சமும், 1997-98ஆம் ஆண்டில் 30 பேருக்கு ரூ.2.10 இலட்சமும் உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**ஆதரவற்ற மகளிர் திருமண நிதிஉதவித் திட்டத்தின் கீழ்,** ஆதரவற்ற மகளிர் திருமணத்திற்காக ரூ.5,000 வீதம் 1.4.98 முதல் உயர்த்தப்பட்டு நிதிஉதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட (தாய்-





**அன்னை அஞ்சுகம் கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், ரூ.20,000 உதவித்தொகை பெறும் பயனாளி**

தந்தை இழந்த) ஆதரவற்ற பெண்கள் 5 பேர் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

**இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ்,** கணவரால் கைவிடப்பட்ட ஏழை மகளிர், ஏழை விதவைகள் மற்றும் உடல் ஊனமுற்றோருக்காக, இலவசத் தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1996-97ஆம் ஆண்டில் 135 பேரும் 1997-98ஆம் ஆண்டில் 120 பேரும் பயனடைந்திருக்கின்றனர்.

**ஏழை விதவையின் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு இலவசப் பாடப்புத்தகம் - குறிப்பேடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ்,** ஆரம்பப்பள்ளிகளில் பயில்வோருக்கு ரூ.50 வீதமும், நடுநிலைப்பள்ளிகளில் பயில்வோருக்கு ரூ.75 வீதமும், உயர்நிலைப்பள்ளிகளில் பயில்வோருக்கு ரூ.90 வீதமும், மேல்நிலைப்பள்ளிகளில் பயில்வோருக்கு ரூ.100 வீதமும், உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1996-97ஆம் ஆண்டில் ரூ.11,835-ம், 97-98ஆம் ஆண்டில் ரூ.54,000 -க்கும் குறிப்பேடுகள் வாங்கி இந்த மாவட்டத்தில் இத்தகு மாணவ, மாணவியர்க்கு வழங்கப்பட்டுள்ளது.

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதிஉதவி திட்டத்தின் கீழ்,** கருவுற்ற ஏழைத்தாய்மார்களுக்கு மகப்பேறு காலத்தில் உதவிடும்பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கருவுற்ற தாய்மார்களுக்கு மகப்பேறுக்கு முன்பும் பின்பும் ஆகமொத்தம் நான்கு மாதங்களுக்கு ரூ.500 வழங்கப்படுகிறது. 96-97ஆம் ஆண்டில், 9,006 பயனாளிகளுக்கு ரூ.45.03 இலட்சமும், 97-98ஆம் ஆண்டில், 9,100 பயனாளிகளுக்கு 45.50 இலட்சமும் உதவித்தொகையாகத் தரப்பட்டிருக்கிறது.

**தமிழக அரசின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ்,** இரண்டு பெண் குழந்தைகள் பிறந்து, அதன் பின்னர் கருத்தடை செய்துகொள்ளும் தாய்மார்களின் இரு குழந்தைகளுக்கும் 1997-98ஆம் ஆண்டு முதல் தலா ரூ.1,500 தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சிக் கழகத்தில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1992-93ஆம் ஆண்டு முதல் இம்மாவட்டத்தில் 2,143 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

### அரசு-குழந்தைகள் பராமரிப்பு இல்லம்

தாய் தந்தை இருவரையும் இழந்த அல்லது இருவரில் ஒருவரை இழந்த ஆதரவற்ற ஏழைக் குழந்தைகளின் நலன் காக்க, ஆதரவற்றோர் அரசு குழந்தைகள் இல்லம் மற்றும் பள்ளி காஞ்சிபுரத்தில் இயங்கிவருகிறது. 250 குழந்தைகள் சேர்ந்து படிக்க வசதியுள்ள இவ்வில்லத்தில் தற்போது ஆதரவற்ற குழந்தைகள் 178 பேர் பராமரிக்கப்படுகின்றனர். ஆதரவற்ற இக்குழந்தைகளுக்கு

இலவசமாகக் கல்வியும், உணவும் உடையும், உறைவிடமும் அளிக்கப்படுகிறது.

### மகளிர் தையற் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

அ) தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் முசரவாக்கம், காஞ்சிபுரம்,பெருங்களத்தூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. தமிழக அரசின் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயனடையும் அனைத்து மாணவ-மாணவியர்க்கும் வழங்கப்படும் இலவசச்சீருடைகள் இந்தச் சங்கங்களின் மூலம் தைக்கப்பட்டு வழங்கப்படுகிறது. 96-97ஆம் ஆண்டில், மாணவர் 2,30,635 பேரும், மாணவியர் 2,17,248 பேரும் பயனடைந்துள்ளனர். 1997-98ஆம் ஆண்டில் மாணவர் 1,20,506 பேரும், மாணவியர் 1,14,454 பேரும் பயனடைந்துள்ளனர். சீருடை தைக்கும் பணியின் மூலம் மட்டும் 1,350 மகளிர் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

### எழுதுபொருள் தயாரிப்புச் சங்கங்கள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3 எழுதுபொருள் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவருகின்றன. இச்சங்கத்தின் உறுப்பினர்கள் வரையறுக்கப்பட்ட பதிவேடுகள், குறிப்பேடுகள் மற்றும் சத்துணவு மையங்களுக்குத் தேவையான பதிவேடுகளைத் தயாரித்து வழங்கி வருகின்றனர். ஒவ்வொரு சங்கத்திலும் 25க்கும் மேற்பட்ட மகளிர் இதன்மூலம் பயனடைகின்றனர்.

### இணை உணவு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில், வாலாசபாத் மற்றும் பொத்தேரி ஆகிய இடங்களில் சத்துமாவு தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு இயங்கி வருகின்றன. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள எல்லா அங்கன்வாடி மையங்களிலும் உள்ள 6 மாதம் முதல் 36 மாதம் வரையுள்ள குழந்தைகளுக்கு, இச்சங்கங்களில் தயாரித்த சத்து மாவைக் கொண்டு ஊட்டச்சத்து உருண்டை வழங்கப்படுகிறது. இதே ஊட்டச்சத்துருண்டை கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்கப்படுகிறது. இந்தச் சங்கங்களின் மூலம் 70க்கும் மேற்பட்ட மகளிர் வேலை வாய்ப்பினைப் பெறுகின்றனர். □

---

*விரோதியை வெல்வது*
*என்பது சிறப்பான*
*வாழ்க்கை வாழ்வதில்*
*தான் உள்ளது!*

*விரோதிகள்*
*போற்றாமல்*
*இருக்கும் வரை*
*உனது செயல்கள்*
*நியாயமானதே!*

*அர்ச்சனையை விட*
*விமர்சனங்களே*
*உன்னை*
*மகத்தான*
*மனிதனாக்கும்-*
*சாதனையாளனாக்கும்!*

*பெருமைகொள்*
*கோபுரக் கலசமாக*
*இருப்பதில் அல்ல-*
*தூணாய் இருந்து*
*தாங்கி நிற்பதில்-*

*நம்பிக்கையோடு*
*நட நண்பனே!*

*உன் சுவடுகள்*
*தடமாய் ஜனிக்கும்!*

— க.காளிமுத்து

# நம்பிக்கையோடு பணிகளைத் தொடருங்கள்

சிறந்த வீரர்களுக்கு அண்ணா பதக்கம் வழங்கி, திருச்சிராப்பள்ளியில் 30-9-1998 அன்று மாண்புமிகு முதல்வர் **கலைஞர்** உரை.

**1969**-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு அவர் விட்டுச் சென்ற இடத்தில் பொறுப்பேற்று ஆட்சித் தலைமை ஏற்ற நான், ஒவ்வொரு ஆண்டும் அண்ணா பிறந்த நாளில் அல்லது அந்த நாளையொட்டி செப்டம்பர் திங்களில் காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்புத்துறை, ஊர்க்காவல் படைத்துறை இதில் பணியாற்றும் நண்பர்களுக்கு அவர்களுடைய ஆற்றல், கடமையுணர்வு, அவர்களுடைய வீரச்செயல், நீண்டநாள் நல்ல பணிபுரிந்த தன்மை இவைகளையெல்லாம் எடை போட்டுப் பார்த்து, அண்ணா பெயரால் பதக்கம் வழங்குகின்ற விழா தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

இடையில் சில ஆண்டுகளில் நடைபெறாவிட்டாலும் கூட, இந்த ஆட்சி பொறுப்பேற்று நடைபெறுகின்ற நேரத்திலெல்லாம் அண்ணா பதக்கம் வழங்குகின்ற விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு காவல்துறையில் வீரச்செயல் புரிந்த பத்துப்பேருக்கும், நற்பணி புரிந்த 64 பேருக்கும், தீயணைப்புத்துறையில் நற்பணி புரிந்த 9 பேருக்கும், சிறைத்துறையில் வீரச்செயல்புரிந்த 9 பேருக்கும், ஊர்க்காவல் படையில் நற்பணி புரிந்த 5 பேருக்கும் மொத்தம் 97 பேர்களுக்கு முதலமைச்சர் காவல் பதக்க விருதுகள் வழங்கப்படுகின்றன.

இது 'முதலமைச்சருடைய காவல் பதக்க விருது' என்று அழைக்கப்பட்டாலும்கூட நான் முதலமைச்சர் என்று கருதுவது பேரறிஞர் அண்ணா அவர்களைத்தான் என்பதால் இதற்கு "அண்ணா பதக்கம்" வழங்கப் படுகின்ற விழா என்பதே சாலப்பொருத்தம் என்பது என்னுடைய கருத்தாகும். ஆகவே அந்தப் பதக்கங்களை அண்ணா பிறந்த இந்தத் திங்களில் வழங்குவதில் நான் பெருமை அடைகிறேன். பெருமிதம் கொள்கிறேன். பேருவகை அடைகிறேன்.

## அந்தக் காலத்திலேயே...

என்னைப் பொறுத்த வரையில் நான் இன்று நேற்றல்ல; ஆளுகிற பொறுப்பில் இருக்கின்ற காரணத்தால் அல்ல; என்னுடைய தலைமையில் காவல்துறை இருக்கிற தென்பதால் அல்ல; நான் பொதுவாழ்க்கையில் ஈடுபட்ட அன்று தொட்டு இன்று வரையில் காவல்துறையைக் கடமை ஆற்றுகின்ற துறையாக, சமுதாயத்திற்குத் தேவைப்படுகின்ற ஒரு துறையாக அந்தத் துறை இருந்தால்தான், எப்படி தோட்டத்திற்கு வேலி இருக்கிறதோ அதைப்போல சமுதாயத்தைக் காப்பாற்ற முடியும், சமுதாயத்திற்கு அரணாக இருக்கும் என்ற நம்பிக்கை உடையவன் நான். எனவே அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை எல்லாம் ஆராய்ந்து நான் எதிர்க்கட்சியாக இருந்த அந்தக் காலத்திலேயே காவல்துறை நண்பர்களுக்காக வாதாடி இருக்கிறேன். போராடியிருக் கின்றேன்.

அப்படி வாதாடியதற்காக நான் பல கஷ்ட நஷ்டங்களையும் ஏற்றிருக்கிறேன். அவர்களுக்காக நான் எழுதிய எழுத்துக்களெல்லாம் அந்தக் காலத்தில் இருந்த அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டிருக்கின்றன. காவலர் களுக்காக நான் எழுதிய நாடகங்களெல்லாம் ஆட்சி யாளர்களால் அப்போது தடை செய்யப்பட்டிருக்கின்றன. அந்த அளவிற்கு சிரமங்களை ஏற்றுக்கொண்டு, கஷ்டங்களை ஏற்றுக்கொண்டு காவல்துறைக்காக நான் பாடு பட்டிருக்கின்றேன்.


எனவேதான், எனக்கு முன்னால் இங்கே உரையாற்றிய காவல்துறைத் தலைவர் சர்மா அவர்களும், உள்துறைச் செயலாளர் பூர்ணலிங்கம் அவர்களும் குறிப்பிட்டதைப் போல இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மத்திய அரசில் வழங்கப்படுவதற்கு ஈடாகக் காவல்துறையினர்க்கு - இன்னும் சொல்லப்போனால், அவர்களைவிட கொஞ்சம் அதிகமாக ஊதியம் வழங்குகின்ற ஒரேயொரு மாநிலம் தமிழ் மாநிலம்தான்; இந்த ஆட்சி நடைபெறுகின்ற மாநிலம்தான் என்பதை நான் கம்பீரமாக, பெருமையாகச் சொல்ல முடியும்.

நீங்கள் சற்று சிந்தித்துப் பார்த்தால், ஐந்தாண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற அந்த ஆட்சியில், அந்த அரசில் காவல் பணியாளர் ஒருவர் கூட நியமனம் செய்யப்படவில்லை. இந்தத் துறையிலே ஒருவரைக்கூட நியமிக்கப்படவில்லை. ஆனால் இரண்டாண்டுக் கால இந்த ஆட்சியில் 23,071 காவல்துறைப் பணியாளர்கள் நியமனம் செய்யப் பட்டுள்ளார்கள்.

ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி இதுவரை நியமனம் செய்யப்பட்ட காவல் பணியாளர்களின் எண்ணிக்கை 13,400. ஏற்கெனவே அறிவித்தார்கள். ஆனால் நியமிக்கப்படவில்லை. ஆனால் இந்த ஆட்சி சொன்னதைச் செய்கின்ற ஆட்சி; செய்வதை மாத்திரமே சொல்கின்ற ஆட்சி; எனவேதான் அறிவிக்கப்பட்ட 13,400 பேர் அப்படியே திரிசங்கு சொர்க்கத்திலே இருந்தார்கள். அவர்களை எல்லாம் அந்த அரசு அறிவித்ததாயிற்றே என்று நினைக்காமல் எந்த அரசு அறிவித்தாலும், பணியில் அமர்த்தினால் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் கடமை ஆற்றுவார்கள் என்ற நம்பிக் கையோடு 13,400 பேரை இந்த ஆட்சியிலே நியமித்தோம்.

## 23 ஆயிரம் காவல் பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவர்

அஃதன்னியில் வெகு விரைவில் நியமனம் செய்யப்பட இருப்பவர்கள் ஏறத்தாழ 10 ஆயிரம் பேர். எனவே 23 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நியமனம் செய்யப்



படுவார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல; காவல் துறையிலே உள்ளவர் களுக்குப் பதவி உயர்வு அதிகமாக இல்லை என்ற குறையை நீக்க 25-5-98 அன்று சட்டப்பேரவையில் காவல்துறை மானியத்தில் விவாதங்களுக்குப் பதிலளித்தபோது நான் அறிவித்தேன். காவல்துறை நண்பர்கள் அதை மறந்திருக்க மாட்டார்கள். கூடுதல் கண்காணிப்பாளர்கள் Additional Superintendent of Police என்று எடுத்துக்கொண்டால், 55 பதவி உயர்வுகள் தரப்பட்டுள்ளன. Deputy Superintendent of Police என்று எடுத்துக்கொண்டால் 130 பதவி உயர்வுகள் தரப் பட்டிருக்கின்றன. Inspector of Police (Taluk) என்று எடுத்துக் கொண்டால் 255 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Inspector of Police on reserved என்று எடுத்துக் கொண்டால் 53 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Sub-Inspector of Police (Taluk) என்று 173 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Sub-Inspector of Police என்று எடுத்துக் கொண்டால் 208 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Head Constable என்று எடுத்துக் கொண்டால் 1000 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Grade 1 Police Constable என்று எடுத்துக்கொண்டால் 10,106 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Women head Constable என்று எடுத்துக்கொண்டால் 400 பதவி உயர்வுகள் தரப் பட்டிருக்கின்றன. மொத்தம் 20,500 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன.

காவல்துறையினர் Actual Strength மொத்தம் இருப்பவர்கள் 90,325. இவர்களில் இந்தப் பதவி உயர்வு மூலமாகப் பயன்பெற்றவர்கள் 25.52 சதவிகிதம் மேலும் பதவி உயர்வு அளிப்பது என்ற அடிப்படையில் 15 ஆண்டுகள் பணிபுரிந்த காவலர்களுக்குத் தலைமைக் காவலர் பதவி உயர்வு அளிக்கப்படும் என்று சென்ற ஆண்டு இந்த அரசு அறிவித்ததைத் தொடர்ந்து 9,000 காவலர்கள் தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து இப்பொழுது தலைமைக் காவலர்கள் தங்களையும் உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு செய்யவேண்டும் என்று கோரி வருகிறார்கள்.

இதனையும் இந்த அரசு பரிவோடு கவனித்துப் பத்து ஆண்டுகள் தலைமைக் காவலர்களாகப் பணிமுடித்த வர்களுக்குச் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் (Special S.I.) என்று பதவி உயர்வு அளித்து மற்ற உதவி ஆய்வாளர்களுக்கு இணையான சம்பளத்தை இவர்களுக்கும் வழங்கலாம் என்று இந்த அரசு தீர்மானித்துள்ளது. இதன் மூலம் இரண்டாம் நிலைக் காவலர்களாகப் பணியில் பேரும் ஒருவர் 25 ஆண்டுகளில் உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

காவல்துறையில் ஒரு சிலர் தவறு செய்யக்கூடும். காவல்துறையிலே பணியாற்றுகிறவர்கள் எல்லோரும்

மனிதர்கள் தான். மனிதர்கள் காவல்துறையில் மாத்திரம் அல்ல; மனிதர்கள் டாக்டர்களாகவும், வழக்கறிஞர்களாகவும் பணியாற்றுகிறார்கள்; மனிதர்கள் அரசியல்வாதியாகவும் பணியாற்றுகிறார்கள்; இப்படி பல்வேறு துறைகளில் மனிதர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எல்லாத் துறைகளிலும் சிலர் தவறு செய்யக்கூடும். ஆனால் காவல்துறையில் மாத்திரம் ஒரு சிலர் தவறு செய்தால் அது எல்லோரையும் குறை கூறுகிற அளவிற்கு நாட்டிலே பேசப்படுகிறது.

சிலர் செய்கின்ற தவறுக்குப் பலர் பொறுப்பாளி ஆக வேண்டியிருக்கிறது. அதனால் அந்தச் சிலரும் தவறு செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு நமக்கெல்லாம் இருக்கிறது. தவறு கண்ட இடத்திலே கண்டித்து, தேவைப்பட்டால் தண்டித்து தவறுகளை அறவே ஒழித்து காவல்துறையைப் புடம் போட்ட தங்கமாக ஆற்றுகின்ற பணியில் இன்றைய அரசு ஈடுபட்டு இருக்கிறது. அதற்கு நல்ல ஒத்துழைப்பை என்னுடைய அருமைக் காவல்துறை நண்பர்கள் எனக்கு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## சிறப்புப் புலனாய்வுக்குழு

இந்த ஆட்சியில் கோவையில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் நான் கடந்த காலத்தையோ மற்ற மாநிலங்களையோ ஒப்பிட்டுக்காட்டி நியாயப்படுத்த விரும்பவில்லை. வெள்ளை ஆடையிலே ஒரு கறுப்பு மைத்துளி பட்டது போன்ற ஒரு களங்கம் காவல்துறைக்கும் இந்த அரசுக்கும் - ஏன் தமிழ்நாட்டிற்கும் மதவாதத்தால் - மதவாத மற்ற மண் இந்த மண் என்று பெருந்தலைவர்களால் போற்றப்பட்ட இந்த மண்ணுக்கும் ஏற்பட்டது அந்தக் களங்கம்.

அந்தக் களங்கத்திற்கும்கூட ஏற்ற நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து, தனியாக ஒரு சிறப்புப் புலனாய்வுக்குழு அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு, அந்த விசாரணை வெற்றிகரமாக நடைபெற்று 188 பேர் குற்றவாளிகள் என்று கண்டறியப்பட்டு அதிலே 165 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 8 பேர் குண்டு வெடிப்புகளில் இறந்து போயிருக்கிறார்கள். இந்த வெடிபொருட்கள் கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களில் இருந்துவந்தன என்ற விவரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பாகக் கேரளாவில் இருந்து 11 குற்றவாளிகளும், கர்நாடகாவிலிருந்து 2 குற்றவாளிகளும், ஆந்திராவிலிருந்து 3 குற்றவாளிகளும், கல்கத்தாவிலிருந்து 1 குற்றவாளியும் ஆக 17 குற்றவாளிகள் பிற மாநிலங்களிலிருந்து கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சி..பி.ஐ. வந்தால் தான் பிற மாநிலங்களில் கைது செய்யப்படமுடியும் என்ற வாதத்திற்குப் பதிலளிக்கத் தக்க வகையிலே விடை காணுகின்ற வகையில் நம்முடைய போலீசார்களே மற்ற மாநிலப் போலீசாரோடு தொடர்பு கொண்டு, நாம் அமைத்த சிறப்புக் காவல்துறை அவர்களோடு தொடர்புகொண்டு 17 பேரைக் கைது செய்திருக்கிறார்கள்.

## கோவையிலும், சென்னையிலும் என 2 தனி நீதிமன்றங்கள்

இந்தக் குற்றங்கள் விசாரிக்கப்பட கோவையிலே ஒரு தனி நீதிமன்றம், சென்னையிலே ஒரு தனி நீதிமன்றம் என்று 2 நீதிமன்றங்கள் இன்றைக்கு அமைக்கப் பட்டிருக்கின்றன.

கடந்த 25-ஆம் தேதி அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்போது நடவடிக்கையில் மாத்திரமல்ல; இந்த இரண்டு ஆண்டுக்காலத்திலே பல ரவுடிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். போலீசாரையே கொல்ல முயன்ற, தப்பிக்க முயன்ற ரவுடிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இன்னமும் அறவே ரவுடிகள் அழிந்துவிட்டதாகக் கூறமாட்டேன். தொடர்ந்து போலீசார், காவல்துறையினர் தங்கள் கடமையை ஆற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய குறைகளை நிவர்த்திக்கக் கூடிய ஒரு அரசு, உங்களை எங்களுடைய குடும்பங்களின் உறுப்பினராகக் கருதக்கூடிய ஒரு அரசு இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்ற நல்ல எண்ணத்தோடு நம்பிக்கையோடு உங்கள் பணிகளை ஆற்றுங்கள். நான் உங்கள் பின்னால் இருக்கிறேன்".

- இவ்வாறு முதல்வர் **கலைஞர்** அவர்கள் உரையாற்றினார்.


# தமிழரசு

படிக்க... பயன்பெற... பாதுகாக்க...

**சந்தா விவரம்**

"தமிழரசு" - தமிழ்
(மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ரூ.72

"தமிழரசு" - ஆங்கிலம்
(மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர்
அல்லது
பாங்க் டிராப்ட் மூலம்

அனுப்ப வேண்டிய முகவரி:
**துணை இயக்குநர் (வெ)**
"தமிழரசு" அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை, சென்னை-600 002.


*'தமிழரசு' இதழில் இடம்பெறும் நூல்நயம் பகுதிக்குப் புத்தகங்கள் அனுப்புவோர், ஒவ்வொரு தலைப்பின் கீழும் வெளிவரும் நூல்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு படிகள் அனுப்பிவைக்க வேண்டும்.*

**- ஆசிரியர்**

# வரலாற்றில் காஞ்சி

சென்னையிலிருந்து மேற்கு - தென்மேற்காக 72 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது காஞ்சிபுரம். தென்னிந்தியாவின் பழம்பெரும் நகரங்களில் இதுவும் ஒன்று. அரக்கோணம், செங்கற்பட்டு இருப்புப் பாதை, வேகவதி ஆற்றின் கரையில் உள்ள இந்த நகரத்தை இந்தியாவில் மற்ற நகரங்களோடு இணைக்கிறது.

"காஞ்சிப்புராணம் என்பது சிவஞான முனிவரால் இயற்றப்பட்டது. 2,742 பாடல்கள் உள்ள இது. காஞ்சித் தலத்தின் பெருமையைச் சிறப்பித்துக் கூறும் புராணம். இவர் பாடியது முதல காண்டம் என்றும் இவர் மாணவர் பாடியது இரண்டாம் காண்டம் என்றும், சொல்லப்படுகிறது. வடமொழியில் பலரால் "காஞ்சி மான்மியம்" செய்யப்பட்டுள்ளது.

"காஞ்சிபுரத்தில் - ஒற்றை மாவின் கீழ் கோயில் கொண்டு விளங்குவதனாலேயே 'ஏகம்பர்' கோயில் என்று இக்கோயில் குறிக்கப்படுகிறது. மாமரம் தலமரமாகப் போற்றப்படுகிறது.

ஏகாம்பரேசுவரர் கோயில், அடுத்துக் குமரக் கோட்டம், அடுத்துக் காமாட்சியம்மன் கோயில் என்ற மூன்றும் இங்கே நிரல்பட அமைந்துள்ளமை காஞ்சிபுரத்தின் தனிச் சிறப்பாகும். இவ்வாறு கோயில்களை மையமாகக் கொண்டு வளர்ச்சியுற்ற இந் நகரம் "கோயில் நகரம்" என்றும் கூறப்படும்.

மகாபாரதம், மகாபாடியம், அகநானூறு, குறுந்தொகை, மணிமேகலை, மூவர் தேவாரம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், பெரிய புராணம், நந்திக் கலம்பகம், தேவாரம், பொரும்பாணாற்றுப்படை போன்ற பழம்பெரும் இலக்கியங்களில் காஞ்சிபுரம் பற்றிய குறிப்புகள் கானப்படுகின்றன.

காஞ்சிபுரம் கி.பி. 7,9 ஆம் நூற்றாண்டுகளுக் கிடையில் மேலைப் பாதாமி சாளுக்கியர்கள், இராட்டிர கூடர்களின் படையெடுப்புகளுக்கு உட்பட்டது.


சோழர்கள் காலமான கி.பி. 9ஆம் நூற்றாண்டில், காஞ்சிபுரம் சோழர்களின் பெருநகரங்களில் ஒன்றாக விளங்கியது. முதலாம் இராசேந்திரன், தனது தக்காணப் படையெடுப்பை இந்நகரிலிருந்தே தொடங்கியிருக்கிறான்.

மௌரியப் பேரரசின் அமைச்சராக விளங்கிய சாணக்கியர் பிறந்தது காஞ்சிபுரத்திலேதான் என்பர் வரலாற்றாசிரியர்.

இந்நகர் கி.பி.1310ல் இஸ்லாமியர் ஆதிக்கத்திற்கும் பிறகு மராட்டியர் ஆதிக்கத்திற்கும் உட்பட்டது. அதற்குமுன் ஒய்சாளர், காடவர், தெலுங்குச் சோழன் கண்ட கோபாலன் ஆகியோர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. விஜயநகரப் பேரரசின் ஆட்சிக் காலத்தில், இந்நகரம் தன் பெருமையினை மீண்டும் அடைந்தது.

கி.பி.1752ல் காஞ்சிபுரம் ஆங்கிலேயர் ஆளுகைக்கு உட்பட்டது. கர்நாடகப் போர்களில் தோல்வியுற்ற பிரெஞ்சுப்படை, இந்நகரின் பல பகுதிகளைத் தீயிட்டுச் சூறையாடியது. இந்நகருக்கு ஒரு தனி நகராட்சி நிறுவனம் 1866ல் தான் ஆங்கிலேயரால் தோற்றுவிக்கப்பட்டது.

– காந்தி



காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து சென்ற வண்ணம் இருக்கின்றனர்.

- மாமல்லபுரம்
- வேடன்தாங்கல்
- முட்டுக்காடு
- கோவளம்
- முதலைப்பண்ணை
- அறிஞர் அண்ணா வன உயிரியல் பூங்கா

-இவற்றுடன், திருமலைவையாவூர் போன்ற எண்ணற்ற திருக்கோயில்களும் உள்ள மாவட்டம் காஞ்சிபுரம் மாவட்டம்.

# காலமாற்றம்

முக்தா சீனிவாசன்

"சார்! நான் இதுக்கு முந்தி உங்களை எங்கயோ பாத்திருக்கேன்" என்றார் சீப் என்ஜினீயர் திலக்.

''அப்படியா! எனக்கு உங்களைப் பார்த்த ஞாபகமில்லை'' என்று பதிலளித்தார் ஜெனரல் மானேஜர் சந்தானம்.

''உங்களுக்கு சொந்த ஊர் திப்பிராஜபுரம் தானே?'' என்று மீண்டும் தொடர்ந்தார் திலக். ''இல்லையே! எங்கள் பூர்வீகம் தெற்கே மார்த்தாண்டம்ங்கற ஊராம். அதை நான் பார்த்தது கூட இல்லை. இரண்டு தலைமுறையாக எங்கள் குடும்பம் டெல்லியில் தான் இருக்கிறது. ஆரம்பத்தில் கரோல் பாகிலும் பின்பு டேராடுனிலும் நான் படித்தேன்'' என்று பதில் சொன்னார் சந்தானம்.

"அப்படியா! எனக்கு ஏதோ ஒரு குழப்பம்!" என்று சொல்லிவிட்டு "நான் 'ஸைட்'டுக்குப் போகிறேன்" என்று புறப்பட்டார் திலக்.

''இருங்கள்! என்னைப் பார்த்ததாகச் சொல்லுகிறீர்களே! எந்த அடிப்படையில்?" என்று விசாரித்தார் சந்தானம்.

''ஒன்றுமில்லே! என்னுடைய சொந்த ஊர் திப்பிராஜபுரம்! அங்கே எங்களுக்கு ஏகப்பட்ட சொத்து - இப்போதும் இருக்கிறது. நான் கும்பகோணத்தில் ஒரு இங்கிலீஷ் மீடியம் ஸ்கூலில் படித்தேன். தினம் குதிரை வண்டியில் போய்விட்டு வருவேன். அந்தக் காலங்களில் நான் உங்களைப் பார்த்தது போன்ற ஒரு நினைப்பு! அதான் கேட்டேன். தப்பாயிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றான் திலக்.

"இதில் தப்பு என்ன இருக்கிறது - நான் இந்தப் பக்கத்தை பூர்வீகமாகக் கொண்ட போதிலும் பிறந்தது - வளர்ந்தது, எல்லாம் வட இந்தியாவிலே தான். தமிழ் எழுதப் படிக்கக்கூட இங்கே வந்து தான் கத்துக்கிட்டேன்" என்றார் சந்தானம்.

'அப்ப நான் வரேன் சார்" என்று புறப்பட்டான் திலக்.

அந்த மிகப் பெரிய கன்ஸ்டிரெக்ஷன் கம்பெனிக்கு பம்பாய், டில்லி, கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில் பிராஞ்ச் ஆபீஸ் இருந்தன. கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு மட்டுமே கான்டிராக்ட் எடுக்கும் அவர்களது சென்னைக் கிளைக்கு மானேஜர், சந்தானம். திருவான்மியூர் பகுதியில் அவர்கள் எடுத்திருந்த சில கோடி கட்டட கான்டிராக்டுக்கு ஸ்பெஷல் இன்ஜினீயராகக் கல்கத்தாவில் வேலை பார்த்த திலக்கை சென்னைக்கு அனுப்பி வைத்திருந்தது கம்பெனி நிர்வாகம். அவன் தன் சென்னை அலுவலகத்தில் இணையும்போது தான் ஜெனரல் மானேஜரான சந்தானத்தை முதன்முதலாக பார்த்தான். எங்கேயோ அவரைப் பார்த்த ஞாபகம் இருக்கிறது என்ற குழப்பத்தில் இருந்த திலக், தன் உள்ளூர் உதவியாளன் தரணியுடன் 'ஸைட்'டுக்குப் புறப்பட்டார்.

காரில் போகும்போது திலக், தரணியிடம் பேசிக்கொண்டே வந்தான்.

"மிஸ்டர் தரணி! நான் ஒரு தப்பு செய்யவிருந்தேன், தப்பிவிட்டேன்".

"என்ன என்ன தப்பு சார்?" என்று கேட்டான் தரணி.

''திப்பிராஜபுரத்தில் எங்கள் வீட்டில் துரைசாமி என்கிற குதிரை வண்டிக்காரன் இருந்தான். அவனுக்கு ஒரே பிள்ளை. சந்தானம்னு பேரு. அந்த ஊர் பஞ்சாயத்து எலிமெண்டரி ஸ்கூலில் படித்துக்கொண்டிருந்தான். அவனுக்கும் என்னெ மாதிரி கும்பகோணம் போய் இங்கிலீஷ் மீடியம் கான்வென்ட்டில் படிக்கணும்னு ஆசை! இதைக் கேட்டால் எனக்கு சிரிப்பாய் வரும். பின்பக்கம் கிழிந்துபோன காக்கி டிராயரைப் போட்டுகிட்டு எந்த கான்வென்ட்டுக்கு படிக்கப் போறே நீ? என்று அவனை கிண்டல் செய்வேன். அந்தப் பையன் தான் நம் ஜி.எம். சந்தானமோ என்கிற குழப்பமாயிருந்தது. அதான் கேட்டுட்டேன்" என்றான் திலக்.

''நல்ல வேளை சார்! நீங்க குதிரை வண்டிக்காரன் மகன் தானேன்னு கேட்காம இருந்தீங்களே! அவர் வருத்தப் பட்டிருப்பார். நம்ம மானேஜர் பெரிய குடும்பத்தில் பிறந்து வட நாட்டுலேயே சிறந்த பள்ளிக் கூடமான டூன் ஸ்கூலில் படித்தவர்" என்றான் தரணி.

கார் 'ஸைட்'டை அடைந்தது.

ஆரம்பப் பணிகளை எல்லாம் பார்வையிட்ட திலக் கட்டட வேலையை மளமளவென்று தொடங்கினான்.

மூன்று மாதங்கள் கழித்து ஒரு நாள்-

வேலையின் வளர்ச்சியைப் பற்றி திலக், சந்தானத்திடம் மிகவும் அடக்க, ஒடுக்கமாக விளக்கம் தந்து கொண்டிருந்தான். அப்போது சந்தானம், ''கட்டடம் போக மிச்சமுள்ள எம்பளத்தி ஏழு கிரவுண்டைச் சுற்றி இரும்பு வலை வேலி போட்டுவிடுங்களேன்'' என்றார்.

''எத்துணை கிரவுண்டுக்கு?'' என்று கேட்டான் திலக்.

''எம்பளத்தி ஏழு கிரவுண்டு'' என்றார் சந்தானம். மெல்ல சிரித்தான் திலக்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டார் சந்தானம்.

"தஞ்சாவூர்காரங்கதான் எம்பத்தி ஏழு என்பதை எம்பளத்தேழு என்று உச்சரிப்பாங்க - நீங்க...." என்றான் திலக்.

உடனே சந்தானம், ''எங்க அம்மா-அப்பாகிட்டேருந்து எனக்கு

படிஞ்ச சொல் அது. நான் தஞ்சாவூர் பக்கம் போனதே இல்லை. அங்கே நிறைய கோவில்கள் இருக்கில்லே; ஒருமுறை போயிட்டு வரணும்'' என்றார்.

உடனே, ''நானே அழைச்சிட்டு போரேன். எங்க ஊர் திப்பிராஜபுரம் கூட போயிட்டு வரலாம்'' என்றான்.



''பார்ப்போம்! முதல்லே கட்டட வேலையை முடிப்போம்'' என்றார் சந்தானம்.

''ஆமாம்! உங்க ஊர் என்றால் உங்களுக்கு அவ்வளவு ஈடுபாடா?'' என்று வெறுமனே ஒரு கேள்வியை போட்டுவைத்தார் சந்தானம்.

''ஆமாம் சார்! எங்க வீட்டு குதிரை வண்டிக்காரன் மகன் - உங்க பேர்தான் - அவனுக்கு! அவனைச் சீண்டிவிட்டு அவமானப்படுத்தறது என் சிறு பிராயப் பொழுது போக்கு. ஒருமுறை நான் சக்கரைப் பொங்கல் சாப்பிட்டுக்கிட்டிருந்தேன். அந்த பையன் அந்தப் பக்கமா வந்தான். அவனிடம் நான் சாப்பிட்ட எச்சத்தைக் கொடுத்தேன். தன் மானம் உள்ள அந்த ஏழை அதை தூக்கி விட்டெறிஞ்சுட்டான். நான் அவனை பளார்னு அரைஞ்சு கீழே தள்ளிவிட்டுட்டேன். நெத்தியிலே அடிபட்டு கொஞ்சம் ரத்தம் கூட வந்தது. வலது பக்கம் சின்ன வடு உங்களுக்கு இருப்பது போல'' என்றான் திலக். சந்தானம் தன் நெற்றியைத் தடவி, ''இது டுன் ஸ்கூலிலே கிரிக்கெட் ஆடறபோது பந்து பட்டு ஏற்பட்ட காயம்'' என்று பதில் சொன்னார்.

சைட்டுக்குப் புறப்பட்டான் திலக் தரணியுடன். தனக்கும் சந்தானத்திற்கும் நடந்த பேச்சு வார்த்தைகளை ரமணியிடம் சொன்னான்.

''நல்லவேளை இவர் எங்க குதிரை வண்டிக்காரன் மகன் சந்தானமில்லை. அப்படி இருந்திருந்தால் நான் என் வேலைக்காரன் மகனிடம் வேலை செய்ய விரும்பாமல் இந்த வேலையை ராஜினாமா செய்துவிட்டு ஓடிப்போயிருப்பேன். என்னதான் கால மாற்றம் இருந்தாலும் நம்ம வீட்டிலே 'மீனியல் வொர்க்' பண்ணவன், கீழே நாமே வேலை செய்யறதா! கேவலமில்லையா?'' என்று கூறியபடியே ஆக்ஸிலேட்டரை அழுத்தினான்.

ஒன்பது மாதங்களில் கட்டட வேலைகள் பூர்த்தியாகி விட்டன. திலக் மிகச் சிறப்பாகக் குறுகிய காலத்தில் வேலையை முடித்திருந்தான். கல்கத்தா ஆபீஸ் அவனை இங்கிருந்து வேறு ஒரு [illegible] வேலைக்க[illegible] [illegible]ம்பாய் [illegible]க சொல்லியிருந்தது.

அவனுக்கு வழி அனுப்பு விழா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார் சந்தானம். ஐந்து நட்சத்திர ஹோட்டலில் அந்த விழா நடந்தது. திலக் ''என்னால் இந்த வேலை குறிப்பிட்டபடி முடிக்க ஜி.எம்.சந்தானத்தின் பேராதரவுதான் காரணம். அவருக்குக் கீழே வேலை செய்தது எனக்கு ஒரு நல்ல அனுபவம் மட்டுமல்ல; ஒரு பெரிய பெருமை'' என்று கூறினான்; தொடர்ந்து, ''அவரை நான் சில முறை ஒரு மனவருத்தம் கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்திவிட்டேன். எங்கள் திப்பிராஜபுரம் வீட்டில் குதிரை வண்டிக்காரன் மகனை இவரோடு ஒப்பிட்டுச் சந்தேகமாகக் கேள்வி கேட்டுவிட்டேன். பெரிய குடும்பத்தைச் சேர்ந்த ''டுன்'' ஸ்கூலில் படித்த அவரை இப்படிக் கேட்டது தவறு. அதை அவர் பொருட்படுத்தாதது அவரது கண்ணியத்தைக் காட்டுகிறது. என் தவறுக்கு என்னை மன்னித்துவிடுங்கள் ஐயா'' என்றான்.

புன்முறுவல் பூத்தார் சந்தானம். தன் மனதிற்குள் ''திலக்-உனது வீட்டு வண்டிக்காரன் மகன் தானப்பா இந்த சந்தானம். என் நெற்றியில் இருப்பது நீ தள்ளிவிட்ட வடுதான். என் கீழே வேலை செய்வது உனக்கு கௌரவக் குறைவு என்று நீ வேலையைவிட்டு ஓடிவிடுவாயோ என்கிற எண்ணத்தில் ஆரம்பத்திலிருந்து உன்னை எனக்குத் தெரியாது என்று கூறிவந்தேன். உன்னிடம் அவமரியாதைப்பட்டு முனிஸிபல் எலிமெண்டரி ஸ்கூலில் படித்த நான், சென்னைக்கு ஓடிவந்து, ஒரு மடத்தில் சேர்ந்து அவர்கள் உதவியால் பெரும் படிப்பு படித்து வளர்ந்த வரலாறெல்லாம் உனக்குத் தெரிந்து என்ன பயன்? நீ கட்டடத்தைச் சிறப்பாக முடிக்கவேண்டும் என்பதற்காக என்னை நான் மறைத்துக் கொண்டேன். சரி வேலை முடிந்தது. போய் வா'' என்று நினைத்துக் கொண்டார். திலக் தன் முன்பு கைகூப்பி நிற்பதைக் கண்டு, அன்போடு அவனது கைகளைப் பிரித்து விட்டுக் கன்னத்தில் தட்டிக் கொடுத்தார் சந்தானம்.

# சமத்துவபுரம்

## ஒரு உன்னதத் திட்டம்

**– தியாகி ஜி.கே.கண்ணன்**

காஞ்சிபுரம் மாவட்டம், ஏராளமான இந்திய சுதந்திரப் போராட்டத் தியாகிகள் வாழ்ந்த – வாழ்கிற மாவட்டம் ஆகும். தியாகிகளை மதித்துப் போற்றிவரும் அரசு இது என்பதனாலே, அவர்களில் யாராவது ஒருவரைச் சந்திப்பது என்கிற எண்ணத்தோடு அங்குசென்ற நமக்கு, 79 வயதுத் தியாகியான பெரியவர் திரு. ஜி.கே.கண்ணன் அவர்கள் கிடைத்தார்.


தன்னலம் கருதாத் தியாகியே அவர் என்பதற்கு, 42 ஆண்டு காலமாக அவர் வாழ்ந்து வரும் அந்தப் பழைய வாடகை வீடே சான்றுபோல் தெரிந்தது.

"இந்திய நாட்டு விடுதலைக்காக நீங்கள் பலமுறை சிறை சென்றதும், அந்தக் காலத்தில் இந்தக் காஞ்சிபுரம் நகரசபைத் தலைவராக இருந்த டாக்டர் சீனிவாசனே – உடல்நலம் இல்லாமல் நீங்கள் இருந்ததால் தனிநபர் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்காமலிருக்க விலக்கு அளிக்குமாறு காந்தியாருக்கு எழுதி அனுமதி பெற்றதும் எங்களுக்குத் தெரியும்..."

அவர் குறுக்கிட்டார் – "ஆனால், ஒரு விஷயம். அதுபோல் சவுகரியம் இல்லாமல் இருந்தபோதும் கூட .... இங்கிருந்து சென்னைவரை நானும் நடந்தே போனேன். அங்கே என்னைத் தவிர எல்லோரையும் கைது பண்ணினார்கள். இன்னொரு விஷயம்... இதில்தான் நான் கைதாகவில்லையே தவிர, 1942ல் நடந்த வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் கலந்து கொண்டு, வேலூர், கண்ணனூர், தஞ்சாவூர் சிறையிலெல்லாம் இருந்திருக்கிறேன்; என்னோடு ஆர்.வி., சஞ்சீவரெட்டி போன்ற பெரியவர்களெல்லாம் சிறையிலிருந்தார்கள் தெரியுமோ?"

"இருக்கட்டும்; இப்படிப்பட்ட தியாகியான உங்களைக் காங்கிரஸ் அரசுக்குத் தெரியாதா – அவர்கள் ஒரு சொந்த வீடு கிடைக்கக் கூடவா உங்களுக்கு உதவவில்லை?"

"இதை அப்படிச் சொல்லக்கூடாது; நானும் கொஞ்சம் அசிரத்தையாக இருந்தேன். ஒரு மகன் இரண்டு மகள் என்றெல்லாம் ஆன



**கா**ஞ்சிபுரத்தில் மிகச் சிறப்பாகப் போற்றப்படும் கோயில்கள் 82 ஆகும். அவற்றைச் சைவக் கோயில்கள், வைணவக் கோயில்கள் என இரண்டாகப் பிரிக்கலாம்.



கைலாசநாதர் கோயில்

அவற்றில் குறிப்பிடத்தக்க சிறப்புடையவை - அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், வரதராசப் பெருமாள் கோயில், காமாட்சியம்மன் கோயில், கைலாசநாதர் கோயில், வைகுண்ட பெருமாள் கோயில், குமரக் கோட்டம், சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயில் ஆகியவைகளாகும்.

பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட கைலாசநாதர் கோயில் சிற்பங்கள் சிறப்புமிக்கவை. "பிண்டி" என்றொரு நூதனக் கல்வகையில், அவை மிக நுணுக்கமாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. இக்கோயிலில் "சொர்க்கவாசல்" நுழைவு என்பது மிகப் பிரச்சித்தம். வெளிநாட்டுப் பயணிகள் உட்பட ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இங்கே வந்து போகின்றனர்.

மாவட்ட அளவில் பார்த்தால் 108 சிவாலயங்களும், 18 வைணவ ஆலயங்களும் உள்ளன. வல்லக்கோட்டை முருகன் கோயில், ஏரிகாத்த இராமர் கோயில், திருப்போரூர் முருகன் கோயில், திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவர் கோயில் போன்ற பல கோயில்கள் மிகச் சிறப்புற விளங்குகின்றன !.

பிறகுதான் அந்த நினைப்பே வந்தது. அதிலும் என் மகனுக்குத் திருமணம் ஆன பிற்பாடு... ஏன் ஒரு சொந்த வீட்டுக்கு இடமாவது கேட்கக் கூடாது என்கிற எண்ணம் வந்தது. கலெக்டரைப் போய்ப்பார்த்து.. இதுபற்றிப் பேசி மனுக்கொடுத்தேன். இந்த ஜில்லாவில் அமையவிருக்கிற சமத்துவபுரத்தில் கட்டாயம் உங்களுக்கு ஒரு வீடு கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என்றார். இப்போது அந்தப் பட்டியலில் என் பெயர் இரண்டாம் இடத்தில் இருப்பதாக அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். ஏதோ என்போன்ற தியாகிகளுக்கு... இந்த அரசும், கலெக்டரும் கொஞ்சம் இரக்கத்தோடு உதவி செய்வதாகத் தெரிகிறது. சமத்துவபுரம்கிறது ஒரு உன்னதமான திட்டம்தானுங்க..."

"அது சரி, நீங்கள் இந்த ஊரில் அண்ணாவைப் பார்த்திருப்பீர்களே.. பேசிப் பழகிய சந்தர்ப்பம் ஏதேனும் உண்டா?"

"நிறைய உண்டு. ஆனால் அப்போது நாங்கள் எதிரெதிர் அரசியல் முகாமில் இருந்ததால் அவ்வளவு நல்லப்பழக்கம் இருந்ததில்லை!"

"அப்படியானால்.... உங்களுக்கு அண்ணாவை அறவே பிடிக்காதா?

நாம் இப்படிக் கேட்டதும் ஈஸி சேரில் இருந்த பெரியவர் கண்ணன் சற்றே நிமிர்ந்து உட்கார்ந்தார் "அதுமாதிரி சொல்ல முடியாது. ஒரு விஷயத்துல அவரைப் பத்தி எனக்கு கவலையே ஏற்பட்டதுண்டு. அது என்னன்னா... ஒருதரம் சட்ட சபையில பேசறப்ப, நான் உயிரோட இருக்கிற வரைக்கும் கள்ளுக்கடை சாராயக்கடையைத் திறக்கவே மாட்டேன்னு சொல்லிப் பேசினார். அதே மாதிரி... கடைசிவரை இருந்த அவர் செத்துப் போய்ட்டாரேங்கிற கவலைதான் அது! என்று கூறிப் பெருமூச்செறிந்தார்.

தியாகி. கண்ணன் தனது ஒரே மகனைக் காஞ்சிபுரம் சர்வோதய சங்கம் கதர்க்கடையில் வேலைக்குச் சேர்த்துவிட்டிருக்கிறார்; மாநில அரசு தரும் ரூ.515, மத்திய அரசு தரும் ரூ.3,000 தியாகிகள் ஓய்வூதியத்தில் மிக எளிமையாகக் காஞ்சிபுரத்திலேயே குடும்பம் நடத்தி வருகிறார். கணீரென்று பேசிய அவரைவிட, அவர் மனைவி சரஸ்வதிபாய் மிகுந்த தளர்ச்சியோடு நம் கண்ணுக்குத் தெரிந்தார். ☀

---

(சூளா என்கிற புகையில்லா அடுப்பு, காஞ்சிபுரம் மாவட்டத்தில், அனேகமாக எல்லாக் கிராமங்களிலும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது; அதன் சிறப்பை விளக்கும் கவிதை இது.)

# சூளா புகையில்லா அடுப்பு

- க.சு. அகஸ்தியன்
உதவிப் பொறியாளர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
காஞ்சிபுரம்.

அடுக்களையில் புகையில்லா அடுப்பு - இனி
அன்னையர் முகத்திலே சிரிப்பு;
பாத்திரத்தில் இல்லை கரி பிடிப்பு - அதைத்
தேய்ப்பதிலே இல்லை இனி அலுப்பு!

ஊதி ஊதி பட்டது பெரும் சலிப்பு - இனி
ஊதாமல் எரியுமிந்த அடுப்பு;
விறகுக்குச் செலவிங்கே குறைப்பு - தேவை
வீட்டிற்கோர் புகையில்லா அடுப்பு!

சுவாசமே பகையாகும் தவிப்பு - இனி
புகைக்கே இங்கு ஒரு தடுப்பு;
கண்களுக்கு இல்லை புகை எரிச்சல் - இனி
வாராது பார்வைக்குக் குறைச்சல்!

புகையே மனிதனுக்குப் பகையாம் - வரும்
நோய்கள் அத்தனைக்கும் துணையாம்;
நோயில்லா வாழ்வுதான் சிறப்பு - நோய்
வருமுன்னர் காப்பதுவே பொறுப்பு!

எல்லாமே நமக்கு ஓர் படிப்பு - தேவை
வீட்டிற்கோர் புகையில்லா அடுப்பு;
அமைத்திடுவீர் புகையில்லா அடுப்பு - பின்
அடைந்திடுவீர் விந்தைமிகு சிறப்பு!



# "தமிழகத்தில் துவக்கப்படும் சமத்துவபுரங்களில் இனி சாதிகளை மறந்து தமிழர்களாய் இருப்போம்!"

**- கலைஞர்**

— 30.9.1998ல் புதுக்கோட்டையில் நடைபெற்ற சமத்துவபுரம் திறப்புவிழாவில் பேசியதிலிருந்து.....

"இந்த அரசின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டத்தில் சற்றொப்ப 38 கோடி ரூபாய் அளவுக்குப் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அதிலே வேலை முடிந்து திறந்துவைக்கப்படுகின்ற திட்டங்களின் மதிப்பு 11 கோடியே 38 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய். அடிக்கல் நாட்டப்படும் திட்டங்களின் மதிப்பு 16 கோடியே 96 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய். பயனாளிகளுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்களின் மதிப்பு 9 கோடியே 82 இலட்சத்து 14 ஆயிரத்து 85 ரூபாய். ஆக இந்த விழாவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மொத்தம் 38 கோடியே 11 இலட்சத்து 56 ஆயிரத்து 85 ரூபாய் மதிப்பிலே பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன.

இந்தச் சமத்துவபுரம் திட்டத்தைக் கடந்த ஆண்டு அறிவித்து ஒவ்வொரு மாவட்டத்திலும் இன்றைக்கு அந்தத் திறப்பு விழாக்கள் நடைபெறுகின்றன. அந்த வகையில் பார்த்தால் இது 5–வது சமத்துவபுரமாகும்.

இந்தச் சமத்துவபுரம், புதுக்கோட்டை நகராட்சி எல்லைக்கு அருகில் 12 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. புறம்போக்காக இருந்த அந்த நிலம் நத்தம் புறம்போக்காக வகை மாற்றம் செய்யப்பட்டு சமத்துவபுரம் இங்கே அமைக்கப் பட்டுள்ளது. மொத்தம் 100 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு மனையும் 5 செண்ட் என்ற அளவில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த சமத்துவபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒரு வீட்டின் மொத்தப் பரப்பளவு 239 சதுர அடி. ஒவ்வொரு வீடும் 38,000 ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் சமையல் அறை மற்றும் சுகாதாரக் கழிப்பறை இணைத்துக் கட்டப்பட்டுள்ளது.

**குடிநீர் – சாலை – கல்வி வசதிகள்**

எதிர்காலத்தில் இதை விரிவுபடுத்திக் கட்டும் பொருட்டும் நல்ல காற்றோட்டம் மற்றும் குடியிருப்போரின் வசதிக்காகவும், முன் பக்கமும் பின் பக்கமும் வாயிற் கதவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வீட்டிலும், புகையில்லாத சோலார் அடுப்புகள் பொருத்தப் பட்டுள்ளன.

வீடுகளின் மேல் கூரையில் ஓடுகள் பதிக்கப் பட்டுள்ளன. சமத்துவபுர மக்களின் குடிநீர்த் தேவையைப் போக்கிடும் பொருட்டு 7 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சமத்துவபுரத்திலிருந்து 1.5 கிலோ மீட்டர் தூரத்தில் அதற்கான நீர் ஆதாரம் ஏற்படுத்தப்பட்டு 7.5 குதிரை சக்தி கொண்ட மின் இணைப்பான் மற்றும் பேகன் மூலம் குடிநீர் சமத்துவபுரத்திற்குக் கொண்டு வரப்பட்டு சமத்துவபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள 30 ஆயிரம் எக்டேர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்றப்படுகிறது.

இதிலிருந்து பகிர்மானக் குழாய்கள் மூலம் 2,200 மீட்டர் நீளத்திற்கு அமைத்து, அதன் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்படவிருக்கிறது. இதற்காக 12 பொதுத் தெருக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. சமத்துவபுரத்தின் மின்சாரத் தேவைகளுக்காக 7 இலட்சம் ரூபாய் செலவில் 230 கிலோ வாட் சக்தியுள்ள மின் மாற்றி மற்றும் 48 மின் கம்பங்கள் அமைக்கப் பட்டுள்ளன. சமத்துவபுரம் தெருக்களில் 24 குழல் விளக்குகளும், 3 சோடியம் ஆவி விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

அனைத்து வீடுகளுக்கும் அரசு செலவில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. சமத்துவபுரத்திற்குச் செல்லும் சாலையும், மற்ற சாலைகளும் 1,610 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளன. சமத்துவபுரத்திலுள்ள குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளுக்கும் அதன் அருகில் உள்ள குக்கிராமங்களைச் சேர்ந்த குழந்தை களுக்கும் கல்வி கற்பதற்கு 4.7 இலட்சம் ரூபாய் செலவில் தொடக்கப் பள்ளி ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. துவக்கப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மதிய உணவுத் திட்டத்தின் கீழ், மதிய உணவு தயாரிக்க 40 ஆயிரம் ரூபாய் செலவில் சமையல் கூடம் ஒன்றும் கட்டப் பட்டுள்ளது. பள்ளி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 32 ஆயிரம் ரூபாய் செலவில் கழிப்பிட வசதி செய்யப்பட்டுள்ளது. பள்ளிக் கட்டடத்தின் ஒரு பகுதியில் மாலை நேரங்களில் இயங்கும் வகையில் மாவட்ட அறிவொளி இயக்கத்தின் வளர் கல்வி நூலகமும், படிப்பகமும் செயல்பட உள்ளன.

**பொதுவிநியோக அங்காடி – குழந்தைகள் ஊட்டச்சத்து மையம்**

இந்த சமத்துவபுரத்தில் வாழும் மக்களின் வசதிக்காகப் பொது வினியோக அங்காடி ஒன்று

1 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் சமத்துவபுரம் உள்ளிட்ட சுற்று வட்டாரப் பகுதியில் 573 குடும்ப அட்டைதாரர்கள் பயன் அடைவார்கள். இந்த அங்காடி மூலம் அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை மட்டுமின்றி, மளிகைப் பொருட்கள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சமத்துவபுரத்தைச் சேர்ந்த குழந்தைகளின் நலன் மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக ஊட்டச் சத்து மையம் அமைத்திட 1 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

இங்கு வாழும் மக்களின் பொதுச் சுகாதாரம் மற்றும் நல வாழ்விற்குப் பகுதி நேர சுகாதார நிலையம் ஒன்றும் தாய் சேய் நல நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. இத் தேவைக்காக மருத்துவரும், கிராம சுகாதாரச் செவிலியரும் தினந்தோறும் 2 மணி நேரம் பணியிலே இருப்பார்கள். இச் சுகாதார கட்டடம் 53 ஆயிரம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டுள்ளது. சமத்துவபுரத்தில் சுகாதாரத்தை பேணுவதற்காகக் கழிவு நீர் வாய்க்கால் வசதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக 4 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு 1,100 மீட்டர் நீளம் உள்ள கழிவு நீர் வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது.

உலக நடப்புகளை அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில் இச் சமத்துவபுரத்தில் ரூ.17 ஆயிரம் செலவில் தொலைக்காட்சி அறை கட்டப்பட்டு 15 ஆயிரம் ரூபாய் செலவில் தொலைக்காட்சிப் பெட்டி நிறுவப்பட்டு உள்ளது. ஒழுங்கான முறையிலே டெண்டர் விடப்பட்டு, ஒழுங்கான முறையில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அங்கே வைக்கப்பட இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### பேருந்து வசதிகள்-குழந்தைகள் பூங்கா


மத்தியப் பேருந்து நிலையத்திலிருந்து சமத்துவபுரத்திற்குத் தினந்தோறும் மூன்று முறை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து சென்று வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அஞ்சல்பெட்டி ஒன்றும் இங்கு நிறுவப்பட்டுள்ளது. சாதி மாதப் பாகுபாடுகள் இன்றி அனைவரும் பயன்படுத்தவும், சமத்துவபுரத்தில் வாழும் மக்களது குடும்பங்களின் பொது நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தும் வகையிலும் 3 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் செலவில் சமுதாயக்கூடம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கூடத்தில் குடிநீர், மின்சார வசதிகளுடன் கூடிய சமையற்கூடம், இருப்பு அறை நான்கு மற்றும் பெண்களுக்குத் தனித்தனியாகக் கழிவறை ஆகிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பொழுதுபோக்கிற்காக 50 ஆயிரம் ரூபாய் செலவில் பூங்கா ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அங்கே குழந்தைகள் விளையாடுவதற்குப் பல்வேறு விளையாட்டுப் பொருட்களும் அமைக்கப்பட்டுள்ளன. இங்கே மற்ற சமத்துவபுரங்களில் இல்லாத சிறப்பு இயற்கையாகவே ஒரு சிறப்பு அம்சமாக ஒரு ஓடை இங்கே அமைந்திருக்கின்றது. இந்த ஓடைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஓர் பெயர் வைத்து "சமத்துவபுரக் குளம்" என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சமத்துவபுரக் குளத்தையே இங்கே உருவாக்கி இருக்கிறார். இதையெல்லாம் நான் கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

### சாதி மதச் சண்டைகளுக்கு இடம் தராத தமிழகம்

இந்தியாவிலேயே, குறிப்பாகத் தமிழகத்தில் மத, சாதிப் பூசல்கள் தலை காட்டியதில்லை. அதே நேரத்தில் வடபுலத்தில் அந்தப் பூசல்கள் அதிகம் உண்டு. ஆனால், பெரியார், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத், தேவர் திருமகன், அம்பேத்கர் –போன்றவர்களுடைய கொள்கைகள் தமிழகத்தில் மற்ற மாநிலங்களைவிட ஆழமாகப் பதிந்திருக்கின்ற காரணத்தால் சாதி மத பேதங்களுக்கு, சாதிச் சச்சரவுகளுக்கு இடம் தராத பூமியாக இந்த பூமி இருந்துகொண்டிருக்கின்றது.

இடையிடையே அவ்வப்போது முதுகுளத்தூர் கலவரங்கள் நடைபெற்றிருக்கலாம். இடையிடையே விழுப்புரங்கள் நடத்திருக்கலாம். அது யார் யாருடைய ஆட்சிக்காலத்திலே என்பதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். இப்பொழுது இந்த ஆட்சிக் காலத்தில்







*மக்களுடைய*
*வாழ்க்கைக்குப்*
*பயன்படக் கூடியதும்,*
*அறிவையும், திறமையையும்,*
*தைரியத்தையும் உண்டாக்கக்*
*கூடியதும் ஆகிய சிறந்த கலைகளை*
*யெல்லாம் தமிழில் செய்வதன் மூலம்,*
*மக்களுடைய அறிவையும் தமிழ்*
*மொழியையும் செம்மை செய்வதே*
*உண்மையான தமிழ் உணர்ச்சியாகும்.*

**— தந்தை பெரியார்**

ஓரிரு கலவரங்கள் நடைபெற்றிருக்கலாம். ஆனால், நிரந்தரமாகக் கலவரம் நடைபெறும் பூமியாக வடபுலத்திலே சில மாநிலங்கள் இன்றைக்கும் இருந்து வருகின்றன. இந்தக் கலவரங்கள் கூட, இந்த அமளிகள் கூட தமிழகத்திலே இருத்தலாகாது என்பதற்காகத்தான் பெரியார், அண்ணா போன்ற தலைவர்களெல்லாம் அரும்பாடுபட்டார்கள். இன்றைக்கும் அவர்கள் வழிநின்று அவர்கள் எண்ணத்தை நிறைவேற்றி வைப்பதற்காக நாம் செயல் வடிவத்திலே இந்தச் சமத்துவபுரங்களைக் கண்டிருக்கின்றோம்.

### அறந்தாங்கியில் சர்க்கரை ஆலை

வரலாறுகளைத் தவறாகச் சொன்னால் எதிர்காலத்தில் அது இடிக்கும். குறிப்பாக, இங்கே அறந்தாங்கி சர்க்கரை ஆலை பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். தம்பி திருநாவுக்கரசு அவர்கள் இந்த அறந்தாங்கி சர்க்கரை ஆலைக்காகச் சட்டமன்றத்திலே எவ்வளவு நாள் வாதாடினார், எப்போதெல்லாம் வாதாடினார் என்றெல்லாம் எனக்குத் தெரியும். இந்த ஆட்சியிலே மாத்திரமல்ல. கடந்த ஆட்சியிலும் அவர் வாதாடியிருக்கிறார். கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றை அறந்தாங்கியில் அமைக்க மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டிருந்தது. ஆனால், ''அந்தப் பகுதிக்குக் கரும்பு ஆலையே தேவையில்லை'' என்று முடிவெடுக்கப்பட்டு மத்திய அரசுக்கு அறிவித்தது எந்த ஆட்சி என்பதை தயவுசெய்து நீங்கள் எல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அந்தப் பகுதிக்கு சர்க்கரை ஆலையே தேவையில்லை என்று மாநில அரசு முடிவெடுத்து விட்டது என்று மத்திய அரசுக்குக் கடிதம் மூலமாக அறிவித்த ஆட்சி இந்த ஆட்சி அல்ல. இதற்கு முன்பு இருந்த ஆட்சி என்பது தம்பி திருநாவுக்கரசுக்குத் தெரியும். ஏனென்றால், அவர் நீண்டகாலமாக இந்த வட்டாரத்திலே மக்கள் பிரதிநிதியாக இருக்கிறார். அதிலும் குறிப்பாக அவருடைய தொகுதிக்காகப் பலமுறை சட்டமன்றத்தில் வாதாடியவர். அவருக்கு நன்றாக ஞாபகம் இருக்கும். மீண்டும் தம்பி திருநாவுக்கரசு சட்டமன்றத்தில் அதற்காக வாதாடியபோது, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் மத்திய அரசுக்கு நான் பரிந்துரை செய்தேன், மத்திய தொழிலமைச்சராகத் தம்பி முரசொலிமாறன் அப்போது இருந்தார். அவர் ஏற்றுக்கொண்டு தனியார் நிறுவனமான டி.ஐ.பாரி கம்பெனிக்கு அங்கே சர்க்கரை ஆலை தொடங்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

### மூடப்பட்ட நூற்பாலையைத் திறக்க ஏற்பாடு

ஆனால், அரசு மட்டத்தில் வழங்கப்படவேண்டிய அனுமதிகள் அனைத்தும் எதுவுமே நிலுவையில்லாமல் வழங்கப்பட்டு விட்டது. இடம் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதற்கு வேண்டிய உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவரும், செய்துவருகிறார். விரைவில், இடத் தேர்வு முடிவு பெற்றதும் திருநாவுக்கரசு அழைத்து வர, அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சிக்கு நிச்சயம் நான் வருவேன்.

கூட்டுறவு நூற்பாலையைப் பற்றி இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் சொன்னார். இந்தக் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டது தி.மு.க. ஆட்சியில் அல்ல; கடந்த ஆட்சியில்தான் இந்த ஆலை மூடப்பட்டது. அந்த ஆலையை மீண்டும் திறக்க இந்த ஆட்சியில் தேவையான நிதி உதவிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதைப் பயன்படுத்தி ஆலையை மீண்டும் தொடர்ந்து நடத்திடத் தேவையான பணிகள் இன்னும் இரண்டு வாரங்களில் தொடங்கப்படவுள்ளது.

ஏற்கெனவே, இதற்கு அனுமதித்துள்ள தொகை, மொத்தமாக இந்த ஆலைகளையெல்லாம் திறக்க 145 கோடி ரூபாய். நிதி ஒதுக்கீடு இதற்காகச் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு வாரத்திலே இந்த அறந்தாங்கி கூட்டுறவு நூற்பாலையைத் திறப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### இது உங்கள் அரசு

பொதுவாக இந்த ஆட்சியில் குறைகளைச் சொல்லுங்கள், திருத்திக் கொள்கிறோம். குற்றங்களைச் சொல்லுங்கள் உண்மையா என்பதை அறிந்து உண்மையாக இருந்தால், அந்தக் குற்றத்தில் ஈடுபடுகின்றவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

அப்படிப்பட்ட அரசுதான் உங்களோடு இருந்து உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு உங்களுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற அரசுதான் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஏழை எளியவர்கள், நடுத்தர மக்கள், சாதாரண சாமான்ய மக்கள் அவர்களுடைய பிரச்சினைகளை மையமாக வைத்துத்தான் இந்த அரசுச் சக்கரம் சுழன்றுகொண்டிருக்கின்றது அப்படித்தான் சுழலவேண்டும் என்பது என்னை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணாவின் ஆணை. அந்த ஆணைப்படி நடக்கின்ற காரணத்தால்தான் இன்று அவர்களுடைய அருமைக் கொள்கையான சமதர்மத்தை நிலைநாட்டப் புதுக்கோட்டையில் சமத்துவபுரம் திறந்துவைக்கப் பட்டிருக்கின்றது. ஏழை எளிய மக்களுக்கான திட்டங்கள், நடுத்தர மக்களுக்கான திட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன''.

●


காஞ்சிபுரத்தில் –
புதுப்பிக்கப்பட்டுள்ள
அன்னை அஞ்சுகம்
திருமணக் கூடம்



← வெளித் தோற்றம்



↑ உட்புறம்



← உணவுக் கூடம்

# அரசு ஆணைகள்

ஓய்வுபெற்ற அதிகாரி திரு.எஸ்.சிவசுப்பிரமணியன் அவர்களைக் கொண்டு அமைத்த ஒரு நபர் கமிஷன், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட திருத்திய ஊதிய விகிதத்திலுள்ள முரண்பாடுகளை ஆய்வு செய்து, மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையாக மாநில ஆசிரியர்களுக்குத் திருத்திய ஊதிய விகிதம் வழங்கலாம் என்று பரிந்துரைத்தது. இதனை ஏற்று ஆசிரியர்கள் ஊதிய விகிதங்களை அரசு திருத்தி வழங்கியது. இதன் காரணமாக அமைச்சுப்பணி பதவிகளுக்கும், ஆசிரியர் பதவிகளுக்கும் இடையே ஊதிய இடைவெளி ஏற்பட்டுள்ளது என்றும், இதனை நிவர்த்தி செய்யப் பதிவறை எழுத்தர், இளநிலை உதவியாளர், உதவியாளர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகிய பதவிகளுக்குத் தற்பொழுது வழங்கப்படும் ஊதிய விகிதங்களை உயர்த்தி வழங்கவேண்டுமென்று அலுவலர் சங்கங்கள் அரசுக்குக் கோரிக்கைகள் வைத்துள்ளன.

ஆசிரியர்களுக்கு உயரளவு ஊதிய விகிதங்களைப் பரிந்துரைத்த ஒரு நபர் கமிஷன், பதிவறை எழுத்தர், இளநிலை உதவியாளர், உதவியாளர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகிய பதவிகளில் உள்ளவர்களுக்கு மட்டும் ஊதியத்தில் 5 விழுக்காடு தனி ஊதியமாக வழங்கலாம் என்று பரிந்துரைத்துள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு, அலுவலர் சங்கங்களின் கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலித்த அரசு ஏற்கெனவே மேற்படிப் பதவிகளுக்கு, மத்திய அரசில் உள்ள பதவிகளுக்கு இணையான ஊதிய விகிதம் வழங்கப்பட்டுள்ளதால், மேலும் இவர்களது ஊதிய விகிதங்களைத் திருத்தி வழங்கச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை அறிந்தது. இவர்களது ஊதிய விகிதங்களில் எந்த ஒரு மாற்றம் செய்தாலும் இருக்கின்ற ஊதிய விகித அமைப்பைச் சீர்குலைக்கும். ஆயினும், இவர்களது கோரிக்கையைக் கவனமாக கருத்தில்கொண்டு, ஊதியத்தில் ஏற்பட்டுள்ள வித்தியாசத்தை ஈடுசெய்யும் விதத்தில், இவர்கள் அனைவருக்கும் ஊதியத்தில் 5 விழுக்காடு தனி ஊதியம் (Personal Pay) வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இத் தனி ஊதியம் 1-1-96க்கு முன்பு 5 விழுக்காடு தனி ஊதியம் பெற்று வந்த அனைத்துப் பணியிடங்களைச் சார்ந்த பணியாளர்களுக்கும் பொருந்தும். இந்தத் தனி ஊதியம் 1-9-98 அன்று பெற்ற அடிப்படை ஊதியத்தில் கணக்கிட்டு 1-9-98 முதல் வழங்கப்படும்.

இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ.82.66 கோடி கூடுதலாகச் செலவாகும். இதனால் சுமார் 2.47 இலட்சம் அலுவலர்கள் பயனடைவார்கள்.

மத்திய அரசு 5-வது ஊதியக்குழு பரிந்துரைகளின் அடிப்படையில், தமிழக அரசு ஊழியர்களுக்கு ஊதிய விகிதங்களை 1-1-96 முதல் திருத்தி அமைத்துள்ளதன் மூலம், ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு 1,200 கோடி ரூபாய்.

இந்தப் புதிய ஊதிய விகிதங்களை நடைமுறைப்படுத்தியதால் 1-1-1996 முதல் 31-3-1998 வரை வழங்கப்படும் நிலுவைத் தொகை 2,400 கோடி ரூபாய்.

அதில் இந்த ஆண்டு மட்டும் நிலுவைத் தொகை வழங்க ஒதுக்கப்பட்ட தொகை 1,100 கோடி ரூபாயாகும்.

ஆசிரியர்களுக்கிடையிலான ஊதிய முரண்பாடுகளை ஒருநபர் கமிஷனின் பரிந்துரையின் அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளதன் காரணமாக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு 75 கோடி ரூபாய்.

சத்துணவுப் பணியாளர்களுக்குப் புதிய ஊதிய விகிதங்கள் வழங்கியதன் காரணமாக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகும் கூடுதல் செலவு 60 கோடி ரூபாய்.

1-1-96க்கு முன்பு 5 விழுக்காடு தனி ஊதியம் பெற்றுவந்த அனைத்துப் பணியாளர்களுக்கும் 1-9-98 அன்று பெற்ற அடிப்படை ஊதியத்தில் 5 விழுக்காடு தனி ஊதியம் (Personal Pay) வழங்கப்படும் என்ற அரசு ஆணையின்படி ஏற்படும் கூடுதல் செலவு 82.66 கோடி ரூபாயாகும்.

அரசு ஊழியர்களுக்குப் பழைய ஊதிய விகிதத்தில் சம்பளமாக வழங்கப்பட்ட ஓர் ஆண்டு செலவினம் 5,230 கோடி ரூபாயாகும்.

ஓய்வு ஊதியதாரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை, ஆண்டு ஒன்றுக்கு 1,250 கோடி ரூபாயாகும்.

மொத்தமாக அரசு ஊழியர்களுக்கு 7,750 கோடி ரூபாயும், ஓய்வூதியதாரர்களுக்கு 1,250 கோடி ரூபாயும் சேர்த்து இந்த ஆண்டு 9,000 கோடி ரூபாய் செலவாகும்.

இஃதன்னியில் அரசு உதவிபெறும் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஆகும் ஆண்டு செலவு 1,166 கோடி ரூபாயாகும்.

எனவே இந்த ஆண்டு செலவு ஆகமொத்தம் 10,166 கோடி ரூபாய். ★

தமிழகத்தில் கல்லூரிக் கல்வித்துறை தொடங்கப்பட்ட 1965ஆம் ஆண்டு முதல் இதுவரையில் நியமனம் செய்யப்பட்ட கல்லூரி ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 5,134. இவர்களில், இட ஒதுக்கீடு முறைப்படி தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்காக ஒதுக்கப்படக்கூடிய 19 விழுக்காடு இடங்களில் நியமனம் செய்யப்பட்டிருக்க வேண்டிய இப்பிரிவுகளைச் சார்ந்த கல்லூரி ஆசிரியர்களின் எண்ணிக்கை 972.

ஆனால், தற்போது தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்புகளைச் சார்ந்த 377 ஆசிரியர்கள் மட்டுமே கல்லூரிகளில் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டுப் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்குரிய விகிதாச்சார முறைப்படி மேலும் 595 ஆசிரியர்களைக் கல்லூரிகளில் நியமனம் செய்திடத் தமிழக அரசின் சார்பில் கொள்கை அளவில் முடிவு செய்து, அதன் முதற்கட்டமாக 100 பணியிடங்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின வகுப்புகளைச் சார்ந்தவர்களைத் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வாணையத்தின் மூலம் சிறப்புத் தேர்வுகளை நடத்தி, தேர்வு செய்து காலியாக உள்ள கல்லூரி ஆசிரியர் பணியிடங்களில் உடனடியாக நியமனம் செய்திட மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். எஞ்சிய பணியிடங்களில், தாழ்த்தப்பட்ட பழங்குடியினப் பிரிவுகளைச் சார்ந்தவர்கள் முறைப்படி தேர்வு செய்யப்பட்டுப் படிப்படியாக நியமனம் செய்யப்படுவார்கள். ★

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ், நடைபெறும் பணிகளுக்கு மாவட்டங்களில் மக்களிடம் நல்ல வரவேற்பிருக்கிறது என்பதைக் கேட்டறிந்த முதலமைச்சர், இந்தத் திட்டங்களின் கீழ் நடைபெறும் பணிகள் மேலும் சிறப்பாகச் செயல்பட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட வேண்டுமென்றும், இத்திட்டங்களில் எந்த விதமான சுணக்கமோ, தயக்கமோ இருக்கக் கூடாதென்றும், ஏதாவது ஒரு சில மாவட்டங்களில் இப்பணிகளில் சுணக்கம் இருக்குமேயானால் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இதுகுறித்து எழுதப்பட வேண்டுமென்றும், மேலும் இத்திட்டங்கள் குறித்து கிராம மக்களுக்குத் தெளிவாக எடுத்து விளக்க வேண்டுமென்றும் அறிவுரை கூறினார்.

கிராமப் பகுதி மற்றும் நகரப் பகுதிகளில் குடிநீர்த் திட்டப் பணிகள் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆய்வு நடத்தப்பட்டது. நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 50 லிட்டருக்குக் குறைவாகக் குடிநீர் விநியோகிக்கப்படும் 26 நகராட்சிகள் மற்றும் 40 லிட்டருக்குக் குறைவாகக் குடிநீர் விநியோகிக்கப்படும். 104 நகரப் பேரூராட்சிகள் முதற்கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு அங்கே முழு அளவிற்குக் குடிநீர் வசதி செய்துதர திட்டங்கள் தீட்டி அதற்காகும் மூலதனச் செலவில் ஒரு பகுதி மானியம் வழங்குவதற்கு அரசு மட்டத்தில் ஆய்வு செய்ய முடிவெடுக்கப்பட்டது. ★

ஆதிதிராவிட மக்களுக்கு இலவசக் காங்கிரீட் வீடுகள் கட்டித்தரும் திட்டத்தின்கீழ் — இந்த ஆண்டு அறுபதாயிரம் வீடுகள் கட்டுவதாக மாநில அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் பங்காக ஒதுக்கப்படும் தொகையைப் பயன்படுத்தி நாற்பதாயிரம் வீடுகள் மட்டுமே கட்ட இயலும். எனினும் மீதமுள்ள இருபதாயிரம் வீடுகளைக் கட்டி முடிக்கத் தேவைப்படும் ரூபாய் ஏழு கோடியை மாநில அரசின் சார்பில் வழங்க ஆவன செய்யுமாறு முதலமைச்சர் உத்தரவிட்டார்.

கடந்த 97—98ஆம் ஆண்டில் இருபதாயிரம் தெரு விளக்குகள் அமைக்க அரசு 7.28 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததில், இதுவரை 12,518 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 7,482 தெரு விளக்குகளையும், 98—99ஆம் ஆண்டிற்கு அனுமதித்துள்ள 30,000 தெரு விளக்குகளையும் இந்த ஆண்டுக்குள் அமைக்கப்பட வேண்டுமென்றும், அந்த விளக்குகளையும் எல்லா மாவட்டங்களிலும் பரவலாக அமைக்கப்பட வேண்டுமென்றும் முதலமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய குளங்கள் 12,993 ஊராட்சிகளில் சுமார் 126 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட வேண்டுமென்று அனுமதியளித்ததில் 8,233 குளங்களில் பணிகள் நடைபெற்றுள்ளன. மீதமுள்ள பணிகளையும் உடனடியாகத் தொடங்கி அனைத்துப் பணிகளையும் இந்த நிதி ஆண்டிற்குள் முடிக்கப்பட வேண்டுமென்று முதலமைச்சர் ஆணையிட்டார்.

தமிழகத்தில் உள்ள அனைத்துப் பஞ்சாயத்துகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தரவேண்டுமென்ற எண்ணத்துடன் இந்த அரசு சொந்தக் கட்டடம் இல்லாத அனைத்துப் பஞ்சாயத்துக்களுக்கும் கட்டடம் தர ஆணையிட்டுள்ளது. விரைவில் இந்தப் பணிகளை முடித்து, இந்த ஆண்டிற்குள் அவை பயனுக்குக் கொண்டுவரப்பட வேண்டு மென்றும் தமிழகத்திலே சொந்தக் கட்டடத்தில் இயங்காத பஞ்சாயத்துக்களே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்றும் முதலமைச்சர் கண்டிப்பாகத் தெரிவித்தார்.

இத்துறை மூலம் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ—மாணவியருக்குப் பட்டயப்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயில இலவசக் கல்விச் சலுகைத் திட்டம் சில நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்தப்படுகிறது. 1997—98ஆம் ஆண்டு முதல் தொழில்நுட்பப் பயிலகங்களில் 3 ஆண்டு பட்டயப்படிப்பு பயிலும் 1000 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 1000 மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்பு மாணவ—மாணவியருக்கு இலவசக் கல்விச் சலுகை அளிக்க ஆணையிடப்பட்டது. 1998—99ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின் போது பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சர் அவர்கள் செய்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில் 3 ஆண்டு பட்டயப்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ—மாணவியர் இலவசக் கல்விச் சலுகை பெற நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கை வரம்பு நீக்கப்பட்டு அதற்காகக் கூடுதல் செலவுத் தொகை ரூ.8 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பயனாளிகளின் எண்ணிக்கை வரம்பு நீக்கப்பட்டதால் பயனடைவோர் எண்ணிக்கை எதிர்பார்த்ததைவிட அதிகமாக இருக்கும் எனக் கருதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் ஆகியோர் ஏற்கெனவே ஒப்புதலளிக்கப்பட்ட ரூ.8 இலட்சத்திற்கும் கூடுதலாக ரூ.19.13 இலட்சம் தேவைப்படும் எனக் கோரியுள்ளனர். எனவே, அரசாணை நிலை எண்.26, நாள்:1—6—98ல் ஒப்புதலளிக்கப்பட்ட ரூ.8 இலட்சத்திற்குப் பதிலாக ரூ.27.13 இலட்சத்திற்குப் புதிய அரசாணை வெளியிடப்பட்டது. ★

காஞ்சிபுரம் மாவட்டத்தில்

# அரசின் ஆக்கபூர்வ பணிகளின் வியத்தகு விளம்பர ஏற்பாடுகள்!

ஒரு கண்ணோட்டம்...

– மூ.நா. கிருட்டிணசாமி
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம் மாவட்டம்.

சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும் சித்திரச் சேலைகளுக்குப் பெயர் பெற்றது காஞ்சிபுரம் மாவட்டம். "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டா" என்பது பழமொழி. கோயில்களின் பழமையும், புராணச் சிறப்பையும், வரலாற்றுப் பெருமையையும் தன்னகத்தே கொண்டது காஞ்சிபுரம் மாவட்டம்.

"கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" எனும் மந்திரத்தை அளித்துச் சென்ற பேரறிஞர் அண்ணாவை உலகுக்கு அர்ப்பணித்தப் பெருமை கொண்டது காஞ்சிபுரம் மாவட்டம் ஆகும். இத்தகு பெருமை பெற்ற காஞ்சிபுரம் மாவட்டம் பல நிலைகளில் முன்னோடி மாவட்டமாகத் திகழ்கிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் நாளொரு திட்டங்கள் பொழுதொரு வண்ணமாய் உருவாக்கப்படுகின்றன. மக்களுக்காக உருவாக்கப்படும் நல்வாழ்வுத் திட்டங்கள் மக்களைச் சென்றடைவதிலும், அவற்றைத் மற்றவர்கள் அறியச் செய்வதிலும் விளம்பரப்பணி மிகவும் முக்கியப் பங்கு வகிக்கிறது. அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் விளம்பரப்பணி காஞ்சிபுரம் மாவட்டத்தில் செவ்வனே சிறப்புடன் செயலாக்கப்பட்டு வருகிறது. இவ் விளம்பரப்பணி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் அனைத்துத் துறையையும் ஒருங்கிணைத்து மக்களுக்கு அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் எடுத்துரைத்து அரசின் நல்வாழ்வுத் திட்டங்களை மக்கள் அடைவதற்கு ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்டு வருகின்றது.



மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாக்கள், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்கும் கருத்தரங்கம் – கூட்டம் போன்ற நிகழ்ச்சிகளில் அனைத்துத் துறையினராலும்

விளம்பரப்பணி தக்கபடி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## மக்கள் குறையறியும் நாள் கூட்டம்

"முறை செய்து காப்பாற்றும்
மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

எனும் வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க மக்களுக்கு முறைசெய்ய வேண்டுமானால் முதலில் அவர்களின் குறையினை அறிதல் வேண்டும். மக்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க அலுவலர்களைத் தேடி வராமல் அலுவலர்களே மக்களின் குறைகளை நேரில் சென்று அறிந்து, அதனைத் தீர்க்க வேண்டும் எனும் முதல்வர் கலைஞரின் ஆணைக்கேற்ப மாதந்தோறும் இம்மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களாலும், மாவட்ட வருவாய் அலுவலராலும் குறுவட்ட அளவில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது. அரசு அலுவலர்கள் மட்டுமல்லாமல் அப்பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் ஆகியோர் முன்னிலையில் கூட்டம் நடத்தப்படுகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் மக்கள் குறையறியும் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது என்றாலே அப்பகுதிவாழ் மக்களிடையே தம் குறையெல்லாம் நீங்கிவிட்டாற் போன்ற மகிழ்ச்சி காணப்படும்.

சாரை சாரையாக ஆண்களும், பெண்களும் கையில் மனுக்களுடன் வருகை தருவார்கள். பெண்கள் தங்கள் கைக்குழந்தைகளுடன் இக்கூட்டத்தில் கலந்துகொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். குறைகளை தெரிவிக்க வருகைதரும் அவர்கள் அரசின் திட்டங்களை இங்கு அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடத்தப்படும் இக்கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள் மீதான கோரிக்கைகளை மனுதாரரிடம் உன்னிப்பாகக் கேட்டறிந்து நியாயமான கோரிக்கையாயிருந்தால் அவ்விடத்திலே முடிவு தெரிவிக்கப்படுகிறது. அம்மனுவில் பிரச்சினை இருந்தால் தொடர்புடைய அலுவலரிடம் ஒப்படைத்து 15 தினங்களுக்குள் மனுதாரர்களுக்குப் பதில் தெரிவிக்க மாவட்ட ஆட்சியரால் அறிவுறுத்தப்படுகிறது.

நலத்திட்டங்கள் கோரும் மனுக்கள் நியாயமாக இருந்தால் பரிசீலித்து, உடனடியாகக் கூட்டத்திலேயே நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும். இது தவிர, இக்கூட்டம் தொடர்பாக ஏற்கெனவே பெறப்பட்ட மனுக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

## நாடறிந்த நலத்திட்டங்கள்

மேலும், இக்கூட்டத்தில் அனைத்துத் துறையைச் சார்ந்த அலுவலர்களும் தங்கள் துறையின்பால் செயல்படுத்தப்படும் திட்டங்கள், அதனைப் பெறும் வழிமுறைகள், தகுதிகள் ஆகியவற்றைக் குறித்து விரிவாக எடுத்துரைப்பார்கள். இதனைக் கேட்ட தகுதி வாய்ந்த மக்கள் பலர் உடனடியாக மனு எழுதி நலத்திட்டங்களைப் பெற விண்ணப்பிக்கின்றனர். 'இதுவரையில் இம்மாதிரியான திட்டங்கள் அரசிடம் உள்ளது, என்பது தெரியாமல் இருந்துவிட்டோம். இக்கூட்டத்தின் மூலம் இதனை அறிந்துகொண்டதால் நாங்களும் அரசின் திட்டங்களை அனுபவிக்க முடிந்தது' என்று மகிழ்ந்து செல்வர்.

> சமூகம் முழுவதும், கொண்டுள்ள இலட்சியத்தில் — உறுதியில், நிலைத்து நின்றால்தான் எந்தக் காரியத்திலேயும் வெற்றி பெறமுடியும்.
>
> – அறிஞர் அண்ணா

கண்காட்சியில், 'தமிழரசின்' இலவச வார வெளியீடான 'அரசு செய்தி' சுவரொட்டிகள் ஆங்காங்கே வைக்கப்பட்டிருக்கும். குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்பு முறை, கற்றலின் இனிமை போன்ற வண்ணப்புகைப்படங்களும், மகளிர் நலம் பேணும் சமூக நலத்திட்டங்கள் அனைத்தும்


ஓவியங்களாகத் தட்டிகளில் வரைந்து காட்சிக்கு வைக்கப்படும்.

மேலும், கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (டோக்ரா), கிராமப்புறச் சுகாதாரத் திட்டம், சிறுசேமிப்பு, அறிவொளி இயக்கம் போன்றவற்றைச் சித்தரிக்கும் படங்கள் மற்றும் மாடல்கள் வைக்கப்பட்டிருக்கும்.

புகையில்லா அடுப்புகள், சாண எரிவாயு ஆகியவற்றினால் விளையும் பயன்களை அடுப்புகள் அமைத்து, செயல்முறைகள் மூலம் விளக்கிக் காட்டப்பட்டு வருகின்றது. இதனால் பெண்களுக்குப் புகையிலிருந்து விடுதலையும் விழிகளுக்குப் பாதுகாப்பும் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.


## எரிசக்தியின் பயன்

ஒவ்வொரு கட்டத்திலும் மக்கள் எரிசக்தியின் பயனை அறிந்துகொள்வதற்காகச் சென்னையிலிருந்து எரிசக்தி விளம்பர வாகனத்தை வரவழைத்து மக்களுக்குச் செயல்முறைகள் மூலம் விளக்கிக் காண்பிக்கப்படுகிறது. மேலும், வேளாண் பொறியியல் துறையின் மூலம் மண் பரிசோதனை வாகனம் வரவழைத்து மண் பரிசோதனைகளும் செய்யப்பட்டு அதற்கேற்ற ஆலோசனைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.





காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும், அதன் நுழைவாயிலில் உள்ள அறிஞர் அண்ணா சிலையும்



அயோடின் கலந்த உப்பினை மக்கள் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்த – அயோடின் கலந்த உப்பினை எப்படிக் கண்டுபிடிப்பது என்பதும் செய்முறை மூலம் மக்களுக்குக் காண்பிக்கப்படுகிறது.

வேளாண் துறையின் சார்பில் வேளாண் இடுபொருட்கள், தரமான விதைகள் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் பொருட்கள் காட்சிக்கும், அந்நாளில் விற்பனைக்கும் வைக்கப்படும்.

அரசின் திட்டங்கள், சாதனைகளை அறியும் பொருட்டு 'தமிழரசு' இதழுக்கான சந்தாக்களும் சேகரிக்கப்பட்டு, சந்தாதாரர்களுக்கு முதல் பிரதி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மேடையிலேயே வழங்கப்பட்டு வருகிறது.


## மருத்துவ முகாம்கள் மற்றும் 'விசிபி' படக்காட்சி

மாவட்டத்தில் நடைபெறும் அண்ணா மறுமலர்ச்சி திட்டத் தொடக்க விழா, 'நமக்கு நாமே' திட்டத் தொடக்க விழா, மற்றும் மக்கள் குறையறியும் நாள் கூட்டத்தில் மருத்துவ முகாம்கள் மற்றும் கால்நடை மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன; நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு முந்திய நாளே மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. இம்மருத்துவ முகாம்களில் மக்கள் பெரிதும் பயன் அடைந்துள்ளனர்.

கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்து தக்க மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. மேலும், நிகழ்ச்சி நடைபெறும் கிராமப் பகுதிகளில் 'வீடியோப்' படக்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அனைத்துத்துறையினரையும் ஒருங்கிணைத்து அரசின் நல்வாழ்வுத் திட்டங்கள் மற்றும் சாதனைகளைப் பாமரமக்களும் புரிந்துகொள்ளும் வகையில் செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகம் செயலாற்றி வருகின்றது.

---



சாதி முறையை நாம் எதிர்க்கிறோம் என்றால், பொருளாதார பேத நிலையை உண்டாக்கியதும், நிலைத்திருக்கச் செய்வதுமான கொடிய ஏற்பாட்டைத் தகர்க்கிறோம் என்று பொருள்; அதாவது சமதர்மத்திற்கான சூழ்நிலையை ஏற்படுத்துகிறோம் என்று அர்த்தம்.

- அறிஞர் அண்ணா

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ், கடந்த இரண்டாண்டுகளில் ஏராளமான திட்டங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளன; அதன் விவரம் வருமாறு:

### வீட்டுமனைப் பட்டாக்கள்

1996-97ஆம் நிதியாண்டில் வீட்டுமனையற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு, இலவச வீட்டுமனை வழங்க, நிலம் கையகப்படுத்த ரூ.50 இலட்சம் பயன்படுத்தப்பட்டு, மொத்தம் 22 கிராமங்களிலுள்ள 1,849 பயனாளிகளுக்கு இலவச மாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

1997-98ஆம் நிதியாண்டிற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க, நிலம் கையகப்படுத்த ரூ.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதி இலக்கினை முழுவதுமாக எய்தியது மட்டுமல்லாமல், கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மொத்தம் ரூ.1 கோடியே 4 இலட்சத்து 35 ஆயிரத்து 570க்கு நேரடி பேச்சுவார்த்தை மற்றும் நில எடுப்புச் சட்டம் 31/1978ன் படி நிலத்தைக் கையப்படுத்தி 32 கிராமங்களிலுள்ள 2,563 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை இலவசமாக வழங்கியது இம்மாவட்ட நிருவாகத்தின் மகத்தான சாதனையாகும்.

இதோடல்லாமல், மேற்கண்ட இடங்களுக்கு மனைப்பிரிவு தயாரிக்கப்பட்டு, அரசின் செலவிலேயே கற்கள் நடப்பட்டு, அக்கற்களில் மனையின் எண் எழுதப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்க முன்னோடிச் சாதனையாகும்.

### மயானம் மற்றும் மயானப் பாதை வசதி

1997-98ஆம் நிதியாண்டில், ஆதி-திராவிடர்களுக்கு மயானம் மற்றும் மயானப்பாதை வசதி செய்து கொடுப்பதற்காக ரூ.1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதி ஒதுக்கீடு முழுவதுமாகச் செலவு செய்யப்பட்டதோடல்லாமல், கூடுதலாக நிதி ஒதுக்கீடு ரூ.2 இலட்சத்து 23 ஆயிரத்து 623, நிலம் கையகம் செய்யப் பயன்படுத்தப்பட்டு, 12 ஆதிதிராவிடர் கிராமங்களுக்கு மயானம் மற்றும் மயானப் பாதை வசதி செய்து தரப்பட்டுள்ளது.

### தையல் இயந்திரம்

1996-97ஆம் நிதியாண்டில், ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.2½ இலட்சங்களும், 1997-98ஆம் நிதியாண்டில் பயன்படுத்தப்பட்டு சிறந்த 'சிங்கர்' ரக தையல் இயந்திரங்கள் 129 ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப் பட்டன; தரமுள்ள தையல் இயந்திரங்கள் அதைப் பயன்படுத்தத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே வழங்கப் பட்டது குறிப்பிடத்தக்க செயலாகும்.

1997-98ஆம் நிதியாண்டில், இலவசத் தையல் இயந்திரம் வாங்குவதறகு 2½ இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியினைப் பயன்படுத்தி, தரம் வாய்ந்த 'உஷா' தையல் இயந்திரங்கள் தையல் இயந்திரங்கள் வாங்கப்பட்டன.

இந்தத் தையல் இயந்திரங்கள் வழங்க மாநிலத்திலேயே முன்னோடியாகத் தையல் இயந்திரம் கோரி விண்ணப்பித்திருந்தவர்களை நேரில் அழைத்து அவர்களுக்குத் தையல் இயந்திரத்தைப் பயன்படுத்தத் தெரிந்திருக்கிறதா என்பதைக் கண்டறிய மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், மாவட்டச் சமூகநல அலுவலர், மக்கள் குறை தீர்க்கும் குழுமம், துணை ஆட்சியர் ஆகியோர் அடங்கிய குழு அமைக்கப்பட்டு - தையல் இயந்திரங்களை இயக்கத் தேர்ச்சி பெற்றவர்களின் உதவியுடன் நேரில் தைக்கச் செய்து, அதில் தகுதி வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.

### இலவசச் சலவைப் பெட்டிகள்

1997-98ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இலவசச் சலவைப் பெட்டிகள் அல்லாமல், மாவட்ட ஆட்சியர் அவர்களின் பரிந்துரையின் பேரில், பிரத்தியேகமாக 100 சலவைப் பெட்டிகள் கூடுதலாகப் பெற்று ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த சலவை யாளர்களுக்கு வழங்கப்பட்டன.

### கொத்தடிமை முறை ஒழிப்பு

இம்மாவட்டத்தில் தன்னார்வத்தொண்டு நிறுவனங் களைக் கொண்டு, 621 கொத்தடிமைத் தொழிலாளர்கள் கண்டறியப்பட்டிருந்தனர். இதில் 136 கொத்தடிமைத் தொழிலாளர்கள், கொத்தடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, அவர்களுக்கு உடனடி நிவாரணத் தொகையாகத் தலா ரூ.1,000 வீதம், ரூ.1 இலட்சத்து 36 ஆயிரமும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு தலா ரூ.9 ஆயிரம் வீதம், ரூ.13 இலட்சத்து 60 ஆயிரமும் வழங்கப்பட்டுள்ளன. 84 குழந்தைத் தொழிலாளர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்பப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு இலவசமாக நோட்டுப் புத்தகங்கள், பாடப்புத்தகங்கள் வழங்கப் பட்டுள்ளன. இவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு, மருத்துவச் சிகிச்சையும் அளிக்கப்பட்டது.




**மாவட்ட ஆட்சியர் திரு.இறையன்பு முயற்சியில்**

**அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனைக்குப் புதிய நவினக் கருவிகள்**

குடல் நுண்ணோக்கி [கேஸ்ட்ராஸ்கோப்] தொண்டை மற்றும் வயிற்றுப் பகுதியின் ஏதாவது புண் அல்லது கட்டி இருப்பின் அதை உடனடியாக கண்டுபிடிக்க உதவும் ஜப்பானியக் கருவி அரசு வழங்கிய நிதியுதவி ரூ.3.5 இலட்சத்தில் வாங்கப் பட்டுள்ளது.

ஒரு இந்தியத் தயாரிப்பான ''சிகிச்சை திட்டமிடும் கருவி'' [ட்ரீட்மென்ட் பிளானிங் சிஸ்டம் – ஆன்கோபினான்] விலை ரூ.13.50 இலட்சம் செலவில் அரசால் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கருவி ரேடியோதெரபி சிகிச்சையின் அளவை தீர்மானிக்க பெரிதும் உதவும்.

காமா கேமரா ''பிளானர் புற்றுநோய் இருப்பதை முன்னதாக கண்டறியும் கருவி'' எலும்பு, கல்லீரல், கணையம், நுரையீரல், இதயம், மூளை ஆகிய பகுதிகளில் புற்றுநோய் வருவதை முன்னதாகவே கண்டுபிடித்து அதற்கான சிகிச்சையை உடனடியாகத் தொடங்குவதற்கு உதவும் கருவி ஒன்று ரூ.43 இலட்சத்தில் மும்பை போர்டு ஆப் ரேடியேஷன் மற்றும் ஐசோடோப் டெக்கானலஜி [அணுசக்தித்துறை நடுவனரசு] மூலம் நன்கொடையாகப் பெறப்பட்டுச் சீரிய முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## ஆதிதிராவிடர் நல விடுதிகள்

1996-97ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில், 55 ஆதிதிராவிடர் நல மாணவர்கள் விடுதிகளும் 17 ஆதிதிராவிடர் நல மாணவியர்கள் விடுதிகளும் மொத்தம் 72 ஆதிதிராவிடர் நல விடுதிகள் இயங்கிவந்தன.

இந்த விடுதிகளில் முறையே 3,296 ஆதிதிராவிடர் மாணவர்களும், 894 ஆதிதிராவிடர் நல மாணவிகளும் மொத்தம் 4,190 பேர்கள் தங்கிக் கல்வி பயின்றனர்.

1997-98ஆம் ஆண்டில், (பிரிக்கப்பட்ட காஞ்சிபுரம் மாவட்டத்தில்) 30 ஆதிதிராவிடர் நல மாணவர்கள் விடுதிகளும், 9 ஆதிதிராவிடர் மாணவியர்கள் விடுதிகளும் மொத்தம் 39 விடுதிகள் இயங்கி வருகின்றன.

இந்த விடுதிகளில் முறையே 1,614 ஆதிதிராவிடர் இன மாணவர்களும், 521 ஆதிதிராவிடர் இன மாணவியர்களும், மொத்தம் 2,135 பேர்கள் தங்கிக் கல்வி பயின்று வருகின்றனர்.

1997-98ஆம் நிதியாண்டில் "பெருநகர்" என்ற இடத்தில் 50 மாணவர்கள் தங்கிப்பயில விடுதி ஒன்று புதிதாகத் திறக்கப்பட்டது.

இக்கல்வியாண்டில், மதுராந்தகம் வட்டத்தைச் சேர்ந்த அச்சிறுபாக்கம் மாணவர் விடுதியில் தங்கிக் கல்வி பயின்ற 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் அனைவருமே தேர்ச்சி பெற்றது, குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

## ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள்

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1996-97ஆம் ஆண்டில் , 70 ஆரம்பப்பள்ளிகளும், 6 நடுநிலைப்பள்ளிகளும், 6 உயர்நிலைப்பள்ளிகளும், 2 மேல்நிலைப்பள்ளிகளும் சேர்ந்து, ஆகமொத்தம் 84 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் இயங்கி வந்தன.

1997-98ஆம் ஆண்டில் பிரிக்கப்பட்ட இம்மாவட்டத்தில், 65 ஆரம்பப் பள்ளிகளும், 10 நடுநிலைப் பள்ளிகளும், 7 உயர்நிலைப் பள்ளிகளும், 2 மேல்நிலைப் பள்ளிகளும் ஆகமொத்தம், 84 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் இயங்கி வருகின்றன.

இந்தக் கல்வியாண்டில் மொத்தம் 5 ஆரம்பப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன. சென்ற கல்வியாண்டில் 'தையூர்' நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

## நீள இருக்கைகள் கொண்ட சாய்வு மேசைகள்

இம்மாவட்டத்தில் 1997-98ஆம் ஆண்டில், இத்துறையைச் சேர்ந்த, மீனம்பாக்கம் மற்றும் தையூர், உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 35 ஆயிரம் செலவில் நீள இருக்கைகள் கொண்ட சாய்வு மேசைகள், வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

## கணினி

ஆதிதிராவிடர், மாணவ/மாணவியர்கள் பயன்பெறும் வகையில், இம்மாவட்டத்தில், கீழ்க்கண்ட 3 பள்ளிகளுக்கு 1997-98ஆம் நிதியாண்டில் 'கணினிகள்' பொருத்தப்பட்டு, அதற்கான வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

- ஈஞ்சம்பாக்கம் (ஆதிந) மேல்நிலைப்பள்ளி
- நாகல்கேணி (ஆதிந) மேல்நிலைப்பள்ளி
- கிளாம்பாக்கம் (ஆதிந) உயர்நிலைப்பள்ளி

# வாசகர் இதயம்

தருமபுரி மாவட்டச் சிறப்பிதழில் வெளியிட்ட செய்திகள் அனைத்தும் அருமை.

- டி.எஸ்.சேகர்,
தென்கடப்பந்தாங்கல்

போராட்டங்கள் பற்றிய கலைஞரின் விமர்சனம், காமராசர் பற்றி அறிஞர் அண்ணா கூறியவை மிகச் சிறப்பாக இருந்தன.

- பி.ஏ.வதூத்,
மேட்டுப்பாளையம்.

தருமபுரி மாவட்டச் சிறப்பிதழில் மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகள் கல்வி, கலை, இலக்கியம், வரலாறு, தொழில், வேளாண்மை ஆகிய அம்சங்களைப் படத்துடன் வெளியிட்டு, அம்மாவட்டத்தின் சிறப்பை அறியச் செய்தீர்கள்.

- ப.முருகேச பாண்டியன்,
கரப்பாடி, பொள்ளாச்சி வட்டம்.

அரசின் சாதனைகளுக்குத் திருவாரூர் மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள நல்ல பல செயல் திட்டங்கள் தமிழ்நாடு அரசின் தன்னிகரற்ற சாதனைகளுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாய் விளங்கின.

- கே.பிரஷ்னேவ்
வாகைக்குளம்

கலைஞர் அவர்கள் நபிகள் நாயகத்தின் சம்பவத்தை மையமாக வைத்து இன்றைய அரசியலை விமர்சித்தது நன்றாக இருந்தது.

- மு.முஸ்தாபா,
இராமேஸ்வரம்

அரசு ஏடே ஆயினும், பல அரிய செய்திகளை வெளியிட்டுவரும் 'தமிழரசை' மனமார வரவேற்கின்றோம்.


- கோ.நேரு,
ஏரவாடி.

தமிழரசில் வெளியான 'சேமிப்போம்' - கவிதை, 'வாழிதோழி' - சொல்லோவியம் ஆகியவை எளிய நடையில், அழகு தமிழில் அமைந்திருந்தன. இதேபோல இலக்கியக் கட்டுரைகள், கவிதைகள் தொடர்ந்து வெளியிட வேண்டுகிறேன்.

- கவிஞர் இடிமுரசார்,
சென்னை-5.

'தமிழரசு' ஆகஸ்ட் இதழில் - பார்புகழும் பன்னிருவர்' என்ற தலைப்பில் வெளிவந்திருந்த கட்டுரை நிறைய விவரங்களை உள்ளடக்கியதாக இருந்தது.

- இரா.சுப்பிரமணியம், வாகைக்குளம்.



# பட்டு வளர்ச்சி

பட்டு நெசவுத் தொழிலில் சிறந்தோங்கி விளங்கும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பட்டு வளர்ச்சித் துறையின் திட்டங்கள் விரைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**மல்பரி விரிவாக்கம்**

கிராமப்புறத் தனியார் பட்டு விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர, அவர்களைப் பட்டுத் தொழிலில் ஈடுபடுவதற்கு ஊக்கப்படுத்தி 1996-97ஆம் ஆண்டு 5.75 ஏக்கர் பரப்பளவில் புதிய மல்பரி நடவு செய்யப்பட்டது 1997-98ஆம் ஆண்டு 10.50 ஏக்கர் ஏக்கர் பரப்பளவில் புதிய விவசாயிகள் பட்டுத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டனர்.


**'தாட்கோ' திட்டம்**

காஞ்சிபுரம் மாவட்டம் - மதுராந்தகம் வட்டத்தில் ஜமீன் என்டத்தூர் கிராமத்தில் 'தாட்கோ' திட்டத்தில் இரண்டு தனியார் பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி உதவித் தொகையாகத் தலா ரூ.500 வீதம் மொத்தம் 1,000 (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) 1997-98ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. பயிற்சி முடித்த 2 விவசாயிகளுக்கு வங்கிக் கடனுதவி அடிப்படையில் மானியம் மற்றும் விளிம்புத் தொகை ரூ.32,250 வழங்கப்பட்டுள்ளது.

**அலகுகள்**

**பட்டு விவசாயிகள் பயிற்சி மையம்**

இம்மையத்தில் தனியார் பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதுடன் பட்டுப் புழு வளர்ப்பு செய்து 1996-97ஆம் ஆண்டு 220 கிலோ பட்டுக்கூடுகள் உற்பத்தி



*காஞ்சிபுரம் மாவட்டம் ஐயங்கார் குளத்தில், அரசு உதவி பெற்றுப் பயனாளிகளே கட்டிவரும் வீடுகள்.*




காஞ்சிபுரத்தில் உள்ள அரசு தலைமை பொது மருத்துவமனை

செய்யப்பட்டுள்ளது. 1997-98ஆம் ஆண்டில், 202 கிலோ பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்து, காஞ்சிபுரத்தில் அரசு பட்டுக்கூடு அங்காடியில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும் இம் மையத்தின் மூலம் ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த 5 தினக்கூலிப் பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**அரசு பட்டுக்கூடு அங்காடி**

தனியார் பட்டு விவசாயிகளால் உற்பத்தி செய்து எடுத்துவரும் பட்டுக்கூடுகள் இம்மையத்தின் மூலம் கொள்முதல் செய்யப் படுகிறது. 1996-97ஆம் ஆண்டில் 321 கிலோ பட்டுக்கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. 1997-98ஆம் ஆண்டில் 1337 கிலோ கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. □

---

# கூட்டுறவு மேம்பாடு

காஞ்சிபுரம் மாவட்டக் கூட்டுறவுத்துறை, பயன்மிக்க வகையில் பாடுபட முன்வருவோருக்கெல்லாம் பாகுபாடின்றிக் கடன் வழங்கும் பெருமை பெற்றுள்ளது.

காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து நிதிஉதவி பெற்று இம்மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் இந்த இரண்டு ஆண்டுகளில் 41,636 அங்கத்தினர்களுக்கு ரூ.52 கோடி அளவுக்குக் குறுகிய கால வேளாண்மைக் கடனும், 1,576 அங்கத்தினர்களுக்கு ரூ.1.40 கோடி அளவுக்கு மத்திய கால வேளாண்மைக் கடனும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக 31,018 அங்கத்தினர்கட்கு ரூ.32 கோடியும் காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளைகள் மூலமாக 54,856 நபர்கட்கு ரூ.57 கோடியும் நகைக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**நகையீட்டுக் கடன்**

இம்மாவட்டத்தில் உள்ள 5 பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலமாக ரூ.16.20 கோடி அளவுக்கு வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த காரியங் களுக்கு நீண்டகாலக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வங்கிகள் மூலம் நகைக்கடனாக ரூ.12.72 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இம்மண்டலத்தில் உள்ள 5 கூட்டுறவு நகர வங்கிகள் மூலமாக 63,092 நபர்கட்கு ரூ.50.39 கோடி நகையீட்டுக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகச் சிறுதொழில் மற்றும் குடிசைத்தொழில் கடனாக 4,476 பேர்கட்கு ரூ.5.07 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமாகச் சிறுதொழில் மற்றும் குடிசைத்தொழில் கடனாக

18 நபருக்கு ரூ.69.51 இலட்சம் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலமாக 700 நபர்களுக்கு ரூ.9.52 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக ரூ.15.49 கோடி மதிப்புள்ள 13,903 மெ.டன் இரசாயன உரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

இம்மண்டலத்தில் உள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக ரூ.1.20 கோடி மதிப்புள்ள வேளாண் பொருட்கள் கொள்முதல் செய்து விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும் இம்மண்டலத்தில் செயல்படும் நியாயவிலைக் கடைகள் மூலமாக ரூ.161.33 கோடி மதிப்புள்ள கட்டுப்பாட்டுப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் மூலமும் பண்டகசாலைகள் மூலமும் ரூ.39.26 கோடி பெறுமானமுள்ள கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மருத்துவர் மற்றும் பொறியாளர்களுக்குச் சுயதொழில் துவங்கிட நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக 93 நபர்களுக்கு ரூ.1 கோடியும் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலமாக 1 நபருக்கு ரூ.92 ஆயிரமும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

## ஆதிதிராவிடர்க்குக் கடனுதவி

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் அதிதிராவிட இனத்தவரை அங்கத்தினர்களாகச் சேர்த்து பங்குத்தொகைக்கு நிதிஉதவி வழங்கும் திட்டத்தின்கீழ் 1,500 நபர்களுக்கு தலா ரூ.100 வீதம், ரூ.1.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் ஆதிதிராவிட அங்கத்தினர்களின் கடன் வாங்கும் தகுதியினை உயர்த்தும் பொருட்டு வட்டியில்லாப்பங்கு மூலதனக் கடனாக 750 நபருக்குத் தலா ரூ.250 வீதம் ரூ.1.87 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவு நகர வங்கிகள் மூலமாக 142 ஆதிதிராவிட அங்கத்தினர்களுக்கு ரூ.71 ஆயிரம் வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை நிறைவேற்றும் பொருட்டு 1997-98ஆம் நிதியாண்டிற்கு இம்மண்டலத்தில் செயல்படும் மூன்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு (முத்தியால்பேட்டை, வாலாஜாபாத், திருக்கழுக்குன்றம்) நவீன வசதிகளுடன்கூடிய வங்கிக்கட்டடம் கட்ட தலா ரூ.8.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.25.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதில் மானிய நிதி உதவியாகத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் (தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதி, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து) தலா ரூ.2.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.7.50 இலட்சம் மானியமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மேற்படி வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டடம் கட்ட கட்டுமானப்பணிகள் துவங்கப்பட உள்ளது.

## நியாய விலைக் கடைகள்

இம் மாவட்டத்தில் 1997-98ஆம் நிதியாண்டிற்கு 50 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குப் பாதுகாப்புக் கதவுகளுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டுதல் பணிக்காகப் பதிவாளரால் தெரிவு செய்யப்பட்டு அனுமதியளிக்கப்பட்டது. இதில் ஜூலை 98 முடிய 44 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு முதல் கட்டமாகப் பாதுகாப்பு அறைகள் கட்டும் பணிகள் துவக்கும் தருவாயில் உள்ளன.

இம்மாவட்டத்தில் தற்போது 1,225 நியாயவிலைக் கடைகள் இயங்கிவருகின்றன. இதில் 831 முழுநேரக் கடைகளும், 394 பகுதிநேரக் கடைகள் ஆகும். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் பொதுமக்களின் நலன்கருதி 26 முழு நேரக்கடைகளும், 18 பகுதிநேரக் கடைகளும் பதிவாளர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவரின் அனுமதியின்படி, திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.


ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் மட்டும் இதுவரையில் 29 நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டு 11 நியாயவிலைக் கடைகளுக்குப் புதியதாகக் கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது. □



காஞ்சிபுரம் மாவட்டத்தில், சட்டபுறம்பாக மணல் அள்ளிய 243 லாரிகள் பிடிக்கப்பட்டன.
அரசு இடத்தில் இருந்த ஆக்கிரமிப்பு கட்டடங்கள் பல இடிக்கப்பட்டு சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளன.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனமும், சென்னைப் பல்கலைக் கழகத்
தமிழ் இலக்கியத் துறையும், டாக்டர் மா.இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையமும்
இணைந்து நடத்திய 'திராவிட இயக்க இதழ்கள்' கருத்தரங்கில்
படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை...

# 'திராவிட நாடு' – கிழமை இதழ்



திராவிடம் என்பது தென்னிந்தியப் புவிப்பரப்பைக் கொண்டது. இன்றைய தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் அடங்கிய நிலப்பகுதி திராவிட நாடு ஆகும்.

## திராவிடத்தின் சிறப்பு

'மனித இனத்தின் தொட்டில், தென்னிந்தியா' என சர்.ஜான் எவான்ஸ் என்பவரும் திராவிடத்தின் தெற்கில் கடலடியில் மூழ்கிய இலெமூரியாதான் முதல் மனிதன் பிறந்த நிலம் என ஆராய்ச்சியாளர் பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த மனிதன் உணவுக்கு அலைந்தான் – வேட்டையாடினான் – உடுக்கப் பழகினான் – குடியிருப்புக் கண்டான்; கூடி வாழவும், உழவுத் தொழில் செய்யவும் முற்பட்டான்; சமையல் பழகினான் – கருவிகள் செய்தான். தமிழ் பிறந்தது – வரி வடிவம் பெற்றது, சமுதாய வாழ்வை அமைத்தான். அரசு கண்டான்; நாகரிகம் பிறந்தது; வாணிகம் வளர்ந்தது; வளம் கொழித்தது; முத்தமிழ் முழங்கிற்று. அவன் உலகோருக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கினான். இவ்வாறாகத் திராவிடத்தின் சிறப்புகளைப் பேராசிரியர் க.அன்பழகன் 'உலக அரங்கில் நாம்' – என்ற கட்டுரையில் (திராவிட நாடு 6–8–1961) விளக்கியது குறிப்பிடத்தக்கது. அவர் அக் கட்டுரையில் மேலும் குறிப்பிடுவது வருமாறு:

'தென்னக மொழிகளிலேயே பிறமொழிகள் துணையின்றியே தனித்து வளரும் ஆற்றல் பெற்றுள்ள தமிழ்தான் உலகிலேயே மிகப்பழைய மொழி என்பதும், திராவிட மொழிகட்கே மூலமாய் அமைந்தது என்பதும் மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரனார் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடற்பகுதிகளால் உணரலாம்' – என்பதாகும்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பே சிறப்புற்றிருந்த ஹாரப்பா, மொகன்சதாரோ நகரச் சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகமேயாகும் என சர்.ஜான் மார்ஷல் உலகறியச் செய்தார். தவத்திரு ஹீராஸ் பாதிரியார், தமிழ் சிந்து சமவெளிப் பகுதியில் பயன்படுத்தப் பெற்றிருக்கிறது என்ற உண்மையைக் கண்டுபிடித்துக் கூறினார்.



– முனைவர் ஏ.விவேகானந்தம்
தமிழ்ப் பேராசிரியர்.
மாநிலக் கல்லூரி, சென்னை.

## திராவிடம்

வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் இனம், அரசு இழந்து சாதி சமயப் பிரிவுகளால் பிளவுபட்டுத் தாழ்வுற்றது ஏன்? சீரழிக்கப் பெற்றது எவ்வாறு? மீண்டும் தலையெடுக்க முடியாதபடி ஆனதற்குக் காரணங்கள் யாவை? இக்கேள்விகளுக் கெல்லாம் மொத்த விடையாக உருவானதுதான் திராவிட உணர்வு.

திராவிட உணர்வு கொண்டவர்கள் ஒன்றுகூடிக் கண்டதுதான் 'திராவிட இயக்கம்'. கீழ்க்காணும் வகையில் தொகுத்துச் சொல்வது இவண் தேவையானது ஆகும்.

பின்னணி: திராவிடர்களின் அடிமை வாழ்வு; பிறப்பால் ஏற்றத்தாழ்வு; அதாவது, சாதிப்பிரிவுகள்; சமூகப் பொருளாதார மற்றும் பண்பாட்டுச் சிதைவு; வேற்றுமொழி ஆதிக்கம்;

மூடநம்பிக்கைப் பழக்க வழக்கங்கள்; பெண்ணடிமை; எல்லா இழிவுகளுக்கும் மூல காரணமாக விளங்கும் கடவுள் பெயரால் உண்டாக்கிய அநீதிகள்.

— திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்புகளின் வரலாறு திராவிட இயக்க வரலாறாக அழைக்கப் பெறலாயிற்று.

## திராவிட இயக்க இதழ்கள்

ஏராளமான இதழ்கள் தோன்றின. ஏறத்தாழ அறுபது இதழ்கள் திராவிட இயக்கத் தோழர்களால் நடத்தப் பெற்றிருக்கின்றன என்று 'கதிர்' இதழ் ஆசிரியராக விளங்கிய ப.புகழேந்தி பட்டியலிட்டுள்ளார். 'அண்ணா—இதழாசிரியர் ஓர் ஆய்வு' — என்னும் டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு நிகழ்த்திய மு.கோவிந்தராசுலு திராவிட இயக்க இதழ்களின் எண்ணிக்கை 93 என வரையறுத்துள்ளார். தமிழகத்தில் தோன்றியவை அல்லாமல் கடல்கடந்த நாடுகளிலும் திராவிட இயக்க இதழ்கள் வெளியாகி யிருக்கின்றன. ஏறத்தாழ இருநூறு இதழ்கள் இருந்துள்ளன எனப் பேராசிரியர் இரா.இளவரசு கருத்துத் தெரிவித்துள்ளார்.




இத்தகைய எழுச்சி காரணமாகத் தமிழகத்தில் பகுத்தறிவுச் சிந்தனைகளுடன் கூடிய மறுமலர்ச்சி ஏற்பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாகப் பத்திரிக்கை படிப்போரின் தொகை முன்பு எப்போதையும்விட மிக வேகமாக அதிகரித்தது.

விடுதலை, திராவிட நாடு, தீப்பொறி, போர்வாள், திராவிடன், மன்றம், முரசொலி, தனியரசு, நம்நாடு, மாலைமணி, தென்றல், அறப்போர், தென்னகம், திராவிடமணி முதலானவை குறிப்பிடத்தக்க திராவிட இயக்க இதழ்களாகும்.

இவ்விதழ்கள், அவற்றை நடத்திய ஆசிரியர்கள் முதலான தகவல்கள் அவ்வப்போது திராவிட நாடு இதழ்களில் வெளியாகியுள்ளன.

"இருட்டடிப்புக்கு ஆளாகி இருந்த திராவிட இயக்கம் இன்று ஓரளவுக்குப் பொதுமக்களின் செல்வாக்குப் பெற்றிருப்பதற்குக் காரணம் மற்ற இதழ்களின் துணையைப் பெறாத நிலையை அறிந்து, நாமே இயக்க ஏடுகள் சிலவற்றையேனும் நடத்தி வருவதுதான்" (திராவிட நாடு 4.11.1956) — என்ற அண்ணாவின் வாசகம் இத்தகைய இதழ்களின் பணியை மதிப்பிடுகின்றது.

மக்கள் தொடர்புச் சாதனங்கள், மனிதனின் உள்ளத்தைப் பண்படுத்த வேண்டும். அவர்களின் அறிவு வளர்ச்சிக்குத் துணைபுரிய வேண்டும். மனித சமூகத்தின் பண்பாட்டைச் சிதைத்துச் சீரழிக்காமல் இருக்கவேண்டும். நாட்டின் மாண்பை உயர்த்தக்கூடிய விதத்தில் கலை இலக்கியங்களை வளமுறுத்தவேண்டும். மொழி மலர்ச்சியும் இலக்கிய வளர்ச்சியும், சமூக மறுமலர்ச்சியும் அரசியல் விடுதலை எழுச்சியும் காலவேகத்தில் நாட்டில் தலையெடுத்தபோது ஆற்றலும் ஆர்வமும் அக்கறையும் பெற்றிருந்த திராவிட இயக்கத்தினர் வழிகாட்ட முற்பட்டதும் வளம்படுத்த, தங்களால் இயன்றதைச் செய்து சாதனை புரிந்ததும் தாங்கள் நடத்திய சிறு சிறு பத்திரிகைகள் வாயிலாகத்தான் என்பது உறுதியாகிறது. 'திராவிட இயக்கப் பத்திரிகையாளர் சங்கம்' என்ற பெயரில் ஓர் அமைப்பு இருந்தது என்கிறார் 'கதிர்' ஆசிரியர் ப.புகழேந்தி. விடுதலை ஆசிரியர் குத்தூசி குருசாமி —தலைவர்; புலவர் கு.செல்வராசு—செயலர்; பெரியார், அண்ணா, பாரதிதாசன் ஆகியோர் — ஆலோசகர்கள். கலைஞர், பேராசிரியர், டார்பிடோ ஜனார்த்தனம் முதலானோர் — செயற்குழு உறுப்பினர்கள் — என்ற நிலைகளில் பல முன்னணித் தலைவர்கள் பங்குகொண்டு பணியாற்றியிருக் கிறார்கள். இச்செய்தி, திராவிட இயக்க வளர்ச்சிக்கு யார் யார் எப்படியெப்படிக் காரணமாக இருந்துள்ளார்கள் என்பதைத் தெளிவு செய்கிறது.

திராவிட நாடு இதழ்: வடிவமைப்பு: அட்டை; படம்; கவிதை; தலையங்கம்; திறனாய்வு; கருத்து விளக்கம்; கட்டுரை; செய்தி; கழக நடவடிக்கைகள்; மடல்; கதை; துணுக்கு; பயணக் குறிப்புகள்; கேட்டீரா செய்தி; அந்திக் கலம்பகம்; ஊரார் உரையாடல்; நாடகம்; பேட்டிச் செய்திகள்; அறிவிப்பு; மறுப்புரை — முதலானவை குறிப்பிடத்தக்கவை.

முதல் இதழ்:

தனிப்பிரதி ஒரு அணா – ஆண்டுச் சந்தா ரூ.5 – ஞாயிறு வெளியீடு – திராவிட நாடு

ஆசிரியர் : சி.என்.அண்ணாதுரை

**‘தமிழுண்டு தமிழ் மக்களுண்டு – இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு’**
– (பாரதிதாசன்)

மலர்:1 இதழ்:1 8–3–1942

பாரதிதாசனுடைய கவிதை வரிகளுடன் முதல் இதழ் தொடங்குவது மிகவும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. பாரதிதாசனைப் பற்றி அண்ணா ‘திராவிட நாடு’ இதழ் ஒன்றில் **(4–3–1956).**

“இதய நாதத்தையும் இயற்கை எழிலையும், தமிழ்ப் பண்பையும் கலைச்செறிவினையும் கண்டறிந்து கவிதை வடிவாக்கித் தரும் பாரதிதாசனுக்கு...” என்று எழுதிய சொற்கள் மதிப்பு வாய்ந்தவை; பொருள் பொதிந்தவை. எவ்வளவு நாள்கள் உரையாடியிருப்பார்? எவ்வளவு தமிழின் மாண்பினை உணர்ந்திருப்பார்? அத்தகைய புரட்சிக் கவிஞர் மறைந்தபோது அண்ணா, இந்தி எதிர்ப்புப்போர் காரணமாகச் சிறையில் இருந்தார். அங்கு அவர் அடைக்கப்பெற்றிருந்த அறையில் யாரோ ஒருவர் எழுதிவைத்த ‘சுவர் இலக்கியம்’ ஒன்றினைக் குறிப்பிடுகிறார். அக்குறிப்பு யாதெனின்,

***“மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை – எமை***
***மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!”***

– என்பதாகும்.

திராவிட நாடு இதழ் எப்படிப்பட்ட இதழ்? அதன் ஆசிரியர் பேரறிஞர் அண்ணா எத்தகைய எழுத்தாளர்? இவ்வினாக்களுக்கு விடை காண, திராவிட இதழ் ஒன்றில் அதன் ஆசிரியர் வழங்கிய கருத்துரை துணை செய்யக்கூடியதாக அமைந்துள்ளது. அக்கருத்துரை வருமாறு:

எழுத்தாளர்களின் எண்ணிக்கை பெருகினால் போதாது. அவர்களுடைய கருத்துக்கள் மக்களிடையே மனமாற்றத்தை உண்டாக்க வேண்டும் என்ற ஆவல் அவருடைய இதழ் நோக்கத்தைப் பறைசாற்றுகிறது.

‘திராவிட நாடு’ இதழின் எல்லாப் பக்கங்களையும் வாரந்தோறும் அண்ணாவே எழுதி நிரப்பினார். ஓர் இதழில் பல்வேறு ஆசிரியர்கள் செய்ய வேண்டிய வேலைகளை அவர் ஒருவரே செய்தார். அரசியல் விமர்சனங்கள் எழுதினார்; கேலிச்சித்திரங்கள் தீட்டினார்; ஓரங்க நாடகங்களை உருவாக்கினார்; சிறுகதைகள் எழுதினார்; தொடர்கதைகள் தீட்டினார்; கவிதைகளைக் கூட அவர் விட்டுவைக்கவில்லை. திராவிடர் கழகத்தை விட்டு விலகி, 1949இல் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த வரை, முழுப்பத்திரிக்கையிலும் அவரே எழுதி நிரப்பினார் என, ப.புகழேந்தி குறிப்பிடுவது முற்றிலும் உண்மையாகும்.

இதழ் நடத்துவது குறித்து மாற்றார் பேசிய குற்றங்களை எடுத்துக்காட்டி, அண்ணா ‘திராவிட நாடு’ இதழில் (21.7.1957) எழுதுவதாவது:

“அலைந்து திரிந்துவரும் இவன் ஒரு இதழ் நடத்த வல்லனா, என்ற எளனக்குரல் எழுப்பியோர் எத்துணைப் பேர்? – இவன் எம்.ஏ. படித்தால் போதுமா, தமிழ் இலக்கண இலக்கியம் அறிவானோ! என்று எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசியோர் எவ்வளவு பேர்? ஈராறு திங்கள் நடமாடி, பிறகு ஈனை கட்டி இருமி, இருக்குமிடம் தெரியாது போகும் என்று சாபமளித்தோரும் உண்டே! எதுகை மோனை போதுமா? எண்ணத்திலே ஒரு புதுமை, எழுதுவதிலே ஒரு தெளிவு இருத்தல் வேண்டாமா? – அஃது இவன் பெறுதல் ஆகுமோ? என்று தலை அசைத்துப் பேசினோரின் தொகை மட்டும் சிறிதா?”

–இக்குறிப்பு எவ்வளவோ வினாக்களுக்கு விடையாகி நிற்கிறது. இக்குறிப்பு ஒன்றே போதும் அவர் இதழ் நடத்திய ஆற்றலைத் தெளிவுபடுத்துவதற்கு.

அண்ணா ஆற்றிய பிற பணிகளைவிட இதழ்ப்பணி சிறந்து விளங்குவதற்குக் காரணம், அவருக்கு எல்லாத் திறங்களும் இதழ்களில் ஒரு சேர நின்று நிலவியதேயாகும். திராவிட நாடு இதழ்களில் அவர் வடிவமைத்தெழுதிய இலக்கிய வடிவங்களுள் சிறந்த வடிவமாக விளங்குவது எது?

ஒவ்வொரு வடிவமும் சிறந்து விளங்குகின்றது என்றே கூறவேண்டும். அந்திக் கலம்பகம், ஊரார் உரையாடல், கேட்டீரா செய்தி? – முதலானவை இன்றைக்கும் சில பெரிய வார இதழ்களில் வெவ்வேறு பெயர்களில் எழுதப்பெற்று வருகின்றன.

ஆனந்த விகடன்... ‘அனு... அக்கா...ஆன்ட்டி’’ என்ற தலைப்பிலும் – குமுதம் ‘செல்ஃபோன்’ என்ற தலைப்பிலும் எழுதிவருவதும் அவற்றை வாசகர்கள் விரும்பிப் படிப்பதும் கருத்தில் கொள்ளத்தக்கவை.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் அண்ணா வடிவமைத்துக் கொடுத்த உத்தி இன்றைய இதழாளர்களுக்குக் காசு சேர்க்கவும் உதவுகின்றது. அண்ணா விரும்பியது போல மறுமலர்ச்சிக்காக எழுதக்கூடிய ‘நிலை எழுத்தாளர்கள்’ தமிழகத்தில் இல்லையே என்ற ஏக்கத்தை ஏற்படுத்துகின்றது.

பெரும்பாலும் மக்களிடையே நிலவி வந்த மூடநம்பிக்கைகளை எடுத்துக்காட்டி, மக்கள் அவற்றைக் களைந்து பகுத்தறிவு வழி நிற்கவேண்டும் என்ற முயற்சியில்

நல்லறிவாளர்களின் கருத்துரைகளையும், நல்லுரைகளையும் நாட்டின் சாமனியர்களின் – ஏழை எளியவர்களின் – பாமர மக்களின் கருத்தோட்டத்தையொட்டிச் சிறிது விமர்சனம் செய்ய முற்படுவது நல்லதும் – நாட்டிற்கு நன்மை பயப்பதுமாகும் என்றே நம்புகின்றேன்.

**– அறிஞர் அண்ணா**

எழுதப்பட்டவைகளே மிகுதியாக உள்ளன. கடவுள் பெயரால் நிகழும் அநீதிகள், புராணங்களின் வழி அறிவை அடகுவைத்து வாழும் அவல நிலைகள், அவற்றுக்குக் காரணமாக விளங்கும் சமய நூல்கள் ஆகியவற்றைக் கண்டித்து எழுதிய பகுதிகள் ஏராளம். அறிவியல் கண்ணோட்டம் மக்களிடையே பரவ வேண்டும் என்றும், உழைத்துப் பிழைக்க வேண்டும் என்றும், கூடி வாழ்தல் வேண்டும் என்றும் எழுதுவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு கட்டுரைகள் விமர்சனங்கள் முதலானவை எழுதப்பெற்றன. 'தீ பரவட்டும்' என்ற தலைப்பில் எழுதியவை தனி நூலாக வெளிவந்துள்ளது. 'ஆரிய மாயை' எழுதியதற்காக அரசாங்கம் அண்ணாவுக்குச் சிறைத்தண்டனை வழங்கியது.

'திராவிட நாடு' இதழில் அண்ணா தீட்டிய நாடகங்கள் புகழ் வாய்ந்தவை. 'சந்திரோதயம்' என்னும் புகழ் பெற்ற நாடகத்தை எழுதி தாமே பங்கேற்று நடத்திய அனுபவம் அவருக்குண்டு. இன்னும் சொல்லப்போனால் அவருக்கிருந்த நாடகப்பித்து வேறு எந்தத் தலைவருக்கும் இந்த அளவிற்கு இருந்திருக்குமா என்பது ஐயத்திற்குரியதாகும். உரையாடல், கதைகளின் இடையே, உள்நாடகங்கள், இராச்சிய சபை பேச்சுக்கள் முதலானவை நாடக வடிவில் இடம் பெற்றிருக்கின்றன. குறும் புதினங்களும், புதினங்களும், சிறுகதைகளும், ஏராளமாக எழுதி 'திராவிட நாடு' இதழில் அண்ணா வெளியிட்டுள்ளார். இவை தவிர பயணக்குறிப்புகள், துணுக்குகள் கருத்தளிக்கும் கதைகள், கவிதைகள் முதலானவை, அவருடைய படைப்பாற்றலைப் புலப்படுத்துவனவாக உள்ளன. இவ்வாறான வடிவங்களில் எல்லாம் அவர் எழுதிய போதிலும் அவருக்கு மிக விருப்பமான வடிவம் மடல் வடிவமேயாகும். அவர் தனி நிலையில் மடல் எழுதி அஞ்சல் செய்யும் வழக்கம் மிகுதியாக இல்லாதவர். கிழமைதோறும் அவருடைய மடல் தாங்கிய 'திராவிட நாடு' இதழ்கள் அவருடைய தம்பியர்களை நோக்கி அஞ்சலில் சென்று சேர்ந்தன. எதிர்பார்த்துக் காத்துக்கிடந்து, வந்ததும் வாங்கிப் படித்தவர் ஆயிரக்கணக்கானோர். அவர் தம் இயக்கம் அரசியல் கட்சியாக மாறிப் பொதுத்தேர்தலில் ஈடுபட்ட சூழலில் கடிதங்கள் வெளியாயின. ஆதலால் அவற்றின் முக்கியத்துவம் மிகுதியாயிற்று.

எந்தப் பிரச்சினை பற்றி எழுத நினைத்தாலும், அவருக்குக் கை கொடுத்து உதவியது மடல் வடிவமாகும். ஒவ்வொரு தம்பிக்கும் கட்சித் தொண்டருக்கும் தனித்தனியே எழுதிக்கொண்டிருக்க முடியாது. ஆகையால் நேர் நின்று உரைக்கும் கடித முறையைத் தேர்ந்தெடுத்து திராவிட நாடு இதழில் எழுதுவாராயினார். மடல்களின் நோக்கம் அன்றாட அரசியலை விவாதிப்பதாகும். கடிதங்களில் இடம் பெறும் அரசியல் அவர் கை வண்ணம் பட்டு இலக்கிய மெருகு பெறுவதைக் காண முடிகின்றது. கடிதத் தலைப்புகள் ஒவ்வொன்றும் அவருடைய மொழி ஆளுமையை வெளிப்படுத்துகின்றன. கடிதங்களில் இடையே கட்டுரை, மொழிபெயர்ப்பு, நாட்குறிப்பு, நெடுங்கதை, சிறுகதை, நாடகம், துணுக்கு, ஒரேவழி கவிதை ஆகிய வடிவங்களிலும் எழுதுவது அவருக்கேயுரிய தனித்தன்மையைக் காட்டுகின்றது. ''எல்லோரும் இந்நாட்டு மன்னர்'' என்ற



*3,500 ஆண்டுகளாக வளர்த்துப் பாதுகாக்கப்பட்டு வரும் பழமை மிக்க ஏகாம்பரநாதர் கோயில் மாமரம்*

தலைப்பில் எழுதிய தொடர்மலர்கள் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தி.மு.க.வில் இருந்து சம்பத் பிரிந்து செல்கின்ற காலகட்டத்தில் எழுதப்பெற்றதால் மிகவும் சூடும் சுவையும் கொண்டதும், திருப்புமுனையை ஏற்படுத்தியதும் ஆகும். தம்பியரை உண்மையுணரச் செய்தன. அண்ணாவுக்கு இருந்து வந்த ஆதரவு குறையவில்லை. மாறாகப் பெருகியது.

அண்ணாவின் அரசியல் வெற்றிக்கு இன்றியமையாத காரணம் அவருடைய மடல்களேயாகும். ''பல மாநாடுகளைவிட, செல்வாக்குள்ள வார இதழ் ஒன்று வல்லமையான வேலை செய்கின்றது என்று கூறவேண்டும். பல கட்டை வண்டிகளைவிட லாரி ஒன்று மிகுதியான வேலை செய்ய முடியும் அல்லவா? — என டாக்டர் மு.வ.கூறியது அண்ணாவிற்கு முற்றிலும் ஏற்புடையது. அண்ணா காட்டிய திசையில் தமிழகம் இன்றும் இயங்கிக்கொண்டிருக்கின்றது. இவ்வெற்றி அண்ணாவின் கடித இலக்கிய வெற்றியேயாகும்.

ஆகஸ்டு பதினைந்து; அக்கிரகாரத்தின் அதிசய மனிதர், வ.ரா., வாழ்க வசவாளர்கள்; கோடு உயர்ந்தது, குன்றம் தாழ்ந்தது — முதலான தலைப்புகளில் எழுதிய கட்டுரைகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. பிற்காலங்களில் இக்கட்டுரைகளை நினைவுகூரும் வகையில் மாட்டுச்செய்து எழுதியவை சுவைமிக்க பகுதிகள். வாசகர்களைக் குழப்பங்களிலிருந்து விடுவித்து, தெளிவு உண்டாக்கி அண்ணாவின் அரசியல் தலைமைத் திறத்தை அவை மேம்படுத்தின.


*அடுத்த இதழில் முடியும்*

**ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி—மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடுஅரசு.**
**சென்னை — தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.**
**தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை — 600 002. தொலைபேசி : 568926, 568927, 564906**



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



